CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MO

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
ஸ்ரீ மீனாக்ஷி சொக்கலிங்கம் துணை

சைவமும் தமிழும் தழைத்தினிது ஓங்குக

சைவக் கிரியா விதிகள்

ஆசிரியர் :
"சைவ சித்தாந்த சரபம்"
வயிநாகரம் — பாலகவி
சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்கள்
தேவகோட்டை

வெளியீடு :
சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்
தமிழகச் சைவ நெறிக் கழகம்
1986

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மீனாக்ஷி சொக்கலிங்கம் துணை

சைவமும் தமிழும் தழைத்தினிது ஓங்குக

சைவக் கிரியா விதிகள்

ஆசிரியர் :
"சைவ சித்தாந்த சரபம்"
வயிநாகரம் – பாலகவி
சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்கள்
தேவகோட்டை

வெளியீடு :

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்
தமிழகச் சைவ நெறிக் கழகம்

1986

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

முதற் பதிப்பு - 1986
நூல் வெளியீட்டு நாள் - 27—12—86 / 1000 பிரதிகள்
பதிப்புரிமை ஆசிரியருக்குரியது

செயலகம்:
பாலருவாயர் நிலையம்
5, சம்பந்தர் தெரு,
தேவகோட்டை - 630 302.

ஆசிரியர் :
"சைவ சித்தாந்த சரபம்"
வயிநாகரம் – பாலகவி
சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்கள்
பாலருவாயர் நிலையம்
சம்பந்தர் தெரு,
தேவகோட்டை - 623 302.

விலை [illegible]

வெளியீடு :
சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் தமிழகச்
சைவ நெறிக் கழகம்
செயலகம்: 50, வீரமாநகரம்
தாராநல்லூர், திருச்சி-620 008.

அச்சகம் :
கலைமணி பிரஸ்,
3, வெ. ஊருணி வடக்கு,
தேவகோட்டை - 623 302.

குறிப்பு :- ஆசிரியர், பதிப்பாளர்களது எழுத்து மூலமான முன் அனுமதியின்றி, இந் நூலையோ அல்லது எந்தப் பகுதியையுமோ, யாரும் பிரசுரிக்கக் கூடாது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

பதிப்புரை

சைவத்தின் மேற்சமயம் வேறில்லை என்பதும், அதிற்சார் சிவமாம் தெய்வத்தின் மேல்தெய்வம் இல்லை என்பதும், வேத சிவாகமங்களில் கண்ட முடிவுகளாகும். இவ்வுண்மையைத் தெளிந்து வாழ்க்கையில் சைவ நெறியைக் கடைப்பிடிப்ப தற்குப் பல பிறப்புக்களில் தவஞ்செய்திருக்க வேண்டும். புல், பூண்டு முதலிய ஓரறிவுடைய பிராணிகளிலிருந்து உயர்ந்து மனிதப் பிறப்பை அடைந்தவர்களும் புறச் சமய நெறிகளில் பல காலம் உழன்ற பிறகே, அப்பிறப்புக்களில் அபுத்தி பூர்வ மாகச் செய்த புண்ணியத்தால் சைவ மரபில் பிறக்கும் பேற்றைப் பெறுவார்கள். அங்ஙனம் அரிதில் கிடைத்த சைவப் பிறப்பைப் புற மதச் சூழல்களுக்கு உட்படுத்தி உண்மைப் பயனைப் பெறுமல் பலர் காலங்கழித்து வருகிறுர்கள்.

சைவர்களுக்கு உரிய கிரியைகளையும், அவற்றைச் செய்ய வேண்டிய நெறி முறைகளையும், வேதசிவாகமங்களைப் பிரமாணமாகக் கொண்டு, சைவச் சான்றேர்கள் பத்ததி நூல்களை எழுதி, நமக்குப் பேருதவி செய்திருக்கிறுர்கள். அந் நூல்கள் அனைத்தும் வடமொழியில் அமைந்திருப்பதால், வட மொழி கற்போர் அருகி இருக்கும் இந்நாளில் இன்றியமையாத சைவக் கிரியைகளின் செயல் முறைகளை உரிய மந்திரங் களுடன் தமிழில் எழுதி வெளியிட வேண்டுமென்று நம் கழக அன்பர்கள் விரும்பினுர்கள். இந்த அரிய பணியை இப்போது செய்வதற்கு, நம் தமிழகத்தில் விரல் விட்டு எண்ணத்தக்க அளவில் ஒரு சிலரே இருக்கிறுர்களென்பது எவரும் அறிந்த தாகும். நாங்கள் செய்த தவப்பேற்ருல், அத்தகைய சிலருள் ஒருவராகிய "சைவசித்தாந்த சரபம்" சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்கள் எங்களுக்கு ஞானசிரியராக அமைந்து, தீட்சைகள் செய்து வைத்து ஆட்கொள்வதுடன், சாத்திர உபதேசம் செய்தும், சமய நூல்களை எழுதியும், இன்னும் பல வகைகளில் உதவியும் பொதுவாகச் சைவ உலகத்துக்கு – சிறப்பாக எங்க ளுக்குப் பேருதவி செய்து வருகிறுர்கள். இவர்கள் எழுதி உதவிய "சிவபூஜா விதியும் விளக்கங்களும், சைவாநுட்டான

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

விதியும் விளக்கங்களும்'' ஆதிய சில நூல்களை நம் கழகம் முன்பு வெளியிட்டிருக்கிறது.

அந்த வரிசையில் இப்போது எங்கள் குருமூர்த்திகள் எழுதியருளிய "சைவக் கிரியா விதிகள்'' என்னும் இந்த நூலை, அவர்களது 73 – வது நாண் மங்கல விழாவும், நம் கழகத்தின் 8 – வது மாநிலச் சிவ பூஜை மாநாடும் நடைபெறுகின்ற இன்று, நம் சமய குரவரில் ஒருவராகிய ஸ்ரீ மணிவாசகப் பெருமான் ஞானோபதேசம் பெற்ற திருப்பெருந்துறைத் திருத் தலத்தில் வெளியிடத் திருவருள் பாலித்திருக்கிறது இதுபற்றி எங்கள் கழகம் மிகவும் பெருமைப்படுகிறது. இதனை எங்கள் வேண்டுகோளுக்கு இயைந்து எழுதியருளிய எங்கள் குரு நாதர் ஐயா அவர்களுக்கு மனமொழி மெய்களாலாகிய வணக் கத்தைச் செலுத்திக் கொள்ளுகின்றோம்.

இந்த நூல் எழுதுவதற்கு எங்கள் குருநாதருடன் இருந்து எழுத்துப் பணி முதலியவற்றில் உதவி செய்த எங்கள் குருநாதரின் மகள் வழிப் பேரன், "தத்புருஷ தேவநாம'' அழகு. சிற்சபேசன் அவர்களுக்கும், இந்நூலை நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த கலைமணி அச்சக உரிமையாளர் ஜகந்நாதன் அவர்களுக்கும், திருவருளாலும், குருவருளாலும் எல்லா நலங் களும் உண்டாக வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

சைவ உலகம் இதனை வாங்கிப் பயன் அடைவதாக.

அன்புள்ள,

"சிவநெறிப் புரவலர்''		"சிவநெறிக் காவலர்''
ப. முக்கப் பிள்ளை		**ப. சுப்பிரமணிய பிள்ளை**
தலைவர்	27—12—86	செயலாளர்

கழக உறுப்பினர்கள்

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் தமிழகச் சைவநெறிக் கழகம்

~~செயலகம்: 50, வீரமாநகர், தாராநல்லூர், திருச்சி - 8~~

செயலகம்: —
பாலநா... நிலையம்
5, ச... ர் தெரு,
தேவகோட்டை - 630 302.

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

உ
சிவமயம்
பாலரூவாயர் துணை.

"சைவ சித்தாந்த சரபம்"

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்கள்

சைவத் திருமுறைகள் சாத்திரங்கள் கற்றுணர்ந்து
வையத்துப் பக்குவர்தம் வாழ்வோங்க – உய்தி
தருதீக்கை செய்தாளும் தத்புருஷ ஞான
குருபாதம் நெஞ்சே குறி.

— "சைவப் புலவர்"
நடேச பிள்ளை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

உ
சிவமயம்
பாலருவாயர் துணை

முன்னுரை

"சைவ சித்தாந்த சரபம்"
சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்கள்

உயிர்களிடத்துப் பெருங்கருணை கொண்டு அவற்றின் துன்பங்களை நீக்கி இன்பப் பேற்றில் திளைக்க வைப்பதற்காகச் சிவபெருமான் முதற்படைப்புக் காலத்திலேயே வேதசிவாகமம் முதலிய சொற்கூற்றுப் பிரபஞ்சத்தையும், தநு கரணபுவந போகமாகிய பொருட் கூற்றுப் பிரபஞ்சத்தையும் படைத்து உதவினார். அவரது உதவியால் கிடைத்த பொருட் கூற்றுப் பிரபஞ்சம் எல்லா உயிர்களுக்கும் வாழ்வுத் துணையாய் அமைந் திருக்கின்றது. சொற் கூற்றுப் பிரபஞ்சமோ அங்ஙனம் எல்லா உயிர்களுக்கும் பொதுவாகப் பயன்படுவதாகி, மக்கள், தேவர், நரகர் முதலிய உயர்திணையாளர்களுக்கு மட்டும் சிறப்பாகப் பயன்படுவதாய் இருக்கின்றது.

சிவபெருமானது பேருதவியால் கிடைத்துள்ள இவ் விருவகைப் பிரபஞ்ச நலங்களையும் இடையீடின்றி அநுபவித்து வருகின்ற மக்களிற் பெரும்பாலோர், இந்நலங்கள் இறைவனது உதவியால் பெறுபவை என்பதைச் சிறிதும் சிந்திக்காமல் அறியாமையில் ஆழ்ந்து கிடக்கின்றனர் அண்ட பேரண்டங்கள் அனைத்தையும் படைத்து. அவற்றில் உயிர்களைத் தொடர்பு படுத்தி, உரிய காலம் வரை வாழ வைத்துப் பின்னர் ஒடுக்குகின்ற சிவபெருமானது முத்தொழில் வல்லமையையும், போக போக்கியங்களில் உயிர்களை அழுத்திப் பின்னர் முத்திப் பேற்றை நல்கும் அவரது மறைத்தல், அருளல் வல்லமையையும், தக்க ஞானசிரியரிடம் அருள் நூல்களைப் பாடங்கேட்டு, அதன் வாயிலாகத் தெளிவு செய்து கொள்ளுதல் வேண்டும். அங்ஙனம் ஞான நூல் தெளிவுடையார் நாளா வட்டத்தில் எண்ணிக்கையில் குறைந்து வருவது வருந்துதற்குரியது.

உயிர்கள் வாழ்வதற்குப் பொருள்களைப் படைத்துத் தந்த சிவபெருமான், எப்படி வாழ வேண்டுமென்பதை அறிந்து கொள்ளவே வேதசிவாகமங்களைத் தக்க ஞானசிரியர்களுக்கு

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

உணர்த்தி, அவர்கள் வாயிலாக நமக்குக் கிடைக்கும்படி செய்தருளினர். வாழ்க்கையில் நல்லது செய்வதைப் புண்ணிய மென்றும், தீயது செய்வதைப் பாவமென்றும் எல்லோரும் சொல்லுவர். என்றாலும், நல்லது எது? தீயது எது? என்பதில் கருத்து வேறுபாடுகள் தொன்று தொட்டே இருந்து வரு கின்றன. இவ்வேறுபாட்டுக்குக் காரணம், முதல் நூல்களைக் கற்று, அவற்றைப் பிரமாணமாகக் கொள்ளாமல், அவரவர் மனம்போன போக்கில் கருத்துக்களை வெளிப்படுத்தியதே யாகும். யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள், புண்ணியம் எது? என்பதற்கு, "வேதசிவாகமங் களில் விதிக்கப் பெற்றது" என்றும் பாவம் எது? என்பதற்கு, "அந்நூல்களில் விலக்கப்பெற்றது" என்றும் விளக்கம் சொல்லு கிறார்கள்.

புண்ணியம் இன்பத்தை வழங்குவது என்பதும், பாவம் துன்பத்தை வழங்குவது என்பதும், எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப் பெறுபவை. இப்புண்ணிய பாவங்கள் செயலாக மட்டும் நிகழுவதில்லை. நினைப்பாலும், பேச்சாலும் கூட இவை கள் வந்து சேரும். இங்ஙனமுள்ள நினைப்பு, பேச்சு, செயல் ஆகியவற்றிற்கு வேண்டிய மனம், மொழி, மெய் என்னும் மூன்றில், மனமும் மொழியும் மனிதப் பிறவிக்கன்றி மற்றைய விலங்கு, பறவை முதலியவற்றிற்கு இல்லை. நல்லனவற்றை நினைத்தலும், பேசுதலும் செய்தலும் புண்ணியம் என்றும். தீயனவற்றை நினைத்தலும், பேசுதலும், செய்தலும் பாவம் என்றும் அறுதியிட்டு எடுத்துக் கூறுவது சைவ நூல்களின் தனிச் சிறப்பு. அதனுடன் நல்லனவற்றையும் தீயனவற்றையும் வரம்பு படுத்தித் தெளிவு செய்கின்ற பெருஞ்சிறப்பும் சைவ நூல்களுக்கு மட்டும்தான் உண்டு

மனித வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்பு வரை ஒருவர் செய்ய வேண்டிய – செய்வித்துக் கொள்ள வேண்டிய பூர்வக் கிரியைகளையும், இறந்த பிறகு இறந்தவரைக் குறித்துச் செய்ய வேண்டிய அபரக் கிரியைகளையும், முறைப்படியும் மந்திர பூர்வமாகவும் கைக்கொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். அங்ஙனம் செய்யும் முறைகள் இங்கு நிலவி வருகின்ற பலவேறு வகைப்பட்ட சமயங்களிலும் அவ

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

ரவர்களுடைய தகுதிகளுக்கேற்ப வெவ்வேறு வகைகளில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அவையனைத்தும் மக்களினத்திற் பிறந்து அவர்களில் சிறந்தவர்களாக அவர்களால் கருதப்பெற்றவர்கள் அமைத்துக் கொடுத்தவை. சைவர்களாகிய நமக்கு மனிதர்கள் அமைத்துக் கொடுத்த கிரியை முறைகள் ஒன்றுமில்லை நமது கிரியைகள் அனைத்தும் கருணைக் கடலாகிய சிவபெருமான், நம்மீது கொண்ட இரக்கத்தால், நமது உய்தி கருதி அருளித்தந்தவை சிவபெருமான் அருளிச் செய்த வேதம்; கன்மகாண்டம் ஞானகாண்டம் என இரு பிரிவினதாயிருந்து அதில் செயல் முறைகளை வரம்பு படுத்திக் கூறும் கன்ம காண்டத்தை முற்படக் கொண்டிருக்கும். அவரருளிச் செய்த சிவாகமம்; சரியா பாதம், கிரியா பாதம், யோக பாதம், ஞான பாதம் என நான்கு பிரிவினதாயிருந்து, அதில் புறச் செயல் முறைகளை வரம்பு படுத்திக் கூறும் சரியா பாதம் முற்படவும், புற அகச் செயல் முறைகளை வரம்பு படுத்திக் கூறும் கிரியா பாதம் அதனையடுத்தும், அகச் செயல் முறைகளை வரம்பு படுத்திக் கூறும் யோக பாதம் அதனை யடுத்தும் அமைந்திருக்கும்.

சிவாகம நெறியில் அமைந்த சமயச் சடங்கு விதிமுறைகளை, அவ்வாகம உணர்ச்சி பெரிதும் கைவரப் பெற்ற நல்லாசிரியன்மார் எழுதியுதவிய நூல்கள் "பத்ததிகள்" என்று வழங்கப் பெறுகின்றன. பத்ததி ஆசிரியர்கள் துர்வாசர், பிங்கலர், உக்ரஜோதி, சுபோதர், ஸ்ரீ கண்டர், இராம கண்டர், விஷ்ணு கண்டர், வித்யா கண்டர், ஞானசிவர், ஞான சங்கரர், சோமசம்பு, பிரம சம்பு, திரிலோசன சிவர், அகோர சிவர், பிராசாத சிவர், இராமநாத சிவர், ஈசான சிவர், வருண சிவர் ஆகிய பதினெண்மரும் ஆவர். இவர்களில் அகோர சிவர் எழுதிய பத்ததிகளே மிக விரிவானவையாகவும், விளக்கமானவையாகவும் உள்ளன.

சிவாகம நெறிமுறையில் எந்தக் கிரியைகளைச் செய்வதாயினும், அவற்றைச் செய்து வைப்பவர்கள், சைவ பத்ததிகளின் விதிகளைத் தெரிந்து கொண்டு மட்டும் செய்ய முற்படுவது ஒரு சிறிதும் பொருந்தாததாகும். சைவ பத்ததிகளின் விதிமுறை சிவாகம அடிப்படையில் அமைந்ததாதலின்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

அதனைச் செய்து வைக்கும் ஆசாரியரும் அச் சிவாகம அடிப் படையில் அமைந்த சமயம், விசேடம், நிருவாணம் ஆகிய தீட்சைகளையும், ஆசாரிய அபிஷேகத்தையும் பெற்றவராய், நான்கு வேளைச் சைவாநுட்டானம். ஆன்மார்த்த பூஜை, நித்தியாக்கினி காரியம் முதலியவற்றில் வழுவாது நிற்பவராய்த் திருமணம் ஆகி, மனைவியுடன் வாழ்பவராய் இருத்தல் வேண்டும். மேற்கண்ட தகுதியுடைய நிறைமொழி மாந்த ராகிய ஆசாரியர்களது ஒவ்வொரு சொல்லும் மந்திரமாக நின்று பயன் தருவதென்று ஞான நூல்கள் கூறும். பிரமசாரியாகவோ, மனைவியை இழந்தவராகவோ துறவியாகவோ இருப்பவர்கள், பரார்த்தங்களில் ஆசாரியராயிருத்ததற்கு அருகரல்லர். இஃது இங்ஙனமாக, இன்னுமொரு தகாத செயல் நம் நாட்டில் இடைக்காலத்தில் புகுந்து சைவ மக்களை அலக்கழித்துக் கொண்டிருக்கிறது சைவர்களல்லாத ஏகான்ம வாதிகளும் மங்கலம் என்னும் பொருளையும் உடைய சிவ சப்தத்தை உச்ச ரிப்பதில் கூட வெறுப்பைக் கொண்ட வைணவ மதவாதிகளும் சைவர்களுக்குக் கிரியைகள் செய்து வைக்கும் புரோகிதர் களாகிச் சைவர்களுக்குரிய சிவ சின்னமாகிய திருநீறு கொடுக்க அவர்களுக்கு உரிமை இல்லாமையால், அட்சதை மட்டும் கொடுத்து ஆசீர்வதிக்கின்ற கேட்டைச் செய்து நாட்டைக் கெடுத்து வருகின்றூர்கள். இத்தகைய குழப்பங்கள் சைவர் களிடையே இருந்து நீங்குவதற்குத் திருவருள் தான் துணை செய்ய வேண்டும் தகுதியில்லாதவர்களை ஆசாரியர்களாக வைத்துக் கிரியைகளைச் செய்து வரும் ஒரு சிலர், ''அதனுல் வரும் குறைபாடுகளுக்கு உரிய தண்டனையைச் செய்யும் ஆசா ரியர் பெறுவார் எங்களுக்கு அக்குறைபாட்டிற்குரிய பயன் வராது'' என்று சொல்லித் தப்பப் பார்க்கின்றனர். ஆசாரி யரைத் தேர்ந்து கொள்ளாத குறையும், கிரியைகளை முறை யாகச் செய்யாத குறையும், பொருள் இழப்பு – கால இழப்பு முதலிய குறைகளும் செய்வித்தவர்களைத் தான் சேரும் என்பதை அவர்கள் உணருவது நல்லது.

நம் பாரத நாட்டில் வேத உடன்பாடுடைய சமயிகள். தங்கள் பூர்வ – அபரக் கிரியைகளில் தொன்று தொட்டுக் கடைப்பிடித்து வந்த முறைகள் மூன்று அடிப்படைகளில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

உள்ளன, அவை; வேதத்தைப் பிரமாணமாகக் கொண்டதும், சிவாகமத்தைப் பிரமாணமாகக் கொண்டதும், புராணத்தைப் பிரமாணமாகக் கொண்டதும் ஆம். வேதக் கிரியைகள், விதிப் படி உபநயனம் பெற்றுச் சைவ நெறியில் தலைப்படாது வைதிக நெறியில் மட்டும் வழுவாதிருக்கும் அந்தணர்களுக்குரியது. சிவாகமக் கிரியைகள், விதிப்படி சிவதீட்சை பெற்றுச் சைவா நுட்டானம் முதலியவற்றில் வழுவாதிருக்கும் சைவர்களுக் குரியது. புராணக் கிரியைகள், இவை இரண்டு சம்ஸ்காரங் களுமில்லாமல் மனித உடம்போடு மட்டும் வாழுகின்ற நல்லொ ழுக்கமுடையவர்களுக்கு உரியது. இம்மூன்று வகையிலும் சேராத மக்களினத்தவர், உடல்பால் மனிதராகக் காணப்பட் டாலும், செயல் முதலியவற்றால் விலங்கு, பறவை ஆகியவற் றோடு ஒப்பானவர் ஆதலால் அவர்களுக்கு விலங்கு, பறவை களுக்குப் போல எவ்வித சம்ஸ்காரங்களும் செய்ய வேண்டு வதில்லை. வேத நெறி, ஆகம நெறி, புராண நெறி ஆகிய மூவகை நெறிகளில், பக்குவா பக்குவர்களுக்குரிய வேதநெறி-அபக்குவர்களுக்குரிய புராண நெறி ஆகிய இரண்டையும் விடப் பக்குவர்களுக்குரிய ஆகம நெறியே உயர்ந்ததாகும்

இக்காலத்தில் கிரியைகளை எப்படி வேண்டுமானாலும் செய்யலாமென்று ஒவ்வொருவரும் மனம்போன போக்கில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் மதச் சடங்குகள் வேண்டு வதில்லையென்றும், அதனைச் செய்பவர்கள் பொருள் ஈட்டும் குறிப்பிலேயே செய்கிறார்களென்றும் பறைசாற்றி, சீர்திருத்த மாகச் செயல்களைச் செய்கிறோம் என்று மதச்சடங்குகளைப் புறக் கணித்துப் புகைப்படமெடுத்தல் முதலிய பொருளற்ற சடங்கு களுடன் நூற்றுக்கணக்கான தொகையை வாங்கிக் கொண்டு அப்பாவி மக்களை ஏமாற்றுகிறவர்கள் மலிந்து விட்டார்கள். இதில் மந்திரங்களின் தோற்ற அடிப்படையை ஒரு சிறிதும் அறியாமல் வடமொழி வெறுப்பும் இடம் பெற்றிருப்பது அப் பாவித் தமிழர்களுக்கு ஊன்றுகோலாகவும் ஆகிவிட்டது வலு வற்ற இவ்வூன்றுகோல், நடை முறைக்குத் துணை செய்யாமல், நம் தமிழ் நாட்டில் பலரைப் படுகுழியில் ஆழ்த்திக் கொண்டி ருக்கிறது காணப்படுகிற எந்தப் பருப்பொருளும், நுண் பொருளிலிருந்து தான் தோன்றும் என்பது நியதி. இதனை இன்றைய விஞ்ஞானமும் ஏற்றுக் கொள்ளும். மக்கள் பேசுகிற

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

எல்லா மொழிகளும் ஒலி வடிவத்தில் அமைந்தவை. முதலில் தோன்றிய அவ்வொலி வடிவமே, பின்னர் வரிவடித்தை அடைந்தது. மொழிகளுக்கு மூலமாகிய ஒலி, முதற்கண் நுண்மையாக இறைவனிடத்திலிருந்து தோன்றிப் பின்னர் வளர்ந்து பருமையான வரிவடித்தை அடைந்து, சொல்லாகவும், சொற்றொடர்களாகவும் ஆனது என்பது, தத்துவத் தோற்றங்களை அறிந்த சான்றோர்களுக்குத் தெரியும். அந்த முறையில் மக்களாற் பேசப்பெறும் மொழிகள் எல்லாவற்றுக்கும் முன்னதாக, நுண்ணிய வடிவத்தில் மந்திரங்கள் தோன்றி, உபதேசக் கிரமத்தில் பருமைநிலை பெற்றுப் பயன் தந்து கொண்டிருக்கின்றன. மந்திரம் என்ற சொல்லுக்கே நினைப்பவர்களைக் காப்பது என்னும் பொருள் உண்டு எல்லா மொழிகளையும் கடந்து இறைவனால் முதற்படைப்புக் காலத்தில் தோற்றுவிக்கப் பெற்ற மந்திரங்களை, எந்த ஒரு மொழிக்கேனும் சொந்தமென்று சொல்லுவது, அறியாமையின்பாற் பட்டதேயாகும். மந்திரங்களின் ஒலிகளை வழுவின்றி உச்சரிப்பதற்கும் எழுதுவதற்கும் வடமொழி எழுத்துக்கள் வாய்ப்புடையனவாய் இருப்பதனாலேயே, அம் மந்திரங்களை வரிவடிவத்தில் எழுதும் போது வடமொழி எழுத்தில் நம் முன்னோர்கள் எழுதி வைத்தார்கள். இவ்வுண்மையைப் பாரத நாட்டு மக்கள் அனைவரும் சிந்தித்துத் தெளிந்து கொள்ளுதல் வேண்டும்.

சொற்கூற்றுப் பிரபஞ்சத்தைப் படைப்பதற்குச் சிவபெருமான் செய்த தொழில், அவரது வலக்கையினால் உடுக்கையை ஒலிக்கச் செய்தது என்று அருள் நூல்கள் கூறுகின்றன. அவ்வொலியிலிருந்து வெளிப்பட்ட மந்திரங்களை அடிப்படையாகக் கொண்டே எல்லா ஓசைகளும் ஒலிகளும் உண்டாயினவாதலின், மந்திரங்கள் ஒலிகளைக் கடந்தவை என்பது உணரத்தக்கதாகும்.

சைவர்களுக்குரிய பூர்வக் கிரியைகளை விவாஹம் வரை பதினாறு என்று அகோர சிவாசாரியர் இயற்றிய ''சைவ ஷோடசப்ரகாசிகை'' என்னும் நூலில் கூறி அவற்றின் விதிகளை அவர் தெளிவு படுத்தியுள்ளார். அக்கிரியைகள் :- 1. ருதுசங்கமனம், 2 கர்ப்பாதானம், 3. பும்சவனம், 4. சீமந்தம், 5 ஜாதகர்மம், 6 கர்ணவேதனமும் உத்தாபனமும், 7. நாமகரணம்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

8. உபநிஷ்க்ரமணம், 9. அன்னப்ராசனம். 10. பிண்டவர்த்தனம், 11 க்ஷௌரகர்மம் 12 உபநயனம், 13. காண்டோபகரணம், 14. காண்டமோசனம், 15. சமாவர்த்தனம், 16. விவாஹம் என்பனவாம்

பூப்படைந்த பெண்ணுக்கு மங்களஸ்நானம் செய்விப்பது ருது சங்கமனம். திருமணமான பின்னர் மணமக்கள் மகப்பேற்றின் பொருட்டுக் கூடுவது கர்ப்பாதானம் கருத்தரித்த பெண்ணுக்கு ஆண்மகப்பேறு அமையும் பொருட்டுச் செய்வது பும்சவனம். கருவில் வளரும் குழந்தை திருத்தமுறுதற் பொருட்டுச் செய்வது சீமந்தம். குழந்தை பிறந்த பிறகு தந்தை குழந்தையைப் பார்த்தலும், நாபிக் கொடி அறுத்து ஸ்நானம் செய்வித்தலும் ஜாதகர்மம். குழந்தைக்குக் காது குத்துதல் கர்ணவேதனமும். குழந்தை பிறந்த ஆசௌச நீக்கத்திற்குச் செய்வது உத்தாபனமும் ஆம். குழந்தைக்குப் பெயர் சூட்டுதல் நாமகரணம் குழந்தைக்குச் சந்திர சூரியர்களையும், பெரியோர்களையும் தெரிசிப்பிப்பது உபநிஷ்க்ரமணம். குழந்தைக்குச் சோறூட்டுதல் அன்னப்ராசனம். குழந்தை நன்ருக வளருவதற்குச் செய்வது பிண்டவர்த்தனம். குழந்தைக்குத் தலைமயிர் களைவது க்ஷௌர கர்மம். குழந்தைக்குத் தீட்சை செய்வித்தல் உபநயனம் ஞானநூல் கற்கத் தொடங்குவது காண்டோபகரணம். அக்கல்வியை நிறைவு செய்வது காண்டமோசனம். பிரமசரிய விரதத்தை முடிப்பது சமாவர்த்தனம். இல்வாழ்க்கையைத் தொடங்குவது விவாஹம். இந்தப் பதினறு கிரியைகளுக்கு மேற்பட்டு ஷஷ்ட்யப்த பூர்த்தி முதலிய மங்கலக் கிரியைகள் சிலவும் உள்ளன.

அபரக் கிரியைகள் : 1. பேரிதாடனம், 2. ப்ரம்மதாளம். 3. தூர்ஜேத்ஸவம். 4 ம்ருதஸ்நானம் 5 ஆஸந்தி, 6. மயானக் கிரியை. 7 மிருதக தீக்ஷை. 8. அந்தியேஷ்டி, 9. தனிஷ்டா பஞ்சகம். 10 துர்மரணப் பிராயச்சித்தம், 11. அஸ்தி சஞ்ஜயனம், 12 பாஷாண ஸ்தாபனம், 13. பாஷாண உத்தாபனம். 14. ருத்ர பலி, 15. ஏகோதிஷ்டம். 16 நவசிரார்த்தம், 17. ஷோடச சிரார்த்தம், 18. சோதகும்பம், 19. சபிண்டிகரணம், 20. வருஷாப்திகம் என்பனவாம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

யம தருமனது வாத்தியம் முதலியவை நன்மையாக அமைவதற்கும், சிவபெருமான் ரக்ஷிப்பதற்கும், செய்யப்படுவது பேரீதாடனம். வாத்தியப் பிரியனுன பிரமனுடைய தாள மாக ஒலிக்கப் பெறுவது. ப்ரம்ம தாளம். பிரேத தேகத்தில் மங்களம் உண்டாகாதற் பொருட்டுச் செய்வது சூர்ணோத்ஸவம். பிரேதத்திற்கு எண்ணெய் முதலியவற்றைப் பூசுவது ம்ருதஸ்நானம். பிரேதத்தை வைக்கும் பாடை ஆஸந்தி. பிரேதத்திற்கு மயானத்தில் செய்வது, மயானக் கிரியை. இறந்தவருக்குச் செய்யும் தீக்ஷைகளில் ஒன்று மிருதக தீக்ஷை இறந்தவர் பெற்ற தீக்ஷைக்கேற்பச் செய்யப்படும் பிராயச்சித்தம் அந்தியேஷ்டி. இறந்த நட்சத்திர தோஷ நிவர்த்திக்காகச் செய்யப்படுவது தனிஷ்டா பஞ்சகம். அகால மரணம் அடைந்தவர்களுக்குச் செய்யப்படுவது துர்மரணப் பிராயச் சித்தம். இறந்தவர்களது தேக அஸ்தியைப் புண்ணிய தீர்த்தத்தில் சேர்ப்பது அஸ்தி சஞ்ஜயனம். இறந்தவர்களின் ஆன்மாவைக் கல்லில் நிறுத்திச் செய்வது பாஷாண ஸ்தாபனம். அக்கல்லிலிருந்து ஆன்மாவைப் பிரிப்பது பாஷாண உத்தாபனம். இறந்தவர் பொருட்டுக் கொடுப்பது ருத்ரபலி. இறந்தவருக்குத் தனித்துச் செய்வன – ஏகோதிஷ்ட, நவ, ஷோடச சிரார்த்தங்கள். சபிண்டீகரணத்தில் முதற்கண் செய்வது சோத கும்பம். இறந்தவரைப் பித்ருக்களுடன் சேர்ப்பது சபிண்டீகரணம். ஆண்டு தோறும், இறந்த திதி நாளில் செய்வது வருஷாப்திகம். இந்த இருபது கிரியைகளுக்கு மேற்பட்டுப் புண்ணிய கால தர்ப்பணம் முதலிய கிரியைகள் சிலவும் உள்ளன.

சைவர்களுக்குரிய பூர்வ - அபரக் கிரியைகள் செய்யும் முறையைத் தமிழில் எழுதி, அச்சிட்டு, வெளியிட வேண்டுமென்று நம கழக அன்பர்கள் விரும்பினர்கள். முன்னர் நாம் எழுதிக் கொடுத்துக் கழக வெளியீடாக வெளி வந்த "சிவபூஜா விதியும் விளக்கங்களும்" என்னும் நூல், சைவ அறிஞருலகத்தில் மிகுந்த ஆர்வத்துடன் வரவேற்கப் பெற்றுப் பயன் தந்து வருவது நமக்குப் பெருமகிழ்ச்சியைத் தருகிறது அது போல, அவர்கள் விருப்பத்தின் படி எழுதிக் கழக வெளியீடாக வெளிவருகின்ற இந்த நூலும், சைவ அறிஞர்களால் பெரிதும் வரவேற்கப்பெற்று ஏற்றுக் கொள்ளப் பெறும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

இந்நூலில் சிவபெருமானுக்குரிய பஞ்சாசன – பஞ்சாவரண மந்திரங்களைச் சமஷ்டியாகக் குறிப்பிட்டிருப்பதால், பிற்சேர்க்கையில் அவற்றின் வியஷ்டியும், அதனோடு பத மந்திரங்களும் தனியே சேர்க்கப் பெற்றுள்ளன. சங்கல்பத்தில் சேர்த்துச் சொல்ல வேண்டிய சம்வத்சரம் முதலியவையும், கிரியைகளுக்கு வேண்டிய பொருள்களின் பட்டியலும் பிற்சேர்க்கைகளாக உள்ளன.

சஷ்டியப்த பூர்த்தி விதியில் கலச மூர்த்திகளுக்குரிய மூல மந்திரங்களை அவ்வம் மூர்த்திகளின் தியானத்தின் இறுதியில் குறிப்பிட்டிருக்கிறோம்.

பத்ததிகளிற் கூறப் பெற்றுள்ள பூர்வ அபரக்கிரியைகள் அனைத்தையும், இந்நாளில் யாரும் மேற்கொள்ளுவதில்லை. அதனால் இவற்றில் இன்றியமையாத கிரியைகளுக்கும், புதுமனை புகுதல் முதலியவற்றிற்கும் இந்த நூலில் விதிமுறை எழுதப்பெற்றிருக்கிறது இதில் முதற்கண் உள்ள அநுக்ஞை, சங்கற்பம், விக்நேசுவர பூஜை, பிராணயாமம், சகளீகரணம், சாமான்யார்க்கியம், புண்ணியாவாசனம், பூதசுத்தி அந்தர்யாகம், தானசுத்தி, விசேடார்க்கியம், திரவிய சுத்தி, ஆத்ம பூசை, மந்திர சுத்தி, சிவஹஸ்தம், லிங்க சுத்தி, பஞ்சகவ்ய சேகரம், தீபலெட்சுமி பூசை, ம்ருத்சங்கிரஹணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம் நாந்திசோபனம், அக்நிகாரியம், நவக்கிரஹ பூசை – ஹோமம் ஆகியவை பூர்வ அபரக் கிரியைகளுள் பெரும்பாலனவற்றில் செய்ய வேண்டியவையாகும்.

வாஸ்து சாந்தி, ம்ருத்சங்கிரஹணம், அங்குரார்ப்பணம் ஆகிய கிரியைகள், வளர்ச்சிக்கு ஏதுவானவை ஆதலின், எல்லா மங்கலக் கிரியைகளின் தொடக்கத்திலும் செய்யவேண்டுமென்று சுப்ரபேதம் முதலிய ஆகமங்கள் சொல்லுகின்றன.

இந்நூலில் மூலமந்திரம் என்று குறித்திருப்பது அவ்வம் மூர்த்திகளின் திருநாமங்களுக்கு முதலில் பிரணவ பீஜங்களும், இறுதியில் நம: என்னும் மந்திரமும் சேர்ந்திருப்பதாகும்.

ஆவாகனம், ஸ்தாபனம், சந்நிதானம், சந்நிரோதனம் என்பன முறையே தெய்வத்தைக் குறிப்பிட்ட திருவுருவத்

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

தில் வெளிப்பட்டு எழுந்தருளும்படி வேண்டுதலும், அப்பொருளிலேயே பூசை முடியும் வரை நின்றருளும்படி வேண்டுதலும், தெய்வத்துக்கும் பூசிக்கின்ற தனக்கும் வழிவகுத்துக் கொள்ளுதலும், அத்தெய்வத்தைச் சிக்கெனப் பிடித்துக் கொள்ளுதலும், ஆகிய குறிப்பில் செய்யப்பெறுவனவாம்.

புரோக்ஷணம், தாடனம், திக்பந்தனம், அவகுண்டனம் என்பன முறையே சுத்திக்காக நீரைத் தெளித்தலும், கைதட்டுதலும், கட்டை விரலில், சுட்டு விரலால் சுண்டிச் சுற்றுதலும், சுட்டு விரலால் வளைத்துச் சுற்றுதலும் ஆம்.

நியாசம் என்பது பதித்தல் என்றும், ஆவரணம் என்பது சுற்று என்றும் பொருள்படுவன.

சிவபெருமான், பிருதிவி தத்துவம் முதல், நாத தத்துவம் வரை உள்ள முப்பத்தாறு தத்துவங்களும் ஒன்றன்மேல் ஒன்றுக அமைந்த ஆசனத்தில், தத்துவங்களுக்கு அப்பாற்பட்டவராக எழுந்தருளியிருப்பார் அந்த முப்பத்தாறு தத்துவங்களும் அநந்தாசனம், சிம்மாசனம், யோகாசனம். பத்மாசனம், விமலாசனம் ஆகிய ஐந்து ஆசனங்களுள் அடங்குவன. அதனல் அவரது ஆசனம் பஞ்சாசனம் என்று சொல்லப்பெறும். ஷடுத்தாசனம் என்பது. அநந்தாசனம், சிம்மாசனம், பத்மாசனமாகிய மூவகை ஆசனங்கள் கொண்டது.

பூர்வக் கிரியைகளில் பவித்திர கூர்ச்சங்களை வலமாகத் திருப்பி சவ்யமாகவும், அபரக் கிரியைகளில் அவற்றை இடமாகத் திருப்பி அபசவ்யமாகவும் முடிச்சிடுதல் வேண்டும். சவ்யப் பூணூல் இடது தோளிலிருந்து வலது விலாவில் தொங்குவதாகவும், அபசவ்யப் பூணூல் வலது தோளிலிருந்து இடது விலாவில் தொங்குவதாகவும் இருப்பது கலசங்களுக்குப் பூர்வக் கிரியைகளில் வலமாகவும். அபரக் கிரியைகளுக்கு இடமாகவும் நூல் சுற்றுதல் வேண்டும். மூன்று இழை கொண்ட நூலின் இடைவெளி எள்ளளவிருப்பது உத்தமமென்றும், நெல்லளவிருப்பது மத்திமம் என்றும், யானைக்கண்ணளவிருப்பது அதமமென்றும் விதிநூல் கூறுகின்றது.

சபிண்டீகரணம், சிரார்த்தம் முதலியவற்றில் பிண்டம், தர்ப்பணம், ஆகியவைகளுக்கு, ருத்ர மூர்த்தியினது, நடுவில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

எட்டிதழ்த் தாமரை உள்ள இரண்டு திருவடிகள் அமைந்த செப்புத் தம்பாளம் வைத்துக் கொள்வது நல்லது.

இந்த நூலை எழுதி முடிக்கத் திருவருள் பாலித்த எம் ஆன்ம நாயகராகிய ஆலவாயண்ணலின் திருவடிகளைச் சிந்தித்து, வாழ்த்தி வணங்குகின்றோம்.

இதை அச்சிட்டு வெளியிடுகின்ற நம் சைவ நெறிக் கழக அன்பர்களுக்குப் பரம கருணாநிதியாகிய சிவபெருமான் திருவருளால் இம்மை மறுமை வளங்கள் அனைத்தும் மென் மேலும் உண்டாவதாக.

நலமே தழைக.

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

உ
சிவமயம்

இந்நூலில் அடங்கியவை

பொது

பக்கம்

1	அநுக்ஞை, 2 சங்கல்பம்	1
3.	விக்நேசுவர பூஜை	3
4.	பிராணாயாமம். 5. சகளீகரணம்	5
6.	சாமான்யார்க்கியம், 7. புண்ணியாவாசனம்	6
8.	பூதசுத்தி – அந்தர்யாகம்	6
9.	தானசுத்தி, 10 விசேடார்க்கியம்	9
11.	திரவிய சுத்தி. 12 ஆத்ம பூஜை. 13 மந்திர சுத்தி	10
14	சிவஹஸ்தம். 15 லிங்கசுத்தி	
16.	பஞ்சகவ்ய சேகரம்	
17	தீபலெட்சுமி பூஜை, 18 ம்ருத்சங்கிரகணம்	12
19.	அங்குரார்ப்பணம்	13
20	ரக்ஷாபந்தனம், 21. நாந்தி சோபனம்	15
22	அக்நிகாரியம்	16
23	நவக்கிரஹ பூஜை, ஹோமம்	17

பூர்வம்

1.	ருதுமங்கள ஸ்நானம்	18
2	சமாவர்த்தனம்	19
3	விவாஹம்	20
4.	கிரஹாரம்பம்	22
5.	கிரஹப்பிரவேசம்	23
6.	புதுக்கணக்கு	24
7	சஷ்டியப்த பூர்த்தி	25
8	அஸ்திராபிஷேகம்	44
9.	சகஸ்ர ஜென்ம நக்ஷத்திர பூர்த்தி	
10	சகஸ்ர சந்திர தரிசன சதாபிஷேகம்,	45

அபரம்

1.	சூர்ணோத்ஸவம்	1
2	பிரேத சம்ஸ்காரம்	6
3	சமய அந்தியேஷ்டி	7
4.	விசேஷ ,,	9
5	நிருவாண ,,	10
6	அஸ்தி சஞ்சயனம் 7 பாஷாண ஸ்தாபனம்	21
8	உத்தாபனம்	22
9	ஏகோதிஷ்டம்	23
10.	சபிண்டீகரணம்	24
11.	மாசிகம்	30
12	சிரார்த்தம், 13 மாளய சிரார்த்தம்	32
14	பிராயச்சித்தங்கள்	33
15.	தர்ப்பணம்	34

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

உ
சிவமயம்
பாலருவாயர் துணை

சைவக் கிரியா விதிகள்

(பூர்வம்)

அநுக்ஞை

ஆசாரியர் வடக்கு நோக்கியிருந்து. கர்த்தா கையில் தேங்காய், பழம், வெற்றிலை பாக்கு, சொர்ண புஷ்பம், வைத்துக்கொள்ளச் செய்து,

"அசேஷே சிவாக³மாதி³ விதா⁴யக ப⁴வத்பாத³ மூலே மயா ஸமர்ப்பிதாம் இமாம் ஸௌவர்ணீம் யத் கிஞ்சி¹த் த³க்ஷிணாம் யதோ²க்த த³க்ஷிணாமிவ தாம்பூ³லஞ்ச¹ ஸ்வீக்ருத்யா .... நக்ஷத்ரே .... ராசௌ ஜாதஸ்ய .... நாமதே⁴யஸ்ய மம பத்நியா: ....நக்ஷத்ரே .... ராசௌ ஜாதாயா:........... நாம்நியா! மம ஸஹ குடு³ம்ப³ஸ்ய ஸர்வாபீ⁴ஷ்ட ஸித்⁴யர்த்த²ம் ஸர்வ மங்க³ள அவாப்த்யர்த்த²ம்.............. மங்க³ள க்ரியாயாம் ஆசா¹ர்ய முகே²ந க்ரியா கர்த்தும் யோக்³யதா ஸித்⁴தி⁴ம் அநுக்³ரஹாணம்".

என்று சொல்வித்துத் தேங்காய், பழம் முதலிய வற்றை முன்னே வைத்து நமஸ்கரிக்கச் செய்க.

சங்கற்பம்

கர்த்தாவைக் கிழக்கு நோக்கி உட்காருவித்துக், காலடியில் இரண்டு தர்ப்பைகளை வடக்கு நுனியாக ஆசனமாகப் போட்டுத் திருநீறு, பவித்திரம், பூணூல் கொடுக்க. ஓம் ஹாம் க³ணபதயே நம: என்று மூன்று முறை குட்டிக் கொண்டு, ஓம் ஹாம் கு³ரவே நம: என்று கும்பிடச் செய்க. கர்த்தாபத்தினி கையில் இரண்டு தர்ப்பை களைக் கொடுத்துத் தர்ப்பைகளின் நுனி, கர்த்தாவின் வலது துடையில் படும்படி வைத்துக்கொள்ளச் செய்க.

"சுக்லாம் ப³ரத⁴ரம் விஷ்ணும் சசிவர்ணம் ச¹துர் பு⁴ஜம் ப்ரஸந்ந வத³நம் த்⁴யாயேத் ஸர்வ விக்⁴ந உபசாந்தயே"

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

என்று பிரார்த்திக்கச் செய்து, ஸம்ஹிதா மந்திரப் பிராணாயாமம் செய்விக்க.

வலது முழந்தாளில், இடது கையின் மேல், மோதிர விரலில், இரண்டு தர்ப்பை மேல்நோக்கும்படி சேர்த்த வலது கையை அக்ஷதையுடன் வைத்துக் கொள்ளச் செய்து, "மமோபாத்த ஸமஸ்த து3ரிதக்ஷய த்3வாரா ஸ்ரீ பரமேச்வர ப்ரஸாத ஸித்4யர்த்த2ம் ததே3வ ல3க்3நம் ஸு3தி3நம் ததே3வ, தாரா ப3லம் ச1ந்த்3ரப3லம் ததே3வ, வித்3யா ப3லம் தை3வ ப3லம் ததே3வ. கௌ3ரீ பதே: அங்க்4ரியுக3ம் ஸ்மராமி, திதி2 சம்பு4, ததா2 வாரம், நக்ஷத்ரம் சம்பு4ரேவச1, யோக3ச்ச1 கரணம் சை1வ, ஸர்வம் சிவமயம் ஜக3த், சிவசிவ சம்போ4 ராஞ்ஞா, ப்ரவர்த்த மாநஸ்ய, ஆத்3ய ப்3ருஹ்மண:, த்3விதிய பரார்த்தே4, ச்வேத வராஹ கல்பே, வைவஸ்வத மந்வந்தரே, அஷ்டாவிம்சதி தமே, கலியுகே3, ப்ரத2ம பாதே3, ஜம்பூ3த்3வீபே, பா4ரத வர்ஷே, ப4ரதக் க2ண்டே3, மேரோர் த3க்ஷிண பார்ச்வே, சகாப்3தே3, அஸ்மிந் வர்த்தமாநே, வ்யாவ ஹாரிகே, ப்ரப4வாதி3, ஷஷ்டி ஸம்வத்ஸராணாம், மத்4யே .... நாமஸம்வத்ஸரே .... அயநே .... ருதௌ .... மாஸே .... பக்ஷே .... சுப4 திதௌ2 .... வா ஸர யுக்தாயாம், ... நக்ஷத்ர யுக்தாயாம், சுப4 நக்ஷத்ர சுப4 யோக3, சுப4 கரண ஏவம் கு3ண விசேஷேண விசிஷ்டாயாம் அஸ்யாம் வர்த்தமாநாயாம், ... புண்யதிதௌ2 அஸ்மாகம் ஸஹ குடும்பா3நாம் க்ஷேமஸ், தை2ர்ய வீர்ய, விஜய, ஆயுராரோக்3ய, ஐச்வர்ய, அபி4விர்த்4யர்த்த2ம், ஸமஸ்த து3ரிதோப சாந்த்யர்த்த2ம், ஸமஸ்த மங்க3ள அவாப்த்யர்த்த2ம், த4ர்மார்த்த2 காம மோக்ஷ ச1துர்வித4 ப2ல புருஷார்த்த2 ஸித்4யர்த்த2ம் ஆயுஷ்மத் ஸத்ஸந்தாந ஸம்ருத்4யர்த்த2ம், ஆதி3த்யாதீ3நாம் நவாநாம் க்3ரஹாணாம் ஆநுகூல்ய ஸித்4யர்த்த2ம், ஸர்வாபீ4ஷ்ட ஸித்4யர்த்த2ம், மம ஸமஸ்த பாப க்ஷயார்த்த2ம், சி1ந்தித, மநோரத2 ஸித்4யர்த்த2ம் .... க்ரியாம் ஆசா1ர்ய முகே2ந கரிஷ்யே" என்று சங்கல்பம் செய்வித்து வலது கை மோதிர விரலில் மடக்கி வைத்திருக்கும் தர்ப்பைகளையும்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

அக்ஷதையையும் கர்த்தாபத்தினி கையிலிருக்கும் தர்ப்பைகளையும், வட புறத்தில் போடச் செய்து, ஜலத்தால் கரசுத்தி செய்விக்க.

விக்நேசுவர பூஜை

தென்மேற்குத் திக்கில் ஆசனம் வைத்து, அதில் சந்தனம் அல்லது மஞ்சளில் கணபதி பிம்பம் அமைத்துக் கொள்க. கணபதி, குருவணக்கம், பிராணாயாமம், சகளீகரணம் செய்து கொண்டு,

'கரிஷ்ய மாணஸ்ய கர்மண: அவிக்⁴நேந பரிஸமாப்த்யர்த்த²ம் ஆதௌ³ ஸ்ரீ மஹாக³ணபதி பூஜாம் கரிஷ்யே'' என்று சங்கல்பம் செய்க. சாமான்யார்க்கியம் வைத்துக் கொள்க. அர்க்கிய ஜலத்தை ஓம் ஹ அஸ்த்ராய நம: என்று பிம்பத்தில் புரோக்ஷித்துச் சுவாமி ஆசனத்தின் கீழ்ப்பகுதியில், ஓம்கா ³ம் அநந்தாஸநாய நம: ஆசனத்தின் தென்கிழக்கில், ஓம் கா ³ம் த⁴ர்மாய நம: தென் மேற்கில், ஓம் கா ³ம் ஞாநாய நம: வடமேற்கில், ஓம் கா ³ம் வைராக்³யாய நம: வடகிழக்கில், ஓம் கா ³ம் ஐச்வர்யாய நம: மத்தியில், ஓம் கா ³ம் பத்³மாஸநாய நம: ஓம் கா ³ம் க ³ணபத்யாஸநாய நம என்று ஆசனத்தை அர்ச்சித்துத் திருவுருவத்தில், ஓம் கா ³ம் க ³ம் கா ³ம் க ³ணபதி மூர்த்தயே நம: என்றும் மூர்த்தியின் சிரசில், ஓம் கோ ³ம் ஈசாந மூர்த்தா⁴ய நம: புருவ நடுவில், ஓம் கே ³ம் தத்புருஷ வக்த்ராய நம: மார்பில், ஓம்கு³ம் அகோ⁴ர ஹ்ருத³யாய நம தொப்பூழில், ஓம் கிம் ³ வாமதே³வ கு ³ ஹ்யாய நம: முழந்தாள்களில், ஓம் க ³ம் ஸத் ³யோஜாத மூர்த்தயே நம: தேகத்தில், ஓம் க ³ாம் வித்²யா தே³ஹாய நம: முக்கண்களில் ஓம் கௌ ³ம் நேத்ரேப்⁴யோ நம என்றும் வலதுகைக் கட்டைவிரலால் நியசிக்க. லம்போ²த²ரம் ச்யாம தநும் க ³ணேசம், குடாரம் அக்ஷஸ்ருஜம் ஊர்த்⁴வகாப்⁴யாம், ஸலட்³டு³கம் த³ந்த மத⁴க்கராப்⁴யாம் வாமே தராப்⁴யாஞ்ச த³தா⁴நமீடே³ என்று தியானித்து, ஓம் கா³ம் க³ம் கா ³ம் கௌ³ம் க³ ணபதயே நம: என்று ஆவாஹனம், ஸ்தாபனம்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

சந்நிதானம், சந்நிரோதனமும், ஓம் க[3]: அஸ்த்ராய நம: என்று திக்பந்தனமும், ஓம் கை[3]ம் கவசா[1]ய நம: என்று அவகுண்டனமும், ஓம் ஹாம் சிவாய வெளஷட் என்று ⁜ தேனு முத்திரையும், ஓம் கா[3]ம் க[3]ணபதயே வெளஷட் என்று ★ அங்குச முத்திரையும் காட்டுக. சுவாமியின் இருதயத்தில், ஓம் கா[3]ம் ஹ்ருத[3]யாய நம: சிரசில், ஓம் கீ[3]ம் சிரஸே ஸ்வாஹா. சிகையில், ஓம் கூ[3]ம் சிகா[2]யை வஷட் பக்கங்களில், ஓம் கை[3]ம் கவசா[1]ய ஹூம் முன்புறம் ஓம் க[3]: அஸ்த்ராயபட் என்று நியசிக்க. ஓம் கா[3]ம் க[3]ண பதயே நம: என்று இரண்டு திருவடிகளைக் கழுவும் பாத்திய மும் ஓம் க[3]ாம் க[3]ணபதயே ஸ்வதா[4] என்று உள்ளே பருகும் ஆசமனமும் ஓம் க[3]ாம் க[3]ணபதேய ஸ்வாஹா என்று சிரசில் தெளிக்கும் அர்க்கியமும், கொடுக்க.

அபிஷேகத்தின் பொருட்டு அர்க்கிய ஜலத்தைக் கணபதி மூல மந்திரத்தால் திருவுருவத்தில் புரோக்ஷித்து, விபூதி, சந்தனம், குங்குமம், அக்ஷதை, அறுகு, புஷ்பம் சாத்திக் கணபதி ஆசனம், மூர்த்தி மூல மந்திரங்களாலும், சம்ஹிதா மந்திரங்களாலும் அர்ச்சிக்க ஓம் கு[3]ம் அகோ[3]ராய நம: என்று தூபமும், ஓம் ெ[3]களம் நேத்ரேப்[4]யோ நம: என்று தீபமும் காட்டுக. நைவேத்தியத்தை ஓம் க[3]: அஸ்த் ராய நம: என்று புரோக்ஷித்து, ஓம் கை[3]கம் கவசாய நம: என்று அர்க்ய ஜலத்தால் சுற்றிக் கணபதி மூலமந்திரத்தால் நிவேதித்துக், கற்பூரம் காட்டுக.

''வக்ரதுண்ட[3] மஹாகாயா ஸூர்ய கோடி ஸமப்ரப[3]ா அவிக்[4]நம் குரு மே தே[3]வா ஸர்வ கார்யேஷு ஸர்வதா[3].

என்றும் திருமுறைப் பாடல்களாலும் தோத்திரம் செய்து, அர்க்கியம் கொடுத்து, ஓம் க[3]ாம் ஹ்ருத[3]யாய நம: என்று சுவாமியை இருதயத்தில் ஒடுக்கிக் கொள்க. கணபதி மூல மந்திரத்தைப் பத்து உரு ஜெபிக்க.

⁜ இரண்டு கைகளையும் சேர்த்து விரல்களைக் கோத்து, வலதுகைச் சுண்டுவிரல் நுனியும் மோதிர விரல் நுனியும் முறையே, இடதுகை மோதிர விரல் சுண்டு விரல் நுனிகளையும் வலது கை நடுவிரல் நுனியும் சுட்டு விரல் நுனியும் முறையே இடதுகைச் சுட்டு விரல் நடு விரல் நுனிகளையும் பொருந்தப் பசுவின் மடிக் காம்பு போலப் பிடித்தல்.

★ வலக்கையை முஷ்டியாகப் பிடித்துச் சுட்டு விரலை மட்டும் சிறிது வளைத்துப் பிடித்தல்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

பிராணாயாமம்

வலதுகைக் கட்டை விரலால் வலது நாசியை மூடிக் கொண்டு, இடது நாசியைத் திறந்து, அஸ்த்ர மந்திரம் உச்சரித்து, மூச்சை உள்ளே இழுத்து, வலது கை மோதிர விரலால் இடது நாசியை மூடிக்கொண்டு வலது நாசியைத் திறந்து அஸ்த்ர மந்திரம் உச்சரித்து மூச்சை வெளியில் விட்டுப் பின்னர் வலது நாசியை மூடி, இடது நாசி வழியாக சம்ஹிதா மந்திரங்களை உச்சரித்து மூச்சை உள்ளே இழுத்து இரண்டு நாசிகளையும் மூடிச் சம்ஹிதா மந்திரங்களை உச்சரித்து மூச்சை உள்ளே நிறுத்தி, இடது நாசியை மூடி, வலது நாசியைத் திறந்து சம்ஹிதா மந்திரங்களை உச்சரித்துமூச்சை வெளியே விடுக. சில மூல மந்திரம் உச்சரித்து வலக்கையால் வலது காதை மூடுக.

சகளீகரணம்

(கரநியாசம்)

அஸ்திர மந்திரத்தால் வலது அகங்கை, புறங்கைகளை ஒவ்வொரு முறையும், இடது அகங்கை புறங் கைகளை இரண்டு முறைகளுந் துடைத்து, வௌஷடந்த சக்தி மந்தி ரத்தால் புருவ நடுவில் கைகளைக் கூப்பி, இரண்டு கைகளை யுஞ் சேர்த்து விரித்து உள்ளங்கைகளில் கட்டை விரல் களால் சிவாசன மந்திரத்தாலும், சிவமூர்த்தி மந்திரத்தாலும் தொட்டுப், பெருவிரல்களின் நுனியில் சுட்டு விரல்களால் ஈசானமும், சுட்டு விரல்களின் நுனியில் கட்டை விரல்களால் தத்புருஷமும், நடுவிரல்களின் நுனியில் அகோரமும், அணி விரல்களின் நுனியில் வாமதேவமும் சுண்டு விரல்களின் நுனியில் சத்யோஜாதமும் ஆகிய மந்திரங்களை உச்சரித்துத் தொட்டு, உள்ளங்கைகளிற் கட்டை விரல்கள் கொண்டு வித்யாதேக மந்திரத்தால் தொட்டு உள்ளங்கைகளில் அணி விரல், நடுவிரல், சுட்டு விரல்களால் நேத்ர மந்திரம் உச்ச ரித்துத் தொட்டு, உள்ளங்கைகளில் கட்டை விரல்களால் சிவமூல மந்திரம் உச்சரித்துத் தொட்டுக் கட்டை விரல்களால் முறையே ஹ்ருதயம், சிரசு, சிகை, கவசம் ஆகிய மந்திரங்களை உச்சரித்துச் சிறுவிரல், அணிவிரல், நடுவிரல், சுட்டுவிரல் களில் தடவி அஸ்திரமந்திரம், உச்சரித்துச் சுட்டுவிரலால்

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

பெருவிரலில் தடவி இரண்டு கைகளையும் முஷ்டியாகப் பிடித்துக் கவச மந்திரத்தால் சுற்றி வெளஷடந்த மூலமந்திரத்தாற் கைகளைக் கூப்புக

(அங்கநியாசம்)

அஸ்திர மந்திரத்தால் பாதம் முதல் சிரசுவரை துடைத்து, வெளஷடந்த சக்தி மந்திரத்தால் கைகளைக்கூப்பி வலதுகை அணிவிரலால் ஹ்ருதயத்தில் ஆசன மூர்த்தி மந்திரங்கள் உச்சரித்துத்தொட்டுத் தலையில் ஈசானம், புருவ நடுவில் தத்புருஷம், மார்பில் அகோரம், தொப்பூழில் வாமதேவம், வலது இடது முழந்தாள்களில் சத்யோஜாதம், மார்பில் வித்யாதேகம் உச்சரித்து, முறையே கட்டைவிரல், சுட்டு விரல், நடு விரல், அணி விரல், சுண்டு விரல் அணிவிரல்களால் தொட்டு, நடுவிரல்கள் மூன்றினுலும் நேத்திரம் உச்சரித்துக் கண்களில் தொட்டு, மூலத்தாலும், ஹ்ருதயத்தாலும் மார்பில் அணிவிரல் கொண்டும், சிரத்தால் தலையில் அணிவிரலாலும், சிகையால் குடுமியில் நடுவிரலாலும் தொட்டு மார்பில் இருந்து கழுத்தை இரண்டு கைச் சுட்டு விரல்களாலும் வலம் இடமாகக் கவசத்தால் சுற்றி, அஸ்திரத்தால் அணி விரல்கள் கொண்டு இரண்டு உள்ளங்கைகளிலுந் தொட்டு, அஸ்திரத்தால் தாளத்திரயமும், சிரசைச் சுற்றித் திக்பந்தனமும், கவசத்தால் அவகுண்டனமும் செய்து வெளஷடந்த மூலத்தால் கைகளைக் கூப்புக.

சாமான்யார்க்கியம்

அர்க்கிய வட்டகையை அஸ்திரமந்திரத்தால் சுத்தி செய்து, ஹ்ருதய மந்திரத்தால் நீர் நிரப்பிச், சந்தனம், அக்ஷதை, புஷ்பம் சேர்த்துப் பிரணவ மந்திரத்தால் ஏழு தரம் அர்ச்சித்து, அபிமந்திரித்து, அஸ்திரமந்திரத்தால் திக்பந்தனமும், கவச மந்திரத்தால் அவகுண்டனமும், வெளஷடந்த மூலமந்திரத்தால் தேனு முத்திரையுங் கொடுக்க.

புண்யாவாசனம்

வடபுறத்தில் நாற்கோண மண்டலம் இட்டுக் கிழக்கு அல்லது வடக்கு நோக்கிய நுனியுள்ள வாழை இலையில் நெல்லும், அதன்மேல் ஒரு இலையில் அரிசியும், அதன்மேல் ஒரு இலையில் எள்ளும் பரப்பி அதில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

எட்டிதழ்த் தாமரை வரைந்து, அதில் ஓம் ஹராம் மஹா லக்ஷ்மியை நம: என்று அர்ச்சித்து, அதன்மேல் வெள்ளை நூலால் சுற்றப்பட்டும் மாந்தளிர், அரசந்தளிர், மாதுளைத் தளிர் தேங்காய், கூர்ச்சம் ஆகியவைகளுடன் பரிவட்டம் சாத்தப்பட்டும், ஜலத்தில் வெள்ளி, தங்கம், இரத்தினம் சேர்க்கப்பட்டும், உள்ள ஒரு கலசத்தை வைத்துச், சந்தனம் குங்குமம், புஷ்பம், சாத்திக் கலசத்தின் அடியில் ஓம் ஹாம் ப்3ர்ஹ்மணே நம: நடுவில் ஓம் ஹாம் விஷ்ணவே நம: உச்சியில் ஓம் ஹாம் ருத்3ராயநம: தென் புறத்தில் ஓம் ஹாம் நந்தி3நே நம: வடபுறத்தில் ஓம் ஹாம் மஹாகாளாய நம: என்று அர்ச்சிக்க. கலசநீரில் ஓம் ஹாம் வருணாஸநாய நம: ஓம் ஹாம் வருணமூர்த்தயே நம: ஓம் வம் வருணாய நம என்று வருண தேவனை ஆசன மூர்த்தி மூலத்தால் அர்ச்சித்து நாக3 பாச த4ரம் ஹ்ருஷ்டம் ரத்நௌக4 த்3யுதி விக்3ரஹம் சசாங்க த4வளம் த்4யாயேத்3 வருணம் மகராஸநம்" என்று தியானித்து, "ஓம் வம் வருணாய வௌஷட்" என்று இடதுகையையும் வலது கையையும் ஒன்றன் மேல் ஒன்றாகக் கவிழ்த்துக் கட்டை விரல்களைப் பக்கவாட்டில் நீட்டி அவற்றை மேலும் கீழுமாக அசைத்தலாகிய மகர முத்திரை காட்டி "ஓம் வருணாய நம: ஓம் ப்ரசே1தஸே நம: ஓம் ஸுரூபிணே நம: ஓம் மகர வாஹநாய நம: ஓம் அபாம்பதயே நம: ஓம் பாச ஹஸ்தாய நம: ஓம் ஜலாதி4பதயே நம: ஓம் தீர்த்த2 ராஜாய நம:" என்று அர்ச்சித்து, ஓம் ஹாம் க3ங்கா3யை நம ஓம் ஹாம் யமுநாயை நம: ஓம் ஹாம் கோ3தா3வர்யை நம: ஓம் ஹாம் ஸரஸ்வத்யை நம: ஓம் ஹாம் நர்மதா3யை நம: ஓம் ஹாம் ஸிந்த4வே நம: ஓம் ஹாம் காவேர்யை நம: ஓம் ஹாம் தாம்ர பர்ண்யை நம: ஓம் ஹாம் வேக3வத்யை நம:" என்று புண்ணிய நதிகளை நியசித்துத் தர்ப்பை முஷ்டி நுனியைக் கலசத்தில் வைத்துக்கொண்டு சிவமூல மந்திரம் பதினறு உரு சம்ஹிதா மந்திரங்கள் ஒவ்வொரு உரு, "ஓம் ஹ்ரீம் பு2ர பு2ர ப்ரஸ்புர ப்ரஸ்புர கோ4ர கோ4ர தநுரூப தநுரூப ச1ட ச1ட ப்ரச1ட ப்ரச1ட கஹ கஹ வம் வம் ப3ந்த4 ப3ந்த4 கா4தய கா4தய ஹும்பட் அகோ4ராஸ்த்ராய நம: என்னும் மந்திரம் பத்து உரு ஜெபித்து, "ஓம் ஹாம் சிவாய தே3வதே3வாய மஹா தே3வாய பா4மிநே ருத்3ராயஸ் தா2ணவே

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

நித்யம் ஹ்ராய உக்[3]ராயதே நம: பரமேசாய ஸித்தா[4]ய ஸர்வஸித்[4]திப் ரதா[3]யிநே, த்ரியம்ப[3]க மஹேசாய அதிசாந் தாயதே நம:'' என்று அபிமந்திரித்துத், திக்பந்தனம், அவ குண்டனம் செய்து, தேனு முத்திரை காட்டித், தூப தீப நைவேத்தியம் செய்து கற்பூரம் காட்டி, ஓம் ஹாம் வருணாய ஸ்வாஹா என்று அர்க்கியம் கொடுத்து இருதயத்தில் ஒடுக்கிக் கொள்க. சாந்தி ரஸ்து, புஷ்டி ரஸ்து, துஷ்டி ரஸ்து வ்ருத்தி[4] ரஸ்து, அவிக்[4]நமஸ்து. ஆயுஷ்ய மஸ்து, ஆரோக்[3]ய மஸ்து, அசஞ்லமைச்வர்ய மஸ்து, த[4]நதா[4]ன்ய ஸம்ருத்தி[4]ரஸ்து என்று சொல்லிக் கலச ஜலத்தை மாவிலை கூர்ச்சத்தால் வடகிழக்கில் அரிஷ்ட நிரஸநமஸ்து, தென் கிழக்கில் யத் பாபம் தத் ப்ரதிஹதமஸ்து ஸர்வ சோப[4] நமஸ்து, ஸர்வாஸ்ஸம்பத[3]ஸ்ஸந்து கிழக்கில் பாசுபதாஸ்த் ராய நம: தெற்கில் அகோர[4]ராஸ்த்ராய நம: மேற்கில் காலா நலாஸ்த்ராய நம: வடக்கில் க்ஷுரிகாஸ்த்ராய நம: பூசைத் தானம். பூசைத்திரவியங்களில் ஓம் ஹாம் அஸ்த்ராய நம: என்று புரோக்ஷிக்க.

பூதசுத்தி அந்தர்யாகம்

ஆசாரியர் கணபதி, குரு வணக்கம், பிராணாயாமம், கர்நியாசம் செய்து கொள்க. தனது இரண்டு கால்களின் பெருவிரல்களிலிருந்து இடுப்பு வரை இரண்டாகவும், அதற்கு மேல் உச்சி வரை ஒன்ருகவும், இருதயம். கழுத்து நாக்கின் அடி, புருவநடு, உச்சி ஆகிய இடங்களில் கீழ் நோக்கித் தண்டுடன் தொங்கும் தாமரை அரும்புகள் உள்ள தாகவும், உள்ளே தொளை அமைந்ததாகவும், இடை, பிங்கலை என்னும் நாடிகளுடன் கூடியதாகவும், உள்ள சுழு முனை நாடியை அதன் உள்ளும் புறமும் அமுத தாரை பொழியும் பரவெளி வடிவக் குண்டலிநி சத்தியுடன் தியா னித்துச், சுழுமுனை நாடியின் மூலாதார ஸ்தானத்தில், ஒளி மயமாயிருக்கும் ஹம் என்னும் ஆத்ம பீஜத்தைச் சிந்தித்துப் பிராணவாயுவை இடது நாசி வழியாக உள்ளே இழுத்து, உச்சியில் நிறுத்தி, ஓம் ஹ: ஹும்பட் என்று ஐந்து முறை உச்சரித்துக் கீழ் நோக்கியிருந்த தாமரை அரும்புகள் ஐந்தும் மேல்நோக்கி மலர்ந்தனவாகப் பாவித்துப் பிராணவாயுவை

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

வலது நாசியால் வெளியே விடுக மீண்டும் பிராணவாயுவை இடது நாசி வழியாக உள்ளே இழுத்து. இருதயத்தில் ஆன்மாவைத் தியானித்துச், ★ சம்ஹார முத்திரையால் எடுத்து, ஓம் ஹாம் ஹம் ஹாம் ஆத்மநே நம: என்று துவாத சாந்தத்திலிருக்கும் சிவபெருமானிடத்தில் சேர்க்க. சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், புத்தி, அகங்காரம், மனம் ஆகியவற்றாலமைந்த தனது புரியட்டக தேகம், பிரும்மா, விஷ்ணு, ருத்திரன், மஹேசுவரன், சதாசிவம் ஆகிய மூர்த்திகளால் தூய்மை பெற்றதாகப் பாவிக்க. பிருதிவி, அப்பு, தேயு, வாயு. ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களையும் அவற்றிற்கு மேலே உள்ள தன்மாத்திரை முதலிய தத்துவங்களையும் முறையே நிவிர்த்தி, பிரதிஷ்டை வித்தை, சாந்தி சாந்திய தீதை ஆகிய கலைகளில் ஒடுங்கியதாகப் பாவித்து. வலது கால் பெருவிரலிலுள்ள அக்நியை எழுப்பிப் பஞ்ச பூத குற்றங்கள் அதனுல் எரிந்து போனதாகவும், மல பந்தங்கள் நீங்கியதாகவும், நிவிர்த்தி முதலிய ஐந்து கலைகள் மட்டும் பழுதில்லாமல் நிற்பதாகவும் பாவித்துத். துவாத சாந்தத்தில் உள்ள சக்தி மண்டல அமுத தாரையால் உடலின் உள்ளும் புறமும் நனைக்கப் பெற்றதாகச் சிந்திக்க.

இருதய கமலத்தில் ஓம் ஹாம் அநந்தாய நம: ஓம் ஹாம் த⁴ர்மாய நம: ஓம் ஹாம் ஞாநாய நம: ஓம் ஹாம் வைராக்³யாய நம: ஓம் ஹாம் ஐச்வர்யாய நம: ஓம் ஹாம் பத்³மாய நம: என்று ஷடுத்தாசனம் பூசித்து. அதில் சிவ பெருமான் எழுந்தருளியிருப்பதாகப் பாவித்து எல்லா உபசாரங்களுடனும் மானசீகமாகப் பூசித்துப் புறப்பூசைக்கு அனுமதி பெற்றுக் கொள்க.

தான சுத்தி

பூசைத் தானத்தின் எட்டுத் திசைகளிலும் அஸ்திர மந்திரத்தால் தாளத்திரயமு, திக் பந்தனமும், கவச மந்திரத்தால் அவகுண்டனமும் செய்து. மேலும் கீழும் ஓம் ஹாம் சக்தயே வௌஷட் என்று தேனு முத்திரை கொடுக்க.

விசேடார்க்கியம்

அர்க்கிய வட்டகையைச் சுத்தி செய்து, ஹிருதய மந்திரத்தால் நீர் நிரப்பிப் பால், எள், அரிசி, தர்ப்பை நுனி,

★ வலக்கைக் கட்டை விரலை உயர்த்தி மற்ற விரல்களை முஷ்டியாகப் பிடித்தல்

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

பூ, வெண்கடுகு, நெல், சந்தனம் சேர்த்து, சிவாசன மூர்த்தி மூல மந்திரங்களாலும், சம்ஹிதா மந்திரங்களாலும் அர்ச்சித்து, அபிமந்திரித்துத் தேனு முத்திரை கொடுக்க.

திரவிய சுத்தி

விசேடார்க்கிய ஜலத்தை அஸ்திர மந்திரத்தால் தன் சிரசு, பூசைத்தானம், பூசைத் திரவியங்களில் புரோக்ஷிக்க.

ஆத்ம பூசை

தான் இருக்கும் ஆசனத்தில் ஓம் ஹாம் சிவாஸநாய நம: என்றும், தன் மார்பில் ஓம் ஹாம் ஹம் ஹாம் சிவ மூர்த்தயே நம: என்றும் அர்ச்சித்து, நெற்றியிலும், மார்பிலும் சந்தனப் பொட்டு இட்டுச் சிரசில் ஓம் ஹாம் ஹௌம் சிவாய நம: என்று அர்ச்சிக்க.

மந்திர சுத்தி

கைகளைக் கூப்பிச் சம்ஹிதா மந்திரம், மூல மந்திரங்களை மானசீகமாக ஜபிக்க.

சிவஹஸ்தம்

வலது கையில் சந்தனம் புஷ்பம் அக்ஷதை வைத்துக் கொண்டு, நாற்சுத்தி செய்து, ஷடுத்தாசனம் பூசித்து, இடதுகைக் கட்டை விரலால் சிவமூல மந்திரத்துடன் சம்ஹிதா மந்திரங்களை நியாசம் செய்து, கையைச் சிவரூபமாகத் தியானித்துச் சிவமூல மந்திரத்தால் சிரசில் வைத்துக் கைகளைச் சிவபெருமானது கைகளாகப் பாவிக்க.

லிங்க சுத்தி

பூஜா மூர்த்தியின் திருவுருவத்தை ஸ்வாஹாந்த மூலத்தால் புரோக்ஷித்து, "ஓம் ஹாம் தந்மஹேசாய வித்[3] மஹே வாக்[3] விசுத்தா[4]ய தீ[4]மஹி தந்நசிவ ப்ரசோ[1] தயாத்" என்னும் மந்திரத்தால் அர்ச்சிக்க ;

பஞ்சகவ்ய சேகரம்

ஆசாரியர் பூதசுத்தி, அந்தர்யாகம், ஸ்தான சுத்தி, விசேடார்க்கியம், திரவியசுத்தி, ஆத்ம பூஜை மந்திர சுத்தி, லிங்க சுத்தி ஆகியவற்றைச் செய்து கொள்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

வடக்கு நுனியாக வைக்கப்பெற்ற வாழை இலையில் ஒன்பது கோஷ்டங்கள் செய்து நடுக் கோஷ்டத்தில், ஓம் ஹாம் சிவதத்வ கோஷ்டாய நம: கிழக்குக் கோஷ்டத்தில் ஓம் ஹாம் சதா³சிவதத்வ கோஷ்டாய நம: தெற்குக் கோஷ்டத்தில் ஓம் ஹாம் வித்³யா தத்வ கோஷ்டாய நம: வடக்குக் கோஷ்டத்தில் ஓம் ஹாம் புருஷ தத்வ கோஷ்டாய நம: மேற்குக் கோஷ்டத்தில் ஓம் ஹாம் காலதத்வ கோஷ்டாய நம: வடகிழக்குக் கோஷ்டத்தில் ஓம் ஹாம் ப்ரக்ருதி தத்வ கோஷ்டாய நம: என்று நியசிக்க. இவ்வைந்து கோஷ்டங்களிலும் பாத்திரங்கள் வைத்து நடுப்பாத்திரத்தில் ஓம் ஹாம் ஸுப்ரதிஷ்ட பாத்ராய நம: கிழக்குப் பாத்திரத்தில் ஓம் ஹாம் ஸுசாந்த பாத்ராய நம: தெற்குப் பாத்திரத்தில் ஓம் ஹாம் தேஜோவத் பாத்ராய நம: வடக்குப் பாத்திரத்தில் ஓம் ஹாம் ரத்நோத³க பாத்ராய நம: மேற்குப் பாத்திரத்தில் ஓம் ஹாம் அம்ருதாத்மக பாத்ராய நம: வடகிழக்குப் பாத்திரத்தில் ஓம் ஹாம் அவ்யக்த பாத்ராய நம: என்று நியசிக்க. நடுவில் பால், கிழக்கில் பாலில் ஐந்தில் மூன்று பங்கு தயிர், தெற்கில் பாலில் ஐந்தில் இரண்டு பங்கு நெய், வடக்கில் பாலில் ஐந்தில் ஒரு பங்கு கோசலம், மேற்கில் பாலில் பத்தில் ஒரு பங்கு கோமயம். வடகிழக்கில், பாலில் ஐந்தில் ஒரு பங்கு குசோதகம் (தர்ப்பை நுனி நனைந்த நீர்.) வைத்து, பாலில் ஓம் ஹோம் ஈசானமூர்த்தா⁴ய நம என்று: ஒரு முறையும், தயிரில் ஓம் ஹேம் தத்புருஷவக்த்ராய நம: என்று இரண்டு முறையும், நெய்யில் ஓம் ஹும் அகோ⁴ர ஹ்ருத³யாய நம: என்று மூன்று முறையும், கோசலத்தில் ஓம் ஹிம் வாமதே³வ கு³ஹ்யாய நம: என்று நான்கு முறையும் கோமயத்தில் ஓம் ஹம் சத்³யோ ஜாத மூர்த்தயே நம: என்று ஐந்து முறையும், குசோதகத்தில் சிவமூல மந்திரத்தால் ஆறு முறையும் அபிமந்திரிக்க கோமயத்தை ஓம் ஹம் ஹிம் சத்³யோஜாத வாமதே³வாப்⁴யாம் ஸ்வாஹா என்று கோசலத்திலும், அதை ஓம் ஹிம் ஹும் வாமதே³வ அகோ⁴ராப்⁴யாம் ஸ்வாஹா என்று நெய்யிலும், அதை ஓம் ஹும் ஹேம் அகோ⁴ர தத்புருஷாப்⁴யாம் ஸ்வாஹா என்று தயிரிலும், அதை ஓம் ஹேம் ஹோம் தத்புருஷ ஈசாநாப்⁴யாம் ஸ்வாஹா என்று பாலிலும் சேர்க்க குசோதகத்தை சிவமூல

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

மந்திரத்தாலும், சிவகாயத்ரி மந்திரத்தாலும் பாலில் சேர்க்க. சேர்த்தவற்றில் சம்ஹிதா மந்திரங்களால் தர்ப்பை கொண்டு கடைந்து ஏ கீ க ர ண ம் செய்து சிவமூல மந்திரத்தைப் பதினாறு முறை ஓதி, அபிமந்திரித்துத் திக்பந்தன அவ குண்டனம் செய்து, தேனுமுத்திரை காட்டிச் சி வா ச ன மூர்த்தி மூலம், சம்ஹிதா மந்திரங்களால் அர்ச்சித்துத் தூப தீபம் நைவேத்யம் கற்பூரம் செய்து. அர்க்கியம் கொடுத்து, ஹிருதய மந்திரத்தால் சுவாமியை ஒடுக்கிக் கொள்க.

தீபலெட்சுமி பூஜை

தீபத்திற்குச் சந்தனம், மஞ்சள், குங்குமம் அக்ஷதை, வஸ்திரம், புஷ்பம் சாத்தி, அ ர் க் கிய ஜலப்ரோக்ஷணம் செய்து ஓம் ஹாம் தீ³பலக்ஷ்மியாஸநாய நம ஓம் ஹாம் தீ³ப லக்ஷ்மி மூர்த்தயே நம ஓம் ஹாம் தீ³ப லக்ஷ்ம்யை நம: என்று அர்ச்சித்து ஆவாசனாதிகள் செய்து, பாத்தியாதிகள் கொடுத்து, ஓம் ஹாம் ஆதி³லக்ஷ்ம்யை நம ஓம் ஹாம் த⁴ந லக்ஷ்ம்யை நம: ஓம் ஹாம் தா⁴ந்ய லக்ஷ்ம்யை நம: ஓம் ஹாம் ஸந்தாந லக்ஷ்ம்யை நம ஓம் ஹாம் ஸௌபா³க்³ய லக்ஷ்ம்யை நம ஓம் ஹாம் வீர்ய லக்ஷ்ம்யை நம: ஓம் ஹாம் விஜய லக்ஷ்ம்யை நம: ஓம் ஹாம் தை⁴ர்ய லக்ஷ்ம்யை நம: ஓம் ஹாம் அஷ்ட லக்ஷ்மீ ப்ரயுக்த தீ³ப லக்ஷ்மீ தே³வதாயை நம: என்று அர்ச்சித்து, நைவேத்யம் செய்து, தூப தீப கற்பூரம் காட்டி, அர்க்கியம் கொடுத்துத் தோத்திரம் செய்து ஒடுக்கிக் கொள்க.

ம்ருத் சங்க்ரஹணம்

ஆறு, குளம் அல்லது நந்தவனத்தில் புரோக்ஷணம் செய்து, கி ழ க் கி ல் நாற்கோண மண்டலம் அமைத்துக் கொள்க. ஆசாரியர் கணபதி, குரு வணக்கம், ஆசமனம், பிராணாயாமம், சகளீகரணம், சங்கற்பம் செய்து கொண்டு, சாமான்யார்க்கியம், வி க் நே சு வ ர பூஜை, புண்ணியா வாசனம் செய்து கொள்க. மண்டல மத்தியில் ஓம் ஹாம் ப்³ர்ஹ்மணே நம: என்று அர்ச்சிக்க கிழக்கு முதல் வட கிழக்கு வரையுள்ள எட்டுத் திக்குகளிலும், "ஓம் ஹாம் அநந்தாயை நம: ஓம் ஹாம் விநதாயை நம: ஓம் ஹாம் ப⁴த்³

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

ராயை நம: ஓம் ஹாம் ஜயந்தாயை நம: ஓம் ஹாம் ப்[4]ரமர்யை நம: ஓம் ஹாம் ப்ரஸ்தி[2]தாயை நம: ஓம் ஹாம் பரிஜ்ரும்பி[4]ண்யை நம: ஓம் ஹாம் சூலிந்யை நம:'' என்று அர்ச்சித்து, அன்னம் அல்லது பொரியை "ஓம் ஹாம் வாஸ்த்வாதி[4]பதயே ப்[3]ர்ஹ்மணே ஸ்வாஹா'' என்று பலியிட்டு அர்க்கியம் கொடுத்து, அங்குரார்ப்பண விண்ணப்பம் செய்க. பூமிதேவியை நீலதிறம், முக்கண்கள், இரண்டு தோள்கள், கரண்ட மகுடம், சிவப்பு ஆடை, இரண்டு கைகளையும் நீட்டியிருப்பவராக வடகிழக்கில் தலை, தென்மேற்கில் கால் வைத்துச் சயனித்திருப்பவராக, கருநெய்தல் பூச் சூடியிருப்பவராகத் தியானித்து "ஓம் லம் பூ[4]மி தே[3]வ்யை நம:'' என்று ஆவாகனாதிகள் செய்து, பாத்தியாதிகள் கொடுத்துப் பூசிக்க "ஓம் ஹாம் ப்[3]ர்ஹ்மணே நம: ஓம் ஹாம் விஷ்ணவே நம: ஓம் ஹாம் ருத்[3]ராய நம: ஓம் ஹாம் அநந்தாய நம:'' என்று அர்ச்சிக்க. மண்வெட்டியை அஸ்திர மந்திரத்தால் புரோக்ஷித்துக் கூர்ச்சம், மாவிலை கட்டி ஓம் ஹாம் ஹ்ருத[3]யாய நம: என்று அர்ச்சித்துக் கிழக்கு நோக்கி அல்லது வடக்கு நோக்கியிருந்து கொண்டு அஸ்திர மந்திரம் உச்சரித்து மண்வெட்டியால் மண்ணை மூன்று முறை தோண்டியெடுத்துத் தத்புருஷ மந்திரத்தால் பாத்திரத்தில் வைத்து ஹ்ருதய மந்திரத்தால் புரோக்ஷித்து கவச மந்திரத்தால் வஸ்திரம் கொண்டு மூடிப் பூமியைச் சமப்படுத்தி விட்டு "ஓம் ஹாம் ஸாவேப்[4]யோ தே[3]வதாப்[4]யோ ஸ்வாஹா'' என்று அர்க்கியம் கொடுத்து மாகேசுவரர்களுடன் மங்கல வாத்திய முழங்க யாகசாலையை அடைக.

அங்குரார்ப்பணம்

மண்டபத்தின் வடக்கு, வடகிழக்கு அல்லது தென்மேற்கில் சதுரமேடை அமைத்து, வாழை இலையில் நெல், அரிசி பரப்பி நான்கு திசைகளிலும் நந்நான்கு வீதம் பன்னிரண்டு பாலிகைகளை வைத்து அவற்றில் அரசு, அறுகு, வில்வத் தளிர்களைக் கட்டி "ஓம் ஹாம் ப்[3]ர்ஹ்மணே நம: ஓம் ஹாம் விஷ்ணவே நம: ஓம் ஹாம் ருத்[3]ராய நம: ஓம் ஹாம் மஹேச்வராய நம:'' என்று அர்ச்சிக்க. பாலிகைகளில் எருமுட்டகம், ம்ருத் சங்கிரகண மண் சேர்த்து, "ஓம் ஹாம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

வைகர்த்தநாய நம: ஓம் ஹ்ராம் விவஸ்வதே நம: ஓம் ஹ்ராம் மார்த்தாண்டா^{3}ய நம! ஓம் ஹ்ராம் பா^{4}ஸ்கராய நம! ஓம் ஹ்ராம் ரவயே நம: ஓம் ஹ்ராம் லோகப்ரகாசாய நம! ஓம் ஹ்ராம் லோகஸாக்ஷிணே நம: ஓம் ஹ்ராம் த்ரிவிக்ரமாய நம: ஓம் ஹ்ராம் ஆதி^{3}த்யாய நம: ஓம் ஹ்ராம் ஸௌர்யாய நம: ஓம் ஹ்ராம் அம்சுமாலிநே நம: ஓம் ஹ்ராம் தி^{3}வாகராய நம:'' என்று பன்னிரு சூரியர்களையும் அர்ச்சிக்க. பாலிகை மத்தியில் மூன்று கலசங்கள் வைத்து நடுக்கும்பத்தில் "ஓம் ஹ்ராம் அம்ருதேச்வராஸநாய நம: ஓம் ஹ்ராம் அம்ருதேச்வர மூர்த்தயே நம: ஓம் ஸம் அம்ருதேச்வராய நம:'' என்று அர்ச்சித்து வெண்டாமரை ஆசனம், வெண்ணிறம், வெள்ளாடை இரண்டு கண்களுடன் தோள்களில் அணைந்த தண்டுகள் கூடிய இரண்டு அல்லி மலர்கள் உடையவராகச் சந்திர மூர்த்தியைத் தியானிக்க. வலதுபுறக் கும்பத்தில் ஓம் ஹ்ராம் க்ருத்திகா தே^{3}வ்யை நம: இடது புறக் கும்பத்தில் ஓம் ஹ்ராம் ரோஹிணி தே^{3}வ்யை நம: என்று அர்ச்சித்து, ஓம் ரம் வம் யம் ஸம் ஹ்ரீம் ப^{4}ம் ச்ரீம் அம்ருதேச்வராய நம என்று ஆவாகனாதிகள் பாத்தியாதிகளுடன் பூசித்து, அர்க்கியம் கொடுத்து "ஓம் ஹ்ராம் திரிபுரஸுந்த^{3}ர்யை நம: ஓம் ஹ்ராம் நித்யக்லிந்நாயை நம: ஓம் ஹ்ராம் ஹேமரண்டா^{3}யை நம: ஓம் ஹ்ராம் நித்யாயை நம ஓம் ஹ்ராம் ப^{4}க^{3}மாலிந்யை நம: ஓம் ஹ்ராம் விச்வேச்வர்யை நம ஓம் ஹ்ராம் ரௌத்^{3}ரியை நம: ஓம் ஹ்ராம் குலஸுந்த^{3}ர்யை நம: ஓம் ஹ்ராம் நித்யாயை நம: ஓம் ஹ்ராம் நீலபதாகாயை நம: ஓம் ஹ்ராம் விஜயாயை நம: ஓம் ஹ்ராம் ஸர்வமங்க^{3}ளாயை நம: ஓம் ஹ்ராம் சாந்தாயை நம'' ஓம் ஹ்ராம் நித்யாயை நம என்று சந்திரகலைகள் பதினாறையும் அர்ச்சிக்க. வல இடப் பக்கக் கலசங்களில் கிருத்திகா – ரோகிணீ தேவிகளை ஆவாகனாதிகளுடன் பூசிக்க ஒரு பாத்திரத்தில் பால் வைத்து ஓம் ஹ்ரீம் சக்தயே நம: என்று அர்ச்சித்து நெல், பாசிப்பயறு, எள், வெண்கடுகு, உளுந்து, மொச்சை, கொள் ஆகியவற்றை அஸ்திரமந்திரத்தால் கழுவித் திக்பந்தனம் அவகுண்டனம் செய்து, சம்ஹிதா மந்திரங்களால் அர்ச்சித்து, ஓம் ஹ்ராம் ஹௌம் என்னும் பீஜத்தைத் தியானித்து ஹிருதய மந்திரத்தால் பாலில் சேர்த்துச் சந்திர கும்ப ஜலத்

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

தால் புரோக்ஷிக்க. சூரிய சந்திராதியோருக்கு அர்க்கியம் கொடுத்து ஒடுக்கிக் கொள்க.

ரக்ஷாபந்தனம்

ஒரு தம்பாளத்தில் திருநீற்றின் மேல் ரக்ஷா சூத்திரத்தை வைத்து "ஓம் ஹாம் ஆதா4ர சக்த்யாதி ஸுத்த4 மாயா சக்தி பர்யந்த சக்திப்4யோ நம:" என்று அர்ச்சித்துச் சிவாசன மூர்த்தி மூலம் சம்ஹிதா மந்திரங்களால் சிவத்தைப் பூசித்து. வாசுகியைத் தியானித்துச் சம்ஹிதா மந்திரங்கள் கலா மந்திரங்களால் அபிமந்திரித்து, ஆணுயின் வலது கையிலும், பெண்ணுயின் இடது கையிலும், கவச மந்திரத்தால் கட்டி ஓம் ஹாம் த்ரியம்ப3காய நம: என்று முடிச்சிட்டுக் கவச மந்திரத்தால் முடிச்சிலும், ஈசான மந்திரத்தால் சீடன் நெற்றியிலும் திருநீறு இடுக.

நாந்தி சோபனம்

"நாந்தி3 ஸோபந மங்க3ளக்ரியாயாம் ஆசா1ர்ய முகே2ந க்ரியாகர்த்தும் யோக்3யதா ஸித்4தி4ம் அநுக்3ரஹாணும்" என்று அநுக்ஞையும், "நாந்தி3 ஸோபந மங்க3ள க்ரியாம கரிஷ்யே" என்று சங்கல்பமும் விக்நேசுவர பூசை, புண்ணியா வாசனம், பஞ்சகவ்ய சேகரமும் செய்து கொண்டு மூன்று அல்லது ஆறு சிவதீட்சிதர்களைக் கிழக்கு அல்லது வடக்கு முகமாக உட்காருவிக்க மூன்ருனல் பிரபிதாமகர், பிதாமகர், பிதாவையும் ஆருனல் அவர்களுடன் பிரபிதாமஹி, பிதாமஹி, மாதாவையும் பாவித்து ஆவாகனுதிகளுடன் பூசித்து, வஸ்திரம் கொடுத்து, வாழை இலையில், மஞ்சள், அரிசி, வெல்லம், தேங்காய், பழம், உளுந்து, பயறு, வாழைக்காய், தாம்பூலம், தக்ஷிணை வைத்து, அஸ்திரமந்திரத்தால் புரோக்ஷித்துக் கவச மந்திரத்தால் நீர் சுற்றி............ கோ3த்ரோத்3ப4வஸ்ய க3ணுதீ4ச ஸ்வரூப .... நாமதேயஸ்ய ப்ரபிதா மஹப்ரீதி, ச1ண்ட ஸ்வரூப .... நாமதேயஸ்ய பிதாமஹப்ரீதி ஸ்கந்த ஸ்வரூப ....நாமதேயஸ்ய பிதுர்ப்ரீதி க3ணுதீ4ச ஸ்வரூப ....நாமதேய ப்ரபிதா மஹிப்ரீதி, ச1ண்ட ஸ்வரூப ....நாமதேய பிதாமஹிப்ரீதி ஸ்கந்த ஸ்வரூப .... நாமதேய மாதுர்ப்ரீதி என்று சொல்லி வலது

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

பக்கத்தில் ஜலம் விடுக. சிவதீக்ஷிதர்கள் அமையவில்லை யானால் கூர்ச்சங்களை வைத்துக் கொள்க. அரிசிமா, தயிர், நெய்கலந்த இலந்தைப்பழ அளவுள்ள பிண்டங்களைக் கிழக்கு நுனியான தர்ப்பையில் கிழக்கு முகமாயிருந்து மேற் கண்ட பிதிர்க்களின் நாமம் சொல்லி இடுக. அல்லது

தாம்பூலம் தக்ஷிணை வைத்து "ஹிரண்ய ரூபநாந்தி[3] ஸோபநம் ப்ரபிதாமஹ பிதாமஹ பிதுர்ப்ரீதி" என்று ஆசாரி யரிடம் சேர்க்க.

அக்கினி காரியம்

"அக்[3]நி கார்ய க்ரியாயாம் ஆசா[1]ர்ய முகே[2]நக்ரியா கர்த்தும் யோக்[3]யதா ஸித்[4]தி[4]ம் அநுக்[3]ரஹாணும்" என்று அநுக்ஞையும், சங்கல்பம், விக்நேசுவர பூஜை, புண்ணியா வாசனம், பஞ்சகவ்ய சேகரமும் செய்து கொண்டு பூமியில் மணல் பரப்பி, ஒரு முழ அளவில் நாற் கோண மேடை செய்து, அதில் கிழக்கிலிருந்து மூன்று ரேகையும் வடக்கிலிருந்து மூன்று ரேகையும் ஓம் ஹ: அஸ்த்ராயஹூம்பட் என்று தர்ப்பை நுனியால் கீறி முப்பது தர்ப்பைகள் சேர்ந்த கூர்ச்சங்களை அஸ்திர மந்தி ரத்தால் குண்டத்தின் அருகில் கிழக்கு மேற்கில் வடக்கு நுனிகளாகவும், தெற்கு வடக்கில் கிழக்கு நுனிகளாகவும், வைத்துக் குண்டத்தின் நான்கு பக்கங்களிலும் நான்கு சமித் துக்களை வைக்க குண்டத்தைச் சுற்றி ஓம் ஹைம் கவசா[1]ய நம: என்று நூல் சுற்றுக குண்டத்தில் திக்பந்தனம் அவ குண்டனம் செய்து அக்நியைப் புதிய மண்பாத்திரத்தில் கொணர்ந்து அக்நிதேவரை ஜ்வாலை உடையவர், ஜாத வேத[3]ர், ஹூதாசநர், ஸ்வர்ணவர்ணர், அநலர், சமித[4]ர் விச்வ தோ[1]முகர் என்று தியானித்துச் சமித்தினால் ஜ்வாலை உண்டாக்கி ஹிருதய மந்திரத்தால் குண்டத்தில் வைக்க. கிழக்கு முதல் வடச்கு வரை மும்மூன்று தர்ப்பைகளைத் தெற்கு வடக்குத் தர்ப்பைகள் கிழக்கு நுனியாகவும், கிழக்கு மேற்குத் தர்ப்பைகள் வடக்கு நுனியாகவும், ஹிருதய மந்தி ரத்தால் போடுதலாகிய பரிஸ்த்ரணம் செய்க. அதன்மேல் தெற்கு மேற்கு வடக்குத் திசைகளில் சிகா மந்திரத்தால் மூன்று சமித்துக்களையும், குண்ட மத்தியில், சிரோ மந்திரத்

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

தால் இரண்டு சமித்துக்களையும் வைக்க. குண்டத்தின் கிழக்கில் தர்ப்பையின் மேல் நெய்யைச் சத்யோஜாத, ஹ்ருதய மந்திரங்களால் வைத்து அஸ்திர மந்திரத்தால் புரோக்ஷித்து அர்ச்சித்துச் சமித்துடன் அக்நியின் மேல் வைத்துப், பிரமனை ஆவாகனம் செய்து, அர்ச்சித்து, நெய்யை மேற்குப் பக்கத்தில் வைத்து, விஷ்ணுவை ஆவாகனம் செய்து, அர்ச்சித்துத் தர்ப்பை நுனியை அஸ்திர மந்திரத்தால் நெய்யில் தோய்த்து, ஹிருதய மந்திரத்தால் அக்நியில் சேர்க்க. ஒரு தர்ப்பையை நெய்யில் தோய்த்து, அஸ்திர மந்திரத்தால் அக்நியில் சேர்க்க. ஸ்ருக்கு, ஸ்ருவங்களுக்கு திக்பந்தன, அவகுண்டனம் செய்து, தேனு முத்திரை காட்டிக் குண்டத்தின் அருகில் வைத்துக் கொள்க. அக்நியில் சிவத்தைப் பூசித்து ஹோமம் செய்து பூர்ணுகுதி கொடுத்து தூப, தீப, நைவேத்தியம், கற்பூரம் காட்டிச், சிவாக்நிக்கு அர்க்கியம் கொடுத்து ஒடுக்கிக் கொண்டு, குண்டத்தின் அருகில் நான்கு பக்கங்களில் இருக்கும் கூர்ச்சங்களின் முடிச்சுக்களை அவிழ்த்து நுனிமுதலாகக் குண்ட அக்நியில் கொளுத்தி, அந்த பஸ்மத்தை நெய்யில் குழைத்து ரக்ஷை எடுத்துக் கொண்டு, குண்டத்தின் மேலுள்ள நான்கு சமித்துக்களையும் குண்டத்தைச் சுற்றியுள்ள நூலையும் ஹ்ருதய மந்திரத்தால் குண்ட அக்நியில் சேர்க்க.

நவக்கிரஹ பூஜை - ஹோமம்

நவக்[3]ரஹ பூஜாஹோம க்ரியாயாம் ஆச்சார்ய முகே[2]நக்ரியா கர்த்தும் யோக்[3]யதா ஸித்[4]தி[4]ம் அநுக்[3]ரஹாணும்” என்று அநுக்ஞையும், சங்கல்பம், விக்நேசுவர பூஜை, புண்ணியா வாசனம், பஞ்சகவ்ய சேகரமும் செய்துகொள்க, சூரியனுக்கு மண்டலம், வட்டம். சந்திரனுக்கு நாற்கோணம். செவ்வாய்க்கு முக்கோணம். புதனுக்கு அம்பு வடிவம். குருவுக்கு நீண்ட சதுரம். சுக்கிரனுக்கு ஐங்கோணம். சனிக்கு வில் வடிவம். ராகுவுக்கு முறவடிவம். கேதுவுக்குக் கொடிவடிவம் சூரியனும் செவ்வாயும் செந்நிறம். சுக்கிரனும் சந்திரனும் வெண்ணிறம். புதனும் குருவும் பொன் நிறம். சனியும் ராகுவும் கருநிறம். கேது கருமை கலந்த மஞ்சள் நிறம். சூரியன் மேற்கு நோக்கி நடுவில் இருப்பார். சந்திரன் கிழக்கிலும்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

புதன் தெற்கிலும், குரு மேற்கிலும், சுக்கிரன் வடக்கிலும், செவ்வாய் தென்கிழக்கிலும், சனி தென்மேற்கிலும். ராகு வடமேற்கிலும், கேது வடகிழக்கிலும், இருந்து சூரியனை நோக்குவார்கள். சூரியனுக்குச் சமித்து வெள்ளெருக்கு, சந்திரனுக்கு முறுக்கு (கல்யாண முருங்கை) செவ்வாய்க்குக் கருங்காலி, புதனுக்கு நாயுருவி, குருவுக்கு அரசு, சுக்கிரனுக்கு அத்தி, சனிக்கு வன்னி, ராகுவுக்கு அறுகு, கேதுவுக்குத் தர்ப்பை. சூரியனுக்குத் தானியம் கோதுமை, சந்திரனுக்கு அரிசி செவ்வாய்க்குத் துவரை, புதனுக்குப் பாசிப் பயறு, வியாழனுக்குக் கடலை, சுக்கிரனுக்கு மொச்சை. சனிக்கு எள், ராகுவுக்கு உளுந்து, கேதுவுக்குக் கொள்.

வாழையிலையில் அரிசி பரப்பி, நாற்கோணம் செய்து, அதில் ஒன்பது கோஷ்டம் அமைத்து. நடுக்கோஷ்டத்தில் கூர்ச்சம் வைத்து, அதில் ஓம் அம் அர்க்காஸநாய நம: ஓம் க^{2}ம் க^{2}ஷோல்காய ஸூர்ய மூர்த்தயே நம: ஓம் ஹ்ராம் ஹ்ரீம் ஸ: சிவஸூர்யாய நம: என்று சூரியனையும், கிழக்கு முதல் எட்டுத்திக்குக் கோஷ்டங்களிலும், கூர்ச்சங்கள் வைத்துச் சந்திரன் முதலிய கிரகங்களை, ஓம் ஸம் ஸோமாய நம: ஓம் பு^{3}ம் பு^{3}த^{4}ாய நம: ஓம் ப்^{3}ரும் ப்^{3}ருஹஸ்பதயே நம: ஓம் ப்^{4}ம் பா^{4}ர்க^{3}வாய நம: ஓம் அம் அங்கா^{3}ரகாய நம: ஓம் சம் சநைச்^{1} ச^{1}ராய நம: ஓம் ரம் ராஹவே நம: ஓம் கம் கேதவே நம என்றும் அர்ச்சித்து ஆவாகனாதிகள் பாத்தியாதிகளுடன் பூசிக்க. குண்டம் அமைத்து அக்நியைப் பூசித்து அக்நியின் இருதய கமலத்தில் சூரியன் முதலிய நவக்கிரகங்களை ஆவாகனாதிகளுடன் பூசித்து அவ்வக் கிரகங்களுக்குரிய சமித்து தானியங்களாலும் நெய்யாலும், நெற்பொரியாலும் அவரவர் ஸ்வாஹாந்த மூலங்களை உச்சரித்து ஒன்பது வீதம் ஆகுதிகள் கொடுக்க. முடிவில் இருபத்தெட்டு நெய் ஆகுதி செய்து பூரணாகுதி கொடுத்துப் பூசித்து அர்க்கியம் கொடுத்துக் கிரகங்களை ஒடுக்கிக் கொள்க.

ருது மங்கள ஸ்நான விதி

ருது மங்க^{3}ள ஸ்நாநக்ரியாயாம் ஆசா^{1}ர்ய முகே^{2}ந க்ரியா கர்த்தும் யோக்^{3}யதா ஸித்^{4}தி^{4}ம் அநுக்^{3}ர ஹாணும்"

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

என்று அநுக்ஞையும், சங்கல்பம், விக்நேசுவர பூஜை, புண்ணியாவாசனம், பஞ்சகவ்ய சேகரமும் செய்து கொள்க வாழை இலையில் நெல், அரிசி, எள் பரப்பி, எட்டிதழ்த் தாமரை வரைந்து, நடுவில் ஒரு கலசமும் கிழக்கு முதலிய எட்டுத் திசைகளிலும் எட்டுக்கலசங்களும் வைக்க. நடுக் கலசத்தில் சிவத்தையும் மற்ற கலசங்களில் முறையே இந்திரன் முதலிய திக்குப் பாலகர்களையும், ஓம் இந்த்[3]ராய நம: ஓம் அக்[3]நயே நம: ஓம் யமாய நம: ஓம் நிருருதயே நம: ஓம் வருணாய நம: ஓம் வாயவே நம: ஓம் குபே[3]ராய நம: ஓம் ஈசாநாய நம: என்று முறைப்படி பூசிக்க. சிவமூல மந்திரம். அகோர மந்திரம், பாசுபதாஸ்திர மந்திரம் சிவாஸ் திர மந்திரம் ஆகியவற்றை இயன்ற அளவு ஜெபிக்க. அக்நி காரிய விதியில் உள்ளபடி அக்நியை அமைத்து, அதில் சிவத்தைப் பூசித்து, நவதானியம், வெண்கடுகு, சீந்திற் கொடி ஆகியவற்றால் ஓமம் செய்து சிவமூலமந்திரம், பாசு பதாஸ்திரம், சிவாஸ்திரம், அகோராஸ்திர மந்திரங்களால் பதினறு வீதம் ஆகுதி செய்து பூரணாகுதி கொடுக்க. கலச தேவதைகளைப் பூசித்து அர்க்கியம் கொடுத்துப் பெண்ணைக் கிழக்கு முகமாக உட்கார வைத்துத் திக்பாலகர் கும்பதீர்த் தத்தை முன்னும் சிவ கும்ப தீர்த்தத்தை முடிவிலும் அஸ்திர மந்திரத்தால் அபிஷேகம் செய்விக்க.

சமாவர்த்தன விதி

திருமணத்திற்கு முதல்நாள் சமாவர்த்தன மங்க[3]ள க்ரியாயாம் ஆச்[1]சார்ய முகே[2]ந க்ரியா கர்த்தும் யோக்[3]யதா ஸித்[4]தி[4]ம் அநுக்[3]ரஹாணம்'' என்று அநுக்ஞையும் சங்கல் பம் விக்நேசுவர பூஜை, புண்ணியாவாசனம், பஞ்சகவ்யம் நாந்தி சோபனம், ரக்ஷாபந்தனம், முருக்கு, சமித்துடன் அக்நிகாரியம் ஆகியவற்றைச் செய்து மணமகனை வபனம் செய்வித்து அஸ்திர மந்திரத்தால் புரோக்ஷித்து ஆறுஇழைப் பூணூல் கொடுத்து, அலங்கரித்துக் கண்ணாடியைத் தெரிசிப் பிக்க. தேன், பால், நெய், சர்க்கரை கலந்த மதுவர்க்கத்தை வாமதேவ மந்திரத்தால் புசிப்பிக்க. அக்நியை வலம் வரச் செய்து வடக்கு நோக்கி ஒரு அடி எடுத்து வைத்து நடந்து திரும்பிவரச் செய்து பூரணாகுதி கொடுத்துத் தெரிசிப்பித்துத் திருநீறு கொடுக்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

விவாக விதி

விக்நேசுவர பூஜை, புண்ணியாவாசனம் பஞ்சகவ்யம் அமைத்து நாந்தி சோபனமும் செய்க.

மணமேடையில் மணமகனுக்கு வலப்புறத்தில் மணமகளை உட்காருவித்து மணமகனுக்குப் பவித்திரம் கொடுத்து, இருவருக்கும் ரக்ஷாபந்தனம் செய்க. சிவமூல மந்திரத்தால் மணமக்களுக்கு மாலை முதலியன கொடுக்க. மணமகளின் தந்தையைக் கிழக்கு முகமாக உட்காருவித்து "மம குமார்யா: விவாஹ மங்க^{3}ள க்ரியாம் ஆச^{1}ார்ய முகே^{2}ந அத்^{3}ய கரிஷ்யே" என்று சங்கற்பம் செய்வித்து, மணமக்களும் மணமகளின் பெற்றோரும் கிழக்கு முகமாக நிற்க "......................... கோ^{3}த்ரோத்^{3}ப^{4}வஸ்ய நாமதேயஸ்ய ப்ரபௌத்ரி ....கோ^{3}த்ரோத்^{3}ப^{4}வஸ்ய .... நாமதேயஸ்ய பௌத்ரி .... கோ^{3}த்ரோத்^{3}ப^{4}வஸ்ய .... நாமதேயஸ்ய புத்ரி வது: .... கோ^{3}த்ரோத்^{3}ப^{4}வஸ்ய நாமதேயஸ்யப்ரபௌத்ர:........................ கோ^{3}த்ரோத்^{3}ப^{4}வஸ்ய .. .. நாமதேயஸ்ய பௌத்ர: .... கோ^{3}த்ரோத்^{3}ப^{4}வஸ்ய.............. .. நாமதேயஸ்ய புத்ர: வர: இதி:" என்று கோத்ரநாமப் பிரவரம் சொல்விக்க. மணமகனது வலது கையில் மணமகளது வலது கையைச் சொர்ணத்துடன் வைக்கச் செய்து, மணமகளது தந்தை "மம மாத்ரு பித்ரு வர்சா நாம் ஸமஸ்த பித்ருணும் சாச்வத சிவலோக நித்ய நிவாஸ ஸித்^{4}யர்த்த^{2}ம் சிவாக^{3}மோக்த கன்னிகா த^{3}ான சம்பூர்ண ப^{2}ல அவாப்த்யர்த்த^{2}ம் ஸாலங்க்ருதகன்னிகா தா^{3}னுக்^{2}ய மஹாத^{3}ானம் கரிஷ்யே" என்று சொல்லித் தாரை வார்க்கச் செய்க. மணமேடைக்குக் கிழக்கில் குண்டம் அமைத்து முறைப்படி சம்ஸ்காரங்களைச் செய்து சிவத்தை அக்நியில் ஆவாகனம் செய்து பூசித்துச் சிவமூல மந்திரத்தால் நூற்றெட்டு ஆகுதிகள் கொடுக்க. ஸ்வாஹாந்த சம்ஹிதா மந்திரங்களால் ஒவ்வொரு ஆகுதி கொடுத்து, ஆகுதிக்கு ஒரு தடவையாகத் திருமாங்கல்யம் ஆபரணம் முதலியவற்றைத் தொடும் பாவனையில் சம்பாத ஹோமம் செய்க. மணமகனுக்குத் திருநீறு, பூணூல் கொடுத்து "மம விவாஹ மங்க^{3}ள க்ரியாயாம் ஆச^{1}ார்ய முகே^{2}ந க்ரியா கர்த்தும் யோக்^{3}யதா ஸித்^{4}தி^{4}ம் அநுக்^{3}ரஹாணும்"

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

என்று அநுக்ஞை சங்கற்பமும், விக்நேசுவர பூஜையும், ஓம் க்ஷூம் உமாமகேச்வராய நம: என்னும் மந்திரத்தால் திருமாங்கல்ய பூஜையும் செய்விக்க. திருமாங்கல்யத்தைப் பெரியவர்களிடம் தொட்டு ஆசி பெற்றுக்கொண்டு வரச் செய்க. பாலிகைகளைப் பூசித்து அங்குரார்ப்பணம் செய்க. மணமகனை மணமகளுக்குத் திருநீறு, மஞ்சள், குங்குமம் இடச்செய்து, உமாமஹேசுவர மந்திரத்தால் திருமாங்கல்யம் பூட்டச் செய்து, முடிச்சிலும் திருமாங்கல்யத்திலும், உமாமஹேசுவர மந்திரத்தாலும், கவச மந்திரத்தாலும், திருநீறு, சந்தனம், மஞ்சள், குங்குமம், சாத்தச் செய்க.

அக்நியில் சிவமூலமந்திரத்தால் பதினாறு ஆகுதிகள் கொடுத்து, மதுவர்க்கம் (வாழைப்பழம், தேன், சர்க்கரை, பால்) நிவேதித்துப் பொரியினால் பலியிடுக. மணமக்களுக்கு ஹிருதயமந்திரத்தால் கோதரிசனம் செய்விக்க. பால்பாத்திரத்தில் புஷ்பங்களை இட்டுப் பெரியவர்களைக் கொண்டு மணமக்களுக்குப் பூமணம் செய்விக்க. குண்டத்தின் வடபக்கத்தில் அம்மியை வைத்துச் சந்தனம், அட்சதை, வஸ்திரம் புஷ்பம் சாத்தி, ஹ்ருதய மந்திரத்தால் அர்ச்சித்து, மணமகளின் வலது கையை மணமகனின் வலது கையால் மணமேடையிலிருந்து வாமதேவ மந்திரம் ஓதிப் பிடித்து வரச் செய்து மணமகளின் வலது காலை மணமகன் பிடித்துச் சிவகாயத்திரி மந்திரத்தால் அம்மியின்மீது வைக்கும்படி செய்க. மணமக்களை உமாமஹேசுவர மந்திரத்தால் அக்நியில் பொரியிட்டு வணங்கச் செய்க. அகோர மந்திரத்தால் பதினாறு பிராயச்சித்த ஆகுதிகள் செய்து பூரணாகுதி கொடுத்துச் சிவத்தையும் அக்நியையும் உத்தாபனம் செய்க. ஓம் ஹாம் அருந்த[4]த்யை நம: என்று மணமகள் அருந்ததியைத் தெரிசிக்கும்படி செய்க, மணமக்களுக்குத் திருநீறு, ரக்ஷை கொடுத்து மணமக்களின் வலது கைகளைப் பட்டு வஸ்திரத்தால் மூடி மணமகள் வலது கையை மணமகன் வலது கையால் பிடித்துக் கொண்டு மணமேடை - சிவாக்நியை மும்முறை வலம்வரச் செய்க. திருமண வேளையில் திருமுறைகளை ஓதச் செய்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

கிரஹாரம்பம்

வீடுகட்டும் இடத்தைத் ஆழமாக உழுது எலும்பு, மயிர் கரி முதலிய அசுத்தப் பொருள்களை அப்புறப்படுத்திவிட்டுப் பசுக்களைக் கட்டி வைத்துக் கோசல கோமயம் முதலியவற்றால் நிலத்தைச் சுத்தப் படுத்திக் கொள்க.

தென் கிழக்கில் ஒரு முழச் சதுரத்தில் மண்டலம் செய்து, "மம க்^{3}ரஹாரம்ப மங்க^{3}ளக் க்ரியாயாம் ஆச^1ார்ய முகே^{2}ந க்ரியா கர்த்தும் யோக்^{3}யதா ஸித்^{4}தி^{4}ம் அநுக்^{3}ரஹாணும்'' என்று அநுக்ஞையும், சங்கற்பமும் செய்வித்து, விக்நேசுவர பூஜை, புண்ணியாவாசனம், பஞ்சகவ்யசேகரம் செய்து கொண்டு சிவகும்பம் வர்த்தனி கும்பங்கள் அமைத்து முறைப்படி பூசிக்க. வாஸ்துப்பிரம்மாவுக்கு ஒரு கும்பம் அமைத்துப் பூசிக்க. வெள்ளை வஸ்திரத்தில் அரிசி பரப்பி நடுவில் வாஸ்துப்பிரும்மனை நான்கு முகம் ஜெபமாலை கெண்டி கொண்ட மேற்கைகள், முழந்தாளிலும் பூமியிலும் ஊன்றிய கீழ்க்கைகள், தங்க நிறம், பத்மாசனம் உடையவராகவும், சயன விருப்பம் கொண்டவராகவும் தியானித்து முறைப்படி பூசிக்க. அவருக்குக் கிழக்கில் ஓம் ஹாம் மரீச^{1}யே நம: தெற்கில் ஓம் ஹாம் விவஸ்தாய நம: மேற்கில் ஓம் ஹாம் மித்ராய நம: வடக்கில் ஓம் ஹாம் த^{4}ராத^{4}ராய நம: தென் கிழக்கில் ஓம் ஹாம் ஸவிதாய நம: ஓம் ஹாம் ஸாவித்ராய நம: தென்மேற்கில் ஓம் ஹாம் இந்த்^{3}ராய நம: ஓம் ஹாம் இந்த்^{3}ரஜயாய நம: வடமேற்கில் ஓம் ஹாம் ருத்^{3}ராய நம: ஓம் ஹாம் ருத்^{3}ரஜயாய நம: வடகிழக்கில் ஓம் ஹாம் ஆபாய நம: ஓம் ஹாம் ஆபவத்ஸாய நம: வட கிழக்குமுதல் தென்கிழக்கு வரை ஓம் ஹாம் ஈசாநாய நம: ஓம் ஹாம் பர்ஜந்யாய நம: ஓம் ஹாம் ஜயந்தாய நம: ஓம் ஹாம் மஹேந்த்^{3}ராய நம: ஓம் ஹாம் ஆதி^{3}த்யாய நம: ஓம் ஹாம் ஸத்யகாய நம: ஓம் ஹாம் ப்ருஸாய நம: ஓம் ஹாம் அந்தரிக்ஷாய நம: தென் கிழக்கு முதல் தென் மேற்கு வரை ஓம் ஹாம் அக்^{3}நயே நம: ஓம் ஹாம் பூஷ்ணே நம: ஓம் ஹாம் வித^{3}தே^{4} நம: ஓம் ஹாம் க^{3}ரஹக்ஷதாய நம: ஓம் ஹாம் யமாய நம: ஓம் ஹாம் க^{3}ந்த^{4}ர்வாய நம: ஓம் ஹாம் ப்^{4}ருங்க^{3}ராஜாய நம: ஓம் ஹாம் ம்ருக^3ாய நம: தென்மேற்கு முதல் வடமேற்கு வரை ஓம் ஹாம் நிருருதயே நம: ஓம் ஹாம் தௌ^{3}வாரிகாய நம: ஓம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

ஹாம் ஸுக்^{3}ரீவாய நம: ஓம் ஹாம் புஷ்பத^{3}ந்தாய நம: ஓம் ஹாம் ப்ரசே^{1}தஸே நம: ஓம் ஹாம் அஸுராய நம: ஓம் ஹாம் சோஷாய நம: ஓம் ஹாம் ரோக^{3}ாய நம: வட மேற்கு முதல் வடகிழக்கு வரை ஓம் ஹாம் வாயவே நம: ஓம் ஹாம் நாக^{3}ாய நம: ஓம் ஹாம் முக்^{2}யாய நம: ஓம் ஹாம் ப^{2}லாடகாய நம: ஓம் ஹாம் ஸோமாய நம: ஓம் ஹாம் ம்ருக^{3}ாய நம: ஓம் ஹாம் தி^{3}தயே நம: ஓம் ஹாம் அதி^{3}தயே நம: கிழக்கில் ஓம் ஹாம் ச^{1}ரக்யை நம: தெற்கில் ஓம் ஹாம் வித^{3}ார்யை நம: மேற்கில் ஓம் ஹாம் பூதநாயை நம: வடக்கில் ஓம் ஹாம் பாபராக்ஷஸ்யை நம: தென்கிழக்கில் ஓம் ஹாம் ஸ்கந்த^{3}ாய நம: தென்மேற்கில் ஓம் ஹாம் அர்யம்ணே நம: வடமேற்கில் ஓம் ஹாம் ஜம்ப^{4}ாய நம: வடகிழக்கில் ஓம் ஹாம் பிலிபிஞ்ச^{2}ாய நம: என்றும் அர்ச்சிக்க.

கிழக்கில் குண்டம் அமைத்து அக்நிஸ்தாபனத்தை முறைப்படி செய்து ஓம் ஹாம் வாஸ்த்வாதி^{4} பதயே ப்^{3}ருஹ்மணே ஸ்வாஹா என்று 108 ஆகுதியும் மேலே கண்ட பரிவார மூர்த்திகளுக்கு ஒவ்வோராகுதியும் செய்து கூஷ்மாண்ட பலி கொடுத்து அக்நியை உத்தாபனம் செய்து காய்ந்த தென்னை ஓலைகளால் கட்டப்பெற்ற தொகுதியில் தர்ப்பை, மாவிலை, புஷ்பம் கட்டிச் சந்தனம், குங்குமம் சாத்தி நாற்சுத்திகள் செய்து நுனியில் குண்ட அக்நியை நிறுத்தி மனை இடத்தில் வலம்வரச்செய்து புண்ணியாவாசன ஜலத்தை அஸ்திர மந்திரத்தால தெளிக்க.

வடகிழக்கு மூலையில் ஒரு முழச்சதுரம் ஒரு முழ ஆழத்தில் பள்ளம் தோண்டி வாஸ்து கும்ப ஜலத்தை இருதய மந்திரத்தால் சேர்த்து வாஸ்துப் பிரம்மாவைப் பூசிக்க.

கிரஹப் பிரவேசம்

வீட்டுக்குரியவர்கள், உறவினர்கள், நண்பர்களுடன் விநாயகராலயம் சென்று வழிபாடு செய்து கொள்க. அங்கிருந்தோ அல்லது அருகிலுள்ள பொது இடங்கள், வீடுகளிலிருந்தோ விளக்கு, நிறைகுடம், நிறைநாழி, கணக்குப்புத்தகம், பேனா பணப்பை வைத்த பெட்டியுடன் மங்கல வாத்தியங்கள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

முழங்கப் பசுவைக் கன்றுடன் அலங்கரித்து முன்னே வரச் செய்து, புதுவீட்டு வெளிவாயிலை அடைக, வாயிலில் பசுவையும் கன்றையும் நிறுத்தி அவற்றின் வால்பக்கத்தில் ஓம் ஹாம் கபிலே நந்தே^{3} நம: ஓம் ஹாம் கபிலே ப^{4}த்^{3}ரே நம: ஓம் ஹாம் கபிலே ஸுரபே^{4} நம: ஓம் ஹாம் கபிலே ஸுசீலே நம: ஓம் ஹாம் கபிலே ஸுமநஸே நம: என்னும் மந்திரங்களால் முறைப்படி பூசித்துத் தேங்காய், பழம், தாம்பூலம், சர்க்கரை கலந்த பச்சரிசி நிவேதித்து, மங்கல வாத்தியம் பசு, விளக்கு நிறைகுடம், நிறைநாழி தாங்கிய மங்கல மகளிர், பணப் பெட்டி தாங்கிய வீட்டுக்குரியவர் முன்னே செல்ல அனைவரும் புதுவீடு புகுக.

வீட்டின் பிரதான வாயில் நிலையில் நடுவில் கஜலெட்சுமி, லெட்சுமிக்கு வலப்புறத்தில் விநாயகர், லெட்சுமிக்கு இடப்புறத்தில் சரசுவதி திருவுருவப் படங்களை வைத்து முறைப்படி பூசிக்க.

வீட்டினுள் பிரதான இடத்தில் உமாமகேசுவரர் திருவுருவப்படம் வைத்துக்கொள்க. கர்த்தாவுக்கு, "மம நூதந க்^{3}ருஹப்ரவேச மங்க^{3}ளக் க்ரியாயாம் ஆச^{1}ார்யமுகே^{2}ந க்ரியா கர்த்தும் யோக்^{3}யதா ஸித்^{4}தி^{4}ம் அநுக்^{3}ரஹாணும்" என்று அநுக்ஞையும், சங்கற்பமும் செய்விக்க. விக்நேசுவர பூஜை, புண்ணியாவாசனம், பஞ்சகவ்ய சேகரம் செய்து கொண்டு தீபலெட்சுமி பூஜை செய்து சிவகும்பம், வர்த்தனி கும்பங்கள் வைத்து முறைப்படி பூசித்து அக்நிகாரியம் செய்க.

புதுக்கணக்கு எழுதுதல்

கர்த்தாவுக்கு, "மம வ்யாபார ஸ்தாநே க^{3}ணிதலிக்ய மங்^{3}களக் க்ரியாயாம் ஆசார்ய முகே^{2}கந க்ரியா கர்த்தும் யோக்^{4} யதா ஸித்^{4}தி^{4}ம் அநுக்ரஹாணும்" என்று அநுக்ஞையும் சங்கற்பமும் செய்விக்க விக்நேசுவர பூஜை புண்ணியாவாசனம், பஞ்சகவ்யசேகரம், தீபலெட்சுமி பூஜை செய்து கணக்குப் புத்தகங்களில் சரசுவதி தேவியையும். பணப் பையில் லெட்சுமி தேவியையும் பணப்பெட்டியில் உமாதேவியையும் முறைப்படி பூசித்துப்புதுக்கணக்குஎழுதுவிக்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

சஷ்டியப்த பூர்த்தி சாந்தி

கர்த்தாவை முதல்நாள் காலையில் புண்ணிய தீர்த்த ஸ்நானத்திற்கு மனைவியுடன் இருக்க வைத்து, "..... கோ3த்ர உத்3ப4வஸ்ய .... நட்சத்ரே........ ராசௌ ஜாதஸ்ய....... நாமதேயஸ்ய மம ஷஷ்டியப்தே3 அதீதே ஏகதமே வர்ஷே புநப் ராப்தே ஜன்மமாஸே, ஜன்மருக்ஷேண யோதோஷ: ஸமஜநித தோ3ஷ பரிஹாரார்த்த2ம்......... நட்சத்ரே....... ராசௌ ஜாதாயா :.........நாம்நியா : மம த4ர்ம பத்நி ஸகித சிவதீர்த்2த ஸ்நாநமஹம் கர்த்தும் யோக்3யதா ஸித்4தி4ம் அநுக்3ர ஹாணும்" என்று அநுக்ஞை செய்விக்க. பவித்திரம் கொடுத்துச் சங்கற்பம் செய்வித்துக் கணபதி, குருவணக்கம், பிராணுயாமம் செய்விக்க. தீர்த்தத்தில் ஓம் ஹாம் வருணுஸநாய நம: ஓம் ஹாம் வருணமூர்த்தயே நம: ஓம் ஹாம் வருணுய நம: என்று அர்ச்சித்து மீன் வாகனத்தில் வலது கையில் நீலோத்பலமும் இடது கையில் பூரண கும்பமும் கொண்டு வெண்ணிறத் திரு மேனியுடனிருக்கும் கங்கா தேவியைத் தியானித்து ஓம் ஹாம் க3ங்க3ாஸநாய நம: ஓம் க3ாம் க3ங்க3ா மூர்த்தயே நம: என்று அர்ச்சித்து, ஆவாகனுதிகள் செய்து ஓம் க3ாம் க3ங்க3ாயை நம: என்று பூசித்துப் பாத்திய ஆசமன அர்க்கியம் கொடுத்து ஓம் க3ங்க3ாயை நம: ஓம் யமுநாயை நம: ஓம் கோ3தா3 வர்யை நம: ஓம் ஸரஸ்வத்யை நம: ஓம் நர்மத3ாயை நம: ஓம் ஸிந்த4வே நம: ஓம் காவேர்யை நம: என்று அர்ச்சித்துத் தூப தீபம் கொடுத்து ஹிருதய மந்திரத்தால் நைவேத்தியம் செய்து கங்கா மூலத்தால் கற்பூரம் காட்டுவிக்க. ஸ்நானம் முடித்துப் பவித்திர விஸர்ஜனம் செய்து, அநுட்டானம் செய்து கொண்டு, விநாயகராலய வழிபாடு செய்து இல்லத்துக்கு வருக.

சாந்தி மண்டபத்தில் கர்த்தாவுக்குத் திருநீறு, பவித்திரம், பூணூல் கொடுத்து "மம சிவாக3மோக்த ஷஷ்ட்யப்3த3 பூர்த்தி சாந்தி மங்க3ள கர்மாங்க நாந்தி சோபநக் க்ரியாயாம் ஆச1ார்ய முகே2ந க்ரியா கர்த்தும் யோக்3யதா ஸித்4தி4ம் அநுக்3ர ஹாணும்" என்று நாந்தி சோபன அநுக்ஞையும் சங்கற்பமும் செய்விக்க. விக்நேசுவர பூஜை, புண்ணியாவாசனம், பஞ்சகவ்ய சேகரம் செய்து கொண்டு நாந்தி சோபனம் செய்விக்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

மாலையில் மங்கல வாத்தியம் முழங்க உறவினர்களுடன் விநாயக ராலயம் சென்று வழிபாடு, கணபதி உபநிஷத் பாராயணம், திருமுறைப் பாராயணம் முடித்து ஆசாரியர்களுக்கு மாலை அணிவித்து அழைத்துக் கொண்டு வந்து வீட்டு வாயிலில் ஆசாரிய பூஜை செய்து உள்ளே செல்க.

சாந்தி மண்டபத்தில் ஆசாரியர்களுக்கு வஸ்திரம் கொடுக்க தம்பதிகளுக்குத் திருநீறு, பவித்திரம், பூணூல் கொடுத்து மாலை அணிவித்து, "மம சிவாக^{3}மோக்த ப்ராகாரேண ஷஷ்ட்யப்^{3}த^{3}பூர்த்தி சாந்தி மங்க^{3}ளகர்மக் க்ரியாயாம் ஆசார்ய முகே^{2}ந க்ரியா கர்த்தும் யோக்^{3}யதா ஸித்^{4}தி^{4}ம் அநு^{3}க்ர ஹாணும் என்று அநுக்ஞையும் சங்கற்பமும் செய்விக்க விக்நேசுவர பூஜை புண்ணியாவாசனம், செய்து ஆசாரியர் ஆசமனம், கணபதிகுரு வணக்கம், பிராணயாமம், சகளீகரணம், பூதசுத்தி, அந்தர்யாகம், ஸ்தானசுத்தி திரவியசுத்தி, ஆத்மபூசை, மந்திரசுத்தி, விசேடார்க்கியம், லிங்கசுத்தி, பஞ்சகவ்ய சேகரம் செய்து கொண்டு, கர்த்தாவைத் தீப லெட்சுமி பூசை செய்விக்க.

வேதிகையில் ஸ்தாபிக்கப் பெறும் மூர்த்திகளுக்குரிய மூல மந்திரங்களைத் தங்கம் வெள்ளித் தகடுகளில் ஆவாஹனம் செய்து அர்ச்சித்துப் பஞ்ச கவ்யம், பால் முதலியவற்றால் அபிஷேகித்துத் தூப தீப நைவேத்தியம் செய்து கற்பூரம் காட்டித் தகடுகளை நவரத்தினங்களுடன் அவ்வம் மூர்த்திகளின் மூல மந்திரங்களால் கலசங்களில் சேர்க்க.

ஒரு வேதிகையானால் பதினாறு கலசங்களும், மூன்று வேதிகைகளானால் அறுபத்து ஐந்து கலசங்களும் வைத்துக் கொள்க. பதினாறு கலசங்களானால் :-

1. மிருத்யுஞ்ஜயேசுவரர்
2. மிருத்யுஞ்ஜயேசுவரி
3. அமிர்தேசுவரர்
4. அமிர்தேசுவரி
5. விநாயகர்
6. ஸ்கந்தர்
7. பைரவர்
8. வீரபத்திரர்
9. துர்க்கை
10. அஸ்திரதேவர்
11. சிவசூரியன்
12. திருநந்தி தேவர்
13. சமய குரவர்
14. சந்தான குரவர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

15. கங்கை 16. யமுனை

ஆகிய மூர்த்திகளையும், அறுபத்து ஐந்து கலசங்களாலும் நடுவேதிகையில்,

1. அமிர்தேசுவரர் 2. அமிர்தேசுவரி
3. சந்திரசேகரர் 4. சபாபதி
5. ரிஷபாரூடர் 6. கல்யாண சுந்தரர்
7. அரியர்த்தர் 8. அர்த்த நாரீசுவரர்
9. சண்டேசாநுக்ரகர் 10. நீலகண்டர்
11. சக்கரப்ரதர் 12. விக்நேசுவராநுக்ரகர்
13. சோமாஸ் கந்தர் 14. சுகாசீனர்
15. தக்ஷிணாமூர்த்தி 16. லிங்கோத்பவர்
17. ஏகபாதர் 18. கங்காளர்
19. பிக்ஷாடனர்

தென்பக்க வேதிகையில்

1. மிருத்யுஞ்ஜயேசுவரர் 2. மிருத்யுஞ்ஜயேசுவரி
3. காமாரி 4. காலாரி
5. திரிபுராரி 6. சலந்தராரி
7. கஜாரி 8. வீரபத்திரர்
9. பைரவர் 10. கிராதர்
11. கங்காளர் 12. கணபதி
13,14. ஸித்தலெட்சுமி, வல்லபை 15. ஸ்கந்தர்
16,17. வள்ளி, தேவயானை 18. திருநந்தி தேவர்
19. சண்டேசர் 20. உருத்திரன்
21. துர்க்கை 22. கங்கை
23. யமுனை

வடபக்க வேதிகையில்,

1. சிவசூரியன் 2, 3. உஷாதேவி, ப்ரத்யுஷாதேவி
4. சந்திரன் 5. புதன்
6. பிரஹஸ்பதி 7. பார்க்கவன்
8. அங்காரகன் 9. சனைஸ்சரன்
10. ராகு 11. கேது
12. லெட்சுமி 13. சரசுவதி
14. பிரம்மா 15. விஷ்ணு
16. இந்திரன் 17. அக்நி

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

18. யமன் 19. நிருருதி
20. வருணன் 21. வாயு
22. குபேரன் 23. ஈசானன்

ஆகிய மூர்த்திகளேயும் ஆவாகனம் செய்க. சமய விசேட தீட்சிதர்களுக்கு மேற்கண்ட முறையிலும் நிருவாண தீட்சிதர்களுக்குக் கீழ்க்கண்ட முறையிலும் கலச மூர்த்திகளே ஆவாகனம் செய்க.

1. மிருத்யுஞ்ஜயேசுவரர் 2 மிருத்யுஞ்ஜயேசுவரி
3. அமிர்தேசுவரர் 4. அமிர்தேசுவரி
5. விநாயகர் 6 ஸ்கந்தர்
7. பைரவர் 8. வீரபத்திரர்
9. சிவசூரியன் 10. சிவாஸ்திர தேவர்
11. பாசுபதாஸ்திரதேவர் 12. அகோராஸ்திரதேவர்
13. பிரத்யங்கிராஸ்திரதேவர் 14. காலாநலாஸ்திரதேவர்
15. க்ஷுரிகாஸ்திரதேவர் 16 வியோமாஸ்திரதேவர்

பிரதான கலசத்தில் அஸ்திர மந்திரத்தால் சாமான்யார்க்கிய ஜலத்தைப் புரோக்ஷித்து, "ஓம் ஹாம் தந்மஹேசாய வித்[3]மஹே வாக்[3] விசுத்தா[4]ய தீ[4]மஹி தந்நு சிவ ப்ரசோ[1]தயாத்" என்ற சிவகாயத்திரி மந்திரத்தால் அர்ச்சிக்க

பிரதான வேதிகை அமிர்தேசுவர மூர்த்திக்கு (ஓம் ஹாம் அம்ர்தேச்வராய நம:) ஓம் ஹாம் ஆத[4]ார சக்தயே நம: ஓம் ஹாம் அநந்தாஸநாய நம: ஓம் ஹாம்ஸிம்ஹாஸநாய நம ஓம் ஹாம் யோக[3]ாஸநாய நம: ஓம் ஹாம் பத்[3]மாஸநாய நம: ஓம் ஹாம் விமலாஸநாய நம ஓம் ஹாம் சிவாஸநாய நம: என்று, பஞ்சாசனம் அல்லது ஷடுத்தாசனம் அர்ச்சித்து. அமிர்தேசுவரரைச் செந்நிறம், நான்கு கைகள், மூன்று கண்கள், வலது மேற்கையில் உடுக்கை, இடது மேற்கையில் அக்நி, கீழ்க்கைகள் அபய வரதம், சடாமகுடம், சந்திர சூடனம், பூணூல், தோலாடை உடையவராகத் தியானித்து ஆசன மூர்த்தி மூல மந்திரங்களால் அர்ச்சித்து, வித்தியாதேகம் கற்பித்து, நேத்திரம் கொடுத்துக் கலசத்தில் சுவாமியை ஒளிவடிவமாகவும், தண்டாகாரமாகவும் தியானித்துப் பஞ்சப் பிரம மந்திரங்களால் உச்சி, புருவநடு, மார்பு, நாபி, முழந்தாளில் தர்ப்பை முஷ்டிகொண்டு தொட்டுத் தண்டபங்கி நியாசமும்; உச்சி, கிழக்கு, தெற்கு வடக்கு,

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

மேற்கு சிரசுகளில் முறையே, "ஓம் ஹோம் ஈசான மூர்த்தா⁴ய நம: ஓம் ஹேம் தத்புருஷ மூர்த்த⁴ாய நம: ஓம் ஹூம் அகோ⁴ர மூர்த்த⁴ாய நம: ஓம் ஹிம் வாமதே³வ மூர்த்த⁴ாய நம: ஓம் ஹம் ஸத்³யோஜாத மூர்த்த⁴ாய நம." என்று முண்ட பங்கி நியாசமும்; உச்சி, கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்கு முகங்களில், "ஓம் ஹோம் ஈசான வக்த்ராய நம: ஓம் ஹேம் தத்புருஷ வக்த்ராய நம: ஓம் ஹூம் அகோ⁴ர வக்த்ராய நம: ஓம் ஹிம் வாமதே³வ வக்த்ராய நம:" ஓம் ஹம் ஸத்³யோ ஜாத வக்த்ராய நம:" என்று வக்த்ர பங்கி நியாசமும்; கலா மந்திரங்களால், உச்சி, புருவநடு, மார்பு, நாபி, முழந்தாளில் தொட்டு கலா பங்கி நியாசமும் செய்க. பின்னர் அஷ்டத்ரிம் சத்கலா நியாசம் (ஓம் ஹாம் அஷ்டத்ரிம் சத்கலா சக்திப்⁴ யோம் நம!) ஷடத்வநியாசமும் (ஓம் ஹாம் மந்த்ரபதவர்ண பு³வந தத்வ கலேப்⁴யோம் நம:) அந்தர், பஹிர் மாத்ருகா நியாசங்கள் (ஓம் ஹாம் அந்தர் ப³ஹிர் மாத்ருகாப்⁴யாம் நம:) சிவாகம நியாசம் (ஓம் ஹாம் அஷ்டவிம்சத் சிவாக³மாப்⁴ யோம் நம:) தத்துவ தத்துவேசுவர நியாசம் (ஓம் ஹாம் தத்வ தத்வேச்வராப்⁴யாம் நம:) மூர்த்தி மூர்த்தீசுவர நியாசம் (ஓம் ஹாம் மூர்த்தி மூர்த்தீச்வராப்⁴யாம் நம:) பஞ்சாட்சர நியாசம் (ஓம் ஹாம் ஸ்ரீ பஞ்சாட்சரேப்⁴யோம் நம:) ஆகிய வைகளும் செய்க புஷ்பாஞ்சலி செய்து சிவமூல மந்திரத்தால் சாத்தி, ஆவாகனுதிகள் செய்து தேனு முத்திரை கொடுத்து "ஸ்வாமிந் ஸர்வ ஜகந்நாத² யாவத் பூஜா வஸாநகம், தாவத் ஸம் ப்ரீதி ப⁴ாவேந கும்பே⁴ஸ்மிந் ஸந்நிதீப⁴வ" என்று பிரார்த்தித்துப் பாத்திய ஆசமன அர்க்கியம் கொடுத்து, அபிஷேகத்தின் பொருட்டு விசேடார்க்கிய ஜலத்தைப் புரோக்ஷித்துப் புஷ்பம் சாத்துக. சம்ஹிதா மந்திரங்களால் லயாங்கம் அர்ச்சித்து, முதலாவரண சம்ஹிதா மந்திர மூர்த்திகள் (ஓம் ஹாம் ப்ரத²மாவரண ஈசாநாதி³ பஞ்சப்ருஹ்ம ஷட³ங்க³ மந்த்ரேச்வரேப்⁴யோம் நம:) இரண்டாமாவரண அஷ்ட வித்தியேசுவரர்கள் (ஓம் ஹாம் த்³விதீயாவரண அநந்தாதி³ வித்³யேச்வரேப்⁴யோம் நம:) மூன்ருமாவரணத் தேவர்கள் (ஓம் ஹாம் த்ருதீயாவரண நந்த்³யாதி³ பரிவார தே³வதாப்⁴ யோம் நம:) நான்காமாவரணத்திக்குப் பாலகர்கள் (ஓம் ஹாம் ச¹துர்த்²தாவரண இந்த்³ராதி³ தி³க்பாலேப்⁴யோம் நம:)

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

ஐந்தாமாவரண ஆயுதமூர்த்திகள் (ஓம் ஹாம் பஞ்ச[1]மாவரண வஜ்ராதி[3] த[3]சாயுதேப்[4]யோம் நம:) ஆகியோர்களை அர்ச்சிக்க.

அமிர்தேசுவரி கலசத்தில் ஷடுத்தாசனம் அர்ச்சித்து, ஆசனமூர்த்தி மூல மந்திரங்களால் பூசித்துப் பச்சை நிறம், கிரீட மகுடம், விரல்கள் வளைந்த வலக்கை வரதம் கொண்ட இடக்கை உடையவராகத் தியானித்து, ஆவாகனுதிகள் செய்து, தேனு முத்திரை காட்டி, நாமநியாசம் செய்து, பாத்திய ஆசமன அர்க்கியம் கொடுத்துப் புஷ்பம் சாத்துக. (ஓம் ஹாம் அம்ர்தேச்வர்யை நம:)

பரிவார மூர்த்திகளை அவ்வக் கலசங்களில் ஆசன மூர்த்தி மூலத்தாலர்ச்சித்து ஆவாகனுதிகளுடன் நாம நியாசம் செய்து பாத்திய ஆசமன அர்க்கியம் கொடுத்துப் புஷ்பம் சாத்துக.

மிருத்யுஞ்ஜயேசுவர மூர்த்திக்குப் பஞ்சாசனம் அல்லது ஷடுத்தாசனம் அர்ச்சித்துச் செந்நிறம், மூன்று கண்கள், சடா மகுடம், வலது மேற்கையில் அக்நி கீழ்க்கையில் சூலம், இடது மேற்கையில் மழு கீழ்க்கையில் பாசம், சந்திர சூடனம், ஊன்றிய வலப்பாதம், சிறிது தூக்கிய இடப்பாதம், புலித்தோலாடை, யமனைக் குத்துகின்ற கீழ்நோக்கிய சூலத்தில் பார்வை உடையவராகத் தியானித்து அமிர்தேசுவரர் பூசையில் கூறியபடி ஆசன மூர்த்தி மூல அர்ச்சனையிலிருந்து ஐந்தாமாவரண பூசை வரை செய்க. (ஓம் ஜூம் ஸ: ம்ருத்யுஞ்ஜயேச்வராய நம:)

மிருத்யுஞ்ஜயேசுவரி கலசத்தில் ஷடுத்தாசனம் அர்ச்சித்து ஆசன மூர்த்தி மூல மந்திரங்களால் பூசித்துப் பச்சை நிறம், கரண்ட மகுடம், சர்வாபரண பூஷிதம், நீலோத்பலம் கொண்ட வலக்கை, தொங்குகின்ற இடக்கை உடையவராகத் தியானித்து, ஆவாகனுதிகள் செய்து தேனு முத்திரை காட்டி நாமநியாசம் செய்து பாத்திய ஆசமன அர்க்கியம் கொடுத்துப் புஷ்பம் சாத்துக. (ஓம் ஹாம் ம்ருத்யுஞ்ஜயேச்வர்யை நம:)

பரிவார மூர்த்திகள் சகிதப் பிரதான மூர்த்திக்கு அகோர மந்திரத்தால் தூபமும், நேத்திர மந்திரத்தால் தீபமும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

காட்டி நைவேத்தியத்தை அஸ்திர மந்திரத்தால் புரோக்ஷித்துக் கவச மந்திரத்தால் நீர் சுற்றி 'ஓம் ஸபரிவாராய ஹாம் ஹௌம் சிவாய ஸ்வாஹா'' என்று நிவேதித்துத் தூப தீபம் கற்பூரம் காட்டி அர்க்கியம் கொடுத்துப் புஷ்பாஞ்சலி செய்து சுவாமியிடம் அக்நிகாரியத்துக்கு அநுமதி பெற்றுக் கொள்க.

விநாயகர் தியானம்

செந்நிறம், ஆனைமுகம், பெருவயிறு, வலக்கைகளில் பாசம்-தந்தம் இடக்கைகளில் அங்குசம்-மாம்பழம், மூஷிக வாகனம் (ஓம் கா^{3}ம் க^{3}ணபதயே நம:)

ஸ்கந்தர்

செந்நிறம், சந்திரப்பிரகாச முகம், வலக்கைகளில் தாமரை – அபயம், இடக்கைகளில் வேல் - சேவல், மயூர வாகனம் (ஓம் ஹாம் ஸ்கந்தாய நம:)

பைரவர்

செந்நிறம், முக்கண்கள் வலக்கைகளில் உடுக்கை-பாசம், இடக்கைகளில் சூலம் - தலையோடு நாய் வாகனம் (ஓம் ப^{4}ம் பை^{4}ரவாய நம:)

வீரபத்திரர்

நீலநிறம், மலர்ந்த முகம், நீலகண்டம், முக்கண்கள் வலக்கைகளில் வாள் – தண்டம், இடக்கைகளில் கேடகம்-தலையோடு, செஞ்சடை, செவ்வாடை, கால்களில் சலங்கை (ஓம் விம் வீரப^{4}த்^{3}ராய நம:)

துர்க்கை

கருநீலநிறம், கரிய கூந்தல், வலக்கைகளில் சங்கம்-அபயம், இடமேற்கையில் சக்கரம், துடையில் வைத்த இடது கை. எருமைத் தலையில் மிதித்த பாதங்கள் (ஓம் ஹ்ரீம் து^{3}ர்கா^{3} தே^{3}வ்யை நம:)

அஸ்திர தேவர்

கருநிறம், முக்கண்கள், வலக்கைகளில் சூலம்-அபயம், இடக்கைகளில் தலையோடு-வரதம் (ஓம் ஹ: அஸ்த்ராய நம:)

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

சிவசூரியன்

மாதுளம் பழ நிறம், வெண்டாமரையாசனம், தண்டுகள் கூடிய தாமரை மலர்கள் தோளில் பொருந்தப் பிடித்த கைகள் (ஓம் ஹ்ராம் ஹ்ரீம் ஸ: சிவஸூர்யாய நம:)

திருநந்தி தேவர்

செந்நிறம், செஞ்சடை, முக்கண்கள், வலமேற்கையில் அட்சமாலை, இடமேற்கையில் மழு, கூப்பிய கீழ்க்கைகள். (ஓம் ஹாம் நந்தி[3]நே நம:)

சமய குரவர், சந்தான குரவர்

வெண்ணிறம், பத்மாசனம், கைகளில் அட்சமாலை. சின்முத்திரை, யோக பட்டம் ((ஓம் ஹாம் சமய கு[3]ருப்[4]யோ நம: ஸந்தாந கு[3]ருப்[4]யோ நம:)

கங்கை

வெண்ணிறம், வலக்கையில் சாமரம், இடக்கையில் கலசம், மீன் வாகனம் (ஓம் க[3]ம் க[3]ங்கா[3]யை நம:)

யமுனை

பச்சை நிறம், வலக்கையில் சாமரம், இடக்கையில் கலசம், ஆமை வாகனம் (ஓம் ஹாம் யமுநாயை நம.)

சந்திரசேகரர்

செந்நிறம், மலர்ந்த முகம், முக்கண்கள், சந்திர சூடனம், வலக்கைகளில் மழு-அபயம். இடக்கைகளில் மான்-வரதம், இடப்பக்கத்தில் உமாதேவியுடன் நின்ற வடிவம் (ஓம் ஹாம் [1]சந்த்[3]ர சேக[2]ராய நம)

சபாபதி

செந்நிறம், முக்கண்கள், வலக்கைகளில் உடுக்கை-அபயம், இடக்கைகளில் அக்நி-வரதம், முயலகன் மேல் ஊன்றிய வலது கால், தூக்கிய இடது கால், இடப் பக்கத்தில் சிவகாமி (ஓம் ஹாம் ஸபா[4]பதயே நம)

ரிஷபாரூடர்

செந்நிறம். முக்கண்கள், சடாமகுடம், வலக்கைகளில் உடுக்கை-அபயம், இடமேற்கையில் மான், உமாதேவியை

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

அணைத்த இடக்கீழ்க் கை, இடபவாகனம். (ஓம் ஹாம் வ்ருஷபா[4]ரூடா[3]ய நம :)

கல்யாண சுந்தரர்

செந்நிறம், கங்கை கூடிய சடை, வலக்கைகளில் மான் — அபயம், இடமேற்கையில் மழு, உமாதேவியை அணைத்த இடக்கீழ்க்கை, கீழ்நோக்கித் தொங்கும் வலது கால், மடக்கிய இடது கால் (ஓம் ஹாம் கல்யாண ஸுந்த[3]ராய நம :)

அரியர்த்தர்

வலப்பாதி செந்நிறம், இடப்பாதி நீல நிறம், வலப் பாகம் சிவன், இடப்பாகம் விஷ்ணு, விஷ்ணு பாகத்தில் ரத்தின முடி, பொன்னுடை, சர்வாபரண பூஷிதம், மேற் கையில் சக்கரம், தொங்கும் கீழ்க்கை; சிவன் பாகத்தில் சடை முடி, சந்திர சேகரம், விபூதி ருத்திராட்சதாரணம், புலித்தோலாடை, சர்ப்ப வளையல், சர்ப்பாபரணம், காதில் குண்டலம், வலது மேற்கையில் சூலம், தொங்கும் கீழ்க் கை. (ஓம் ஹாம் ஹரியர்தா[4]ய நம :)

அர்த்த நாரீசுவரர்

வலப்பக்கம் சிவன், இடப்பக்கம் உமாதேவி, சிவன் செந்நிறம், தேவி பசுமை நிறம், தேவி பாகத்தில் மணி மகுடம், பட்டாடை, சர்வாபரண பூஷிதம், மேற்கையில் நீலோத்பலம், கீழ்க்கையில் வரதம், சிவன் பாகத்தில் சந்திர சேகரச் சடைமுடி, விபூதி ருத்திராட்ச தாரணம், புலித் தோலாடை, சர்ப்பாபரணம், சர்ப்பப் பூணூல், காதில் குண்டலம், மேற்கையில் உடுக்கை, கீழ்க்கையில் அபயம் (ஓம் ஹாம் அர்த்த[4]நாரீச்வராய நம :)

சண்டேசாநுக்கிரகர்

செந்நிறம், முக்கண்கள், சந்திர சேகரம், வலது மேற்கையில் உடுக்கை, சண்டேசர் சிரசில் வைத்த கீழ்க் கை, இடது மேற் கையில் மான், கீழ்க்கை வரதம், இடது பக்கத்தில் உமாதேவி (ஓம் ஹாம் ச[1]ண்டே[3]சாநுக்[3] ரஹாய நம :)

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

நீல கண்டர்

செந்நிறம், நெற்றி நெருப்புக் கண், விஷம் தாங்கிய வலக்கை, இடக் கையில் வரதம் (ஓம் ஹாம் விஷாபஹரண நீலகண்டா[2]ய நம:)

சக்கரப்ரதர்

செந்நிறம், மகாவிஷ்ணுவால் அர்ச்சிக்கப்பெற்ற ஆயிரம் தாமரை மலர்கள் உள்ள திருவடி, வலது மேற் கையில் உடுக்கை, மகாவிஷ்ணுவுக்குச் சக்கரம் வழங்கும் கீழ்க்கை, இடது மேற்கையில் மான், கீழ்க்கையில் வரதம் (ஓம் ஹாம் ச[1]க்ரப்ரஸாதா[3]ய நம:)

விக்நேசுவராநுக்ரகர்

செந்நிறம், சந்திரசேகரம், முக்கண்கள், சடைமுடி, விபூதி ருத்திராட்சதாரணம், வலது மேற்கையில் உடுக்கை, கீழ்க்கையில் அபயம், விநாயகரை அணைத்த இடது கீழ்க் கை, இடது மேற்கையில் மான். (ஓம் ஹாம் விக்[4]நேச்வரா நுக்[3]ரஹாய நம:)

சோமாஸ்கந்தர்

செந்நிறம், தொங்குகிற வலது கால், மடக்கிய இடது கால், வலது மேற்கையில் உடுக்கை, கீழ்க்கையில் அபயம், இடது மேற்கையில் மான் கீழ்க்கையில் வரதம் இடப் பக்கத் தில் உமாதேவி, மத்தியில் இரண்டு கைகளிலும் தாமரை தாங்கிய ஸ்கந்தர். (ஓம் ஹாம் ஸோமாஸ்கந்தா[3]ய நம)

சுகாசீனர்

வெண்ணிறம், சாந்த முகம், முக்கண்கள், குண்ட லக் காதுகள், சந்திர சேகரம் வலக்கைகளில் மான்- தண்டம், இடக்கைகளில் மழு - மணி தொங்குகின்ற வலது கால், மடக்கிய இடது கால், இடப்பக்கத்தில் உமா தேவி. (ஓம் ஹாம் ஸுகா[2]ஸீநாய நம:)

தட்சணாமூர்த்தி

படிக நிறம், ஆலமர நிழலில் இருக்கை, சந்திர சேகரம் விபூதி ருத்திராட்சதாரணம், முக்கண்கள், வலக்கை

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

களில் அமுதகலசம் - சின் முத்திரை, இடக்கைகளில் உடுக்கை - ஏடு, தொங்குகிற வலது கால், வலது முழங் காலில் வைத்த இடது கால் (ஓம் ஹாம் த^{3}க்ஷிணு மூர்த்தயே நம :)

லிங்கோத்பவர்

சிவலிங்கத்தில் அடிமுடி மறைந்த திருவுருவம், வலக் கைகளில் மான் - அபயம், இடக்கைகளில் உடுக்கை- வரதம் மேலே அன்ன வடிவப் பிர்ம்மா, கீழே வராக வடிவ விஷ்ணு (ஓம் ஹாம் லிங்கோ^{3}த்^{3}ப^{4}வாய நம :)

ஏகபாதர்

செந்நிறம், நீலகண்டம், ஒருகால், வலக்கைகளில் சூலம் - அபயம் இடக்கைகளில் உடுக்கை - வரதம். (ஓம் ஹாம் ஏகபாதா^{3}ய நம :)

கங்காளர்

செந்நிறம், திரபுண்டரதாரணம், தோலாடை, இடது மேற்கையில் அக்நி, தொங்கும் கீழ்க்கை, வலக்கைகளில் மான் - சூலம். (ஓம் ஹாம் கங்காளாய நம :)

பிக்ஷாடனர்

செந்நிறம், வெள்ளாடை, விரித்தசடை, சந்திர சேகரம், வலக்கைகளில் உடுக்கை - தாமரை, இடக்கை களில் சூலம் - தலையோடு வலது பக்கத்தில் நாய் இடது பக்கத்தில் பிக்ஷைப் பாத்திரம். (ஓம் ஹாம் பி^{4}க்ஷாடநாய நம :)

காமாரி

செந்நிறம், திருநீற்றுத் திருமேனி, சந்திர சேகரம், சடைமுடி, முக்கண்கள், வலக்கைகளில் உடுக்கை - அபயம், இடக்கைகளில் மான் - வரதம், யோக நிலை, புலித் தோலாடை (ஓம் ஹாம் காமாரயே நம)

காலாரி

செந்நிறம், முக்கண்கள், வலக்கைகளில் உடுக்கை-

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

சூலம், இடக்கைகளில் அக்நி – பாசம், யமனை உதைத்த இடது கால் (ஓம் ஹாம் காலகாலாய நம:)

திரிபுராரி

செந்நிறம், மலர்ந்த முகம், வலக்கைகளில் மான்–அம்பு, இடக்கைகளில் உடுக்கை – வில், சந்திர சேகரம் சடைமுடி, (ஓம் ஹாம் திரிபுராந்தகாய நம:)

சலந்தராரி

செந்நிறம், வலக்கைகளில் உடுக்கை – சக்கரம், இடக்கைகளில் மழு - வரதம் மலர்ந்த முகம் (ஓம் ஹாம் ஜலந்தராந்தகாய நம:)

கஜாரி

செந்நிறம், சந்திரசேகரம், முக்கண்கள், குண்டலக் காதுகள், வலது மேற்கையில் அங்குசம், யானை மத்தகத்தில் வைத்த கீழ்க்கை, இடக் கைகளில் கபாலம் - வில் (ஓம் ஹாம் க[3]ஜாரயே நம:)

கிராதர்

செந்நிறம் உக்கிரப் பார்வை, வில்லும் அம்பும் பிடித்த கைகள், மரவுரியாடை. (ஓம் ஹாம் கிராதாய நம:)

ஸித்த லெட்சுமி

பொன்னிறம் கணபதிக்கு வலப்பக்கம், ரத்தினக் கிரீடம். சர்வாபரணபூஷிதம், இடக்கையில் தாமரை, தொங்கும் வலக்கை. (ஓம் ஹாம் ஸித்த[4]லக்ஷ்ம்யை நம:)

வல்லபை

பச்சை நிறம், கணபதிக்கு இடப்பக்கம், முத்துக் கிரீடம், சர்வாபரணபூஷிதம், வலக்கையில் நீலோத்பலம் தொங்கும் இடக்கை. (ஓம் ஹாம் வல்லபா[4]யை நம:)

தேவயானி

செந்நிறம், ஸ்கந்தருக்கு இடப்பக்கம், ரத்தினக் கிரீடம், சர்வாபரணபூஷிதம், வலக்கையில் நீலோத்பலம், தொங்கும் இடக்கை. (ஓம் ஹாம் க[4]ஜவல்யை நம:)

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

வல்லி

பச்சை நிறம், ஸ்கந்தகருக்கு வலப்பக்கம். ரத்தினக் கிரீடம் சர்வாபரணபூஷிதம், இடக்கையில் தாமரை, தொங்கும் வலக்கை. (ஓம் ஹ்ராம் வநவல்யை நம:)

சண்டேசர்

செந்நிறம், மலர்ந்த முகம், வெள்ளாடை திருநீற்றுத் திருமேனி, முக்கண்கள், வலது கையில் உடுக்கை, துடையில் வைத்த இடக்கை, சிவத்தியானம். (ஓம் ஹ்ராம் ச[1]ண்டே[3]சாய நம:)

உருத்திரன்

செந்நிறம் முக்கண்கள், சந்திரசேகரம், வலக்கைகளில் உடுக்கை – அபயம், இடக்கைகளில் மான் - வரதம், உமையிடப்பாகம் (ஓம் ஹ்ராம் ருத்[3]ராய நம:)

உஷா - பிரத்யுஷா தேவிகள்

செந்நிறம், மலர்ந்த முகம், தாமரை மலர்கள் தாங்கிய கைகள், சர்வாபரண பூஷிதம். (ஓம் அம் உஷாதே[3]வ்யை நம:, ஓம் அம் ப்ரத்யுஷா தே[3]வ்யை நம:)

நவக்கிரகங்கள்

சந்திரன் முல்லைப்பூ நிறம், செவ்வாய் பவள நிறம், புதன் பொன்னிறம், வியாழன் கோரோசனை நிறம், சுக்கிரன் பால் நிறம், சனி - ராகு கருநிறம், கேது புகை நிறம், அபய வலக்கை. துடையில் வைத்த இடக்கை (ஓம் ஸம் ஸோமாய நம:, ஓம் பு[3]ம் பு[3]தா[4]ய நம:, ஓம் ப்[3]ரும் ப்[3]ருஹஸ்பதயே நம: ஓம் ப[4]ம் பா[4]ர்க[3]வாய நம: ஓம் அம் அங்கா[3]ரகாய நம: ஓம் சம் சனைச்ச[1]ராய நம: ஓம் ரம் ராஹவே நம: ஓம் கம் கேதவே நம:)

லெட்சுமி

செந்நிறம், செந்தாமரை ஆசனம், மேற்கை இரண்டிலும் தாமரை, கீழ்க்கை இரண்டிலும் அபய வரதம், பத்மாசனம். (ஓம் ஹ்ராம் லக்ஷ்ம்யை நம:)

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

சரஸ்வதி

வெண்ணிறம், வெண்டாமரை ஆசனம், வெள்ளாடை, வலது மேற்கையில் ஜெபமாலை, இடது மேற்கையில் ஏடு, வீணை ஏந்திய கீழ்க்கைகள். (ஓம் ஹாம் ஸரஸ்வத்யை நம:)

ப்ர்ம்மா

வெண்ணிறம், வெண்டாமரை ஆசனம், நான்கு முகம், வலக்கைகளில் ஜபமாலை – சிருக்கு, இடக்கைகளில் கமண்டலம் – தண்டம், அன்ன வாகனம். (ஓம் ஹாம் ப்³ர்ஹ்மணே நம:)

விஷ்ணு

நீலநிறம், வலக்கைகளில் சக்கரம் – கதை, இடக்கைகளில் சங்கு – தாமரை, கருட வாகனம். (ஓம் ஹாம் விஷ்ணவே நம:)

இந்திரன்

பொன்னிறம். வஜ்ரம். அங்குசம், வரதம், அபயம் கூடிய கைகள், வெள்ளை யானை வாகனம். (ஓம் ஹாம் இந்த்³ராய நம:)

அக்நி

செந்நிறம், கமண்டலம் அக்ஷமாலை சக்தி வரதம் கூடிய கைகள், ஆட்டுக்கடா வாகனம். (ஓம் ஹாம் அக்³நயே நம:)

யமன்

கருநிறம், தண்டம் பாசம் அபயம் வரதம் கூடிய கைகள், எருமைக்கடா வாகனம் (ஓம் ஹாம் யமாய நம:)

நிருருதி

செந்நிறம், கட்கம் கேடகம் வரதம் அபயம் கூடிய கைகள், பூதவாகனம் (ஓம் ஹாம் நிருருதயே நம:)

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

வருணன்

வெண்ணிறம், பாசம் தாமரை அபயம் வரதம் கூடிய கைகள், மீன் வாகனம் (ஓம் ஹாம் வருணாய நம:)

வாயு

புகை நிறம், கொடி தாமரை அபயம் வரதம் கூடிய கைகள், மான் வாகனம். (ஓம் ஹாம் வாயவே நம:)

குபேரன்

பொன்னிறம், கதை நிதி அபயம் வரதம் கூடிய கைகள், குறுகிய வடிவம், மனித வாகனம் (ஓம் ஹாம் குபே^{3}ராய நம:)

ஈசானன்

வெண்ணிறம், முக்கண்கள், சூலம் பாசம் அபயம் வரதம் கூடிய கைகள், இடப வாகனம் (ஓம் ஹாம் ஈசானாய நம:)

சிவாஸ்திர தேவர்

நான்கு முகம், சந்திர சேகரம், ஒளியுள்ள சடை, வலக்கைகளில் சத்தி – அபயம், இடக்கைகளில் சூலம்– வரதம், உக்கிரப் பார்வை, துஷ்டர்களை அழிக்கும் நிலை. (ஓம் ஹாம் சிவாஸ்த்ராய நம:)

பாசுபதாஸ்திர தேவர்

ஐந்து முகம், சந்திர சேகரம், பிரணவ ஆசனம், கோடி சூரியப் பிரகாசம் பதினைந்து கண்கள், கோரப் பல், நாக்கைத் தொங்கச் செய்து அசைத்தல், வலக்கைகளில் அக்நி வேதாளம் சூலம் சத்தி அங்குசம், இடக்கைகளில் எறிவேல் சக்கரம் வாள் அக்நி அம்பு. (ஓம் ச்லீம் பம் சும் ஹூம் பட் பாசுபதாஸ்த்ராய நம:)

அகோராஸ்திர தேவர்

கருநிறம், நான்கு முகம், முக்கண்கள், தொங்குகிற நாக்கு, சந்திர சேகரம், உக்கிரப் பார்வை, சர்ப்பப் பூணூல்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

சர்ப்பாபரணம். (ஓம் ஹ்ரீம் புர புர ப்ரஸ்புர ப்ரஸ்புர கோ⁴ர கோ⁴ர தநுரூப தநுரூப ச¹ட ச¹ட ப்ரச¹ட ப்ரச¹ட கஹ கஹ வம் வம் ப³ந்த⁴ ப³ந்த⁴ கா³தய கா³தய ஹூம்பட் அகோ⁴ராஸ்த்ராய நம:)

பிரத்யங்கிராஸ்திர தேவர்

சிம்ம முகம், உக்கிரப் பார்வை, சூலம், உடுக்கை, அபய வரதக் கைகள் (ஓம் ஹாம் ப்ரத்யங்கி³ராஸ்த்ராய நம:)

காலாவாஸ்திர தேவர்

நீலநிறம், தலையோடு, உடுக்கை - சூலம் மழுக் கைகள் (ஓம் ஹாம் காலாநலாஸ்த்ராய நம:)

க்ஷுரிகாஸ்திர தேவர்

கருநிறம், வாள் - கேடயக் கைகள், உக்கிர ரூபம் (ஓம் ஹாம் க்ஷுரிகாஸ்த்ராய நம:)

வியோமாஸ்திர தேவர்

புகை நிறம், வேல் - சூலக் கைகள், பெரிய வடிவம். (ஓம் ஹாம் வியோமாஸ்த்ராய நம:)

அக்நி காரியம்

பதினாறு கலசங்களானால் ஒரு வேதிகையின் முன் ஒரு குண்டமும், அறுபத்து ஐந்து கலசங்களானால் மூன்று வேதிகைகளின் முன் மூன்று குண்டலங்களும் அமைத்துக் கொள்க. வேதிகைகளை மூன்றடி உயரம் மூன்றடிச் சதுரத்திலும், அவற்றின் உபவேதிகைகளை நான்கு அங்குல உயரம், நான்கு அங்குல அகலத்திலும் அமைக்க வேண்டும். குண்டங்கள் உள்ளே பதினெட்டு அங்குலச் சதுரம் பதினெட்டு அங்குல உயரத்துடன் நான்கு அங்குல அகல உயர மேல் மேகலை. மூன்று அங்குல அகல உயர நடுமேகலை, இரண்டு அங்குல அகல உயரக் கீழ்மேகலை உடையனவாய் இருத்தல் வேண்டும்.

அக்நி காரிய விதியில் "சிவத்தைப் பூசித்து ஓமம் செய்க" என்பது கீழ்க்கண்ட படி செய்யத்தக்கது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

அக்நியின் இருதய கமலத்தில் ஷடுத்தாசனம் அல்லது பஞ்சாசனம் நெற்பொரியினுல் அர்ச்சித்துக் கலசத்தில் இருக்கும் பிரதான மூர்த்தியை ஆவாகனம் செய்து ஆசன மூர்த்தி மூலத்தாலும் சம்ஹிதா மந்திரங் களாலும் அர்ச்சித்துப் பஞ்சாவரணம் பூசித்துப் பரிவார மூர்த்திகளையும் ஆவாகனம் செய்து பூசித்துப் பிரதான மூர்த்திக்கு ஸ்வாஹாந்த சிவமூல மந்திரத்தால் நூற்றெட் டாகுதியும், சம்ஹிதா மந்திரங்களால் பத்து விதம் ஆகுதி களும் நெய்யினுல் கொடுத்துத், தானியங்கள், பால், தயிர், தேன், பொரி, விலாமிச்சை முதலிய வேர்கள் ஓஷதிகள், பழங்கள், கரும்பு, சந்தனுதி, சாம்பிராணீத் தைலங்கள், குங்குலியம், சந்தனக்கட்டை முதலியவற்றையும் பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி, அன்னம், பக்ஷயம், பாயசம், ஆகியவைகளையும் ஸ்வாஹாந்த சிவமூல மந்திரத்தால் ஆகுதி செய்க.

நெய்யால் நிரப்பப் பெற்ற சிருக்கில் தேங்காய் பழம், வெற்றிலே, பாக்கு, தங்கம், வெள்ளி, புஷ்பம், நெற்பொரி, பட்டு வஸ்திரம், வாசனைத் திரவியங்கள் வைத்து, அதன் மேல் சிருவத்தைக் கீழ் நோக்காக வைத்துத் தர்ப்பையுடன் எடுத்து "ஓம் ஹாம் ஹௌம் சிவாய வௌஷட்" என்று பூரணுகுதி கொடுத்து, அக்நியில் எழுந்தருளியுள்ள சுவாமிக்கு அர்க்கியம் கொடுத்துத் தூப தீபம் காட்டி நை வேத்தியம் செய்து, கற்பூரம் காட்டி அர்க்கியம் கொடுத்துக் குண்டத்தின் கிழக்குப் பக்கத்தில் "ஓம் ஹாம் ப்[3]ர்ஹ்மா தி[2]ப்[4]ய ஸ்வாஹா" என்று நெற்பொரியினுல் பலியிடுக.

வேதிகையில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளை அர்ச் சித்து அர்க்கியம் கொடுத்து, தூப தீபம் காட்டி, நைவேத்தி யம் செய்து,' தீபங்கள் காட்டி, (பரிவார தே[3]வதாப்[4]ய ஸஹித ஓம் ஹாம் சிவாய நம:) ஆசனமூர்த்தி மூலம், பஞ்சப்பிரம மந்திரங்களால் அஷ்டபுஷ்பம் சாத்தி, வலக் கையில் புஷ்பத்துடன் விசேடார்க்கிய ஜலம் சேர்த்து வைத்துக் கொண்டு சிவமூலமந்திரத்தைப் பத்து முறையும், சம்ஹிதா மந்திரங்களை ஒவ்வொரு முறையும், ஜபித்து வலக்கைச் சுட்டு விரல் மூலம் ஜலத்தைச் சுவாமி முன்னே

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

விட்டுப் புஷ்பத்தைச் சாத்துக, சிவாகமஸ்தோத்திரம், திருமுறைகள் ஓதி, வேதிகையின் மேல் வடக்குப் பக்கத்தில் சண்டேசுரரை முறைப்படி பூசிக்க.

சாந்தி நாள் காலை

கர்த்தாவுக்குத் திருநீறு, பவித்திரம், பூணூல், தம்பதிகளுக்கு மாலை, கொடுத்துக் கணபதி, குரு வணக்கம் செய்விக்க. ஆசாரியர் முதல்நாள் மாலையில் செய்தது போல ஆசமனம், சகளீகரணம், சாமான்யார்க்கியம், விக்கிநேசுவர பூசை, புண்ணியாவாசனம், பூதசுத்தி, அந்தர்யாகம், ஸ்தான சுத்தி, திரவிய சுத்தி, ஆத்மபூசை, மந்திரசுத்தி, விசேடார்க்கியம், லிங்க சுத்தி, கலச பூஜை, அக்நி காரியம் செய்க. அக்நி காரியத்தில் குண்டத்திற்குக் கற்பூரம் காட்டி, அர்க்கியம் கொடுத்த பின்பு, அக்நியில் இருக்கும் சுவாமியை ஆசன மூர்த்தி மூலத்தாலும், சம்ஹிதா மந்திரங்களாலும் அர்ச்சித்துப் புஷ்பம், தர்ப்பையைக் கைகளில் வைத்துக் கொண்டு, குண்டத்திலிருக்கும் மூர்த்திகளைக் கலசங்களில் சேர்த்துக் கலச மூர்த்திகளுக்குப் பாத்திய ஆசமன அர்க்கியம் கொடுக்க. குண்டமேகலையில் இருக்கும் சமித்துக்களையும், குண்டத்தைச் சுற்றியுள்ள நூலையும் ஹிருதய மந்திரத்தால் அக்நியில் சேர்க்க. குண்டத்துக்கு வெளியில் நான்கு பக்கங்களிலுமுள்ள கூர்ச்ச முடிச்சுக்களை அவிழ்த்து அக்நியில் சேர்த்து. அந்தத் தர்ப்பைப் பஸ்மத்தை எடுத்து நெய்யில் குழைத்து அந்த ரக்ஷையைக் கலச மூர்த்திக்குச் சிவமூல மந்திரத்தால் சாத்துக. குண்ட அக்நியை "ஓம் ஹாம் சிவாக்[3]நயே நம:" என்று ஒடுக்கிக் கொண்டு பிர்ம்மாதிகளுக்குப் பலியிடுக.

வேதிகையிலுள்ள மூர்த்திகளை முன்பு போலப் பூசித்துக் கர்த்தாவைப் பத்தினி முன் செல்லப் பிரதக்ஷிண நமஸ்காரம் புஷ்பாஞ்சலியுடன் செய்விக்க. கலச மூர்த்திகளுக்கு அர்க்கியம் கொடுத்துச் சண்டேசுவரபூசை செய்க.

தம்பதிகளைக் கோடி வஸ்திரத்துடன் கிழக்கு முகமாக உட்காருவித்து, மாலை அணிவித்துக் கைகளில் மேல் நோக்கிய குடுமியுடன் தேங்காய்கள் வைத்துக் கொள்ளச் செய்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

கலச தீர்த்தங்களை அபிஷேகம் செய்க. கர்த்தாவின் மூத்த புதல்வர், மனைவியுடன் ஒரு கலசத்தைத் தாங்கிக் கொண்டு பெற்றோரை மூன்று முறை வலம் வந்து அபிஷேகம் செய்து பூர்த்தி செய்க.

திருமாங்கல்ய தாரணம்

திருமாங்கல்யத்தைத் திருநீறு, சந்தனம், மஞ்சள், குங்குமம், புஷ்பம், தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, மாலைகளுடன் ஒரு தம்பாளத்தில் வைத்துச் சபையினரிடம் தொட்டு ஆசி பெறச் செய்க. தம்பதிகளைக் கிழக்கு முகமாக உட்கார வைத்துத் திருமாங்கல்யத்தைத் தேங்காயின் மேல் வைத்துச் சந்தனம், குங்குமம் சாத்தி, ஓம் க்ஷௌம் உமா மஹேச்வராஸநாய நம: ஓம் க்ஷௌம் உமா மஹேச்வர மூர்த்தயே நம: ஓம் க்ஷௌம் உமா மஹேச்வராய நம: என்று அர்ச்சித்துத், தூப தீபம் காட்டி, நைவேத்தியம் செய்து, கற்பூரம் காட்டி வணங்கச் செய்து, பத்தினி கழுத்தில் உமாமஹேசுவர மந்திரத்தால் அணிவித்துத் திருநீறு, சந்தனம், குங்குமம் சாத்தச் செய்து மாலைகள் போடுவித்து, அவற்றை மும்முறை மாற்றச் செய்க. யாகசாலைப் பிரசாதமாகிய பஞ்ச கவ்யம், திருநீறு, குங்குமம், ரக்ஷை, காளாஞ்சி கொடுக்க.

ஆசாரிய பூசை

ஆசாரியருக்கு மாலை அணிவித்துப் பாத்திய ஆசமன அர்க்கியம் கொடுத்துச் சிவ ஆசன மூர்த்தி மூலத்தால் அர்ச்சித்துத் தூப தீபம் காட்டி நைவேத்தியம் செய்து கற்பூரம் காட்டிப் பாதகாணிக்கை வைத்து வணங்குக. உறவினர்களுடன் சிவாலய வழிபாடு செய்து வந்து தம்மிற் பெரியவர்களிடம் திருநீறு, அக்ஷதை பெற்றுக் தம்மிற் சிறியவர்களுக்குத் திருநீறு, அக்ஷதை வழங்குக.

யாகபூசை வேளைகளில் மங்கல வாத்தியம், மூவரின் முதற் பதிகங்கள், திருநீற்றுப் பதிகம், கோளறு பதிகம், திரு நீலகண்டப் பதிகம், இடர்களையும் பதிகம், நமச்சிவாயப் பதிகம், பச்சாக்கரப் பதிகம், முதலான திருமுறைகளையும் மூஷிஹ வாசனம், மிருத்யுஞ்ஜய ஸ்தோத்திரம், மார்க்கண்டேய ஸ்தோத்திரம் கவசங்களையும் ஓதச் செய்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

அஸ்திராபிஷேகம்

ஐம்பத்தொன்பதாம் ஆண்டு நிறைவு நட்சத்திரத்திலும், அறுபத்தொன்ரும் ஆண்டு நிறைவு நட்சத்திரத்திலும் அஸ்திராபிஷேகம் செய்யத் தக்கது.

முதல் நாள் காலையில் ஷஷ்டியப்த பூர்த்தியில் உள்ளது போலப் புண்ணிய தீர்த்த ஸ்நானம் நாந்தி சோபனம் செய்விக்க

மாலையில் விநாயகராலய வழிபாடு, ஆசாரியர் வரவேற்பு, ஆசாரியவரணம், கர்த்தாவுக்குத் திருநீறு பவித்திரம், பூணூல், தம்பதிகளுக்கு மாலை கொடுத்தல், ஆகியவற்றுடன் கர்த்தாவுக்கு, "...... நக்ஷத்ரே .... ராசௌ ஜாதஸ்யா ...... நாமதேயஸ்ய, மம, ஏகோந்ந ஷஷ்ட்யப்த பூர்த்தி மங்க[3]ளக்ரியாயாம் ஆசா[1]ர்ய முகே[2]ந க்ரியா கர்த்தும் யோக்[3]யதா ஸித்[4]தி[4]ம் அநுக்[3]ரஹாணும்" என்று 59 - லும், " .... நக்ஷத்ரே .... ராசௌ ஜாதஸ்யா ..... நமதேயஸ்ய, மம ஏகோத்தர ஷஷ்ட்யப்த பூர்த்தி மங்க[3]ளக்ரியாயாம் ஆசா[1]ர்ய முகே[2]ந க்ரியா கர்த்தும் யோக்[3]யதா ஸித்[4]தி[4]ம் அநுக்[3]ரஹாணும்" என்று 61 - லும், அநுக்ஞையும் சங்கற்பமும் செய்விக்க. ஆசாரியர் கணபதி குரு வணக்கம், ஆசமனம், பிராணுயாமம், சகளீகரணம், சாமான்யார்க்கியம், விக்நேசுவர பூஜை, புண்ணியாவாசனம் செய்து கர்த்தாவைத் தீபலெட்சுமி பூஜை செய்விக்க.

ஆசாரியர் பூதசுத்தி, அந்தர்யாகம், ஸ்தான சுத்தி, திரவிய சுத்தி, ஆத்ம பூஜை, மந்திர சுத்தி, விசேடார்க்கியம், பிரதிமா சுத்தி, கலச ஸ்தாபனம் ஆகியவற்றைச் செய்க. கலசங்களில்,

1. மிருத்யுஞ்ஜயேசுவரர்
2. மிருத்யுஞ்ஜயேசுவரி
3. அம்ருதேசுவரர்
4. அம்ருதேசுவரி
5. விநாயகர்
6. சித்தலெட்சுமி
7. வல்லபாம்பா
8. ஸ்கந்தர்
9. ஸ்ரீவல்லி
10. தேவசேனு

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

11. பாசுபதாஸ்திர மூர்த்தி 12. சிவசூரியன்
13. திருநந்தி தேவர் 14 சண்டேசுவரர்
15. கங்கை 16. யமுனை

ஆகிய மூர்த்திகளை ஆவாகனம் செய்து முறைப்படி பூசிக்க பாசுபதாஸ்திர மூர்த்தியைப் பிரணவாசனத்தில் வீற்றிருப்பவராயும், ஐந்து முகம், சந்திர சேகரம், கோடி சூரியப் பிரகாசம், பதினைந்து கண்கள், கோரப் பல், தொங்க விட்ட நாக்கசைவு, வலக்கைகளில் அக்நி, வேதாளம், சூலம், சத்தி, அங்குசம், இடக்கைகளில் எறிவேல் சக்கரம், வாள், நெருப்பு, அம்பு உடையவராயும் தியானித்துப் பூசிக்க. (ஓம் ச்லீம் பம் சும் ஹூம்பட் பாசுபதாஸ்த்ராய நம:)

குண்டத்தில் விதிப்படி அமைத்த அக்நியில் கலச மூர்த்திகளை ஆவாகனம் செய்து பூசித்து, ஸ்வாஹாந்த மூல மந்திரங்களால் ஹோமம் செய்து, "ஓம் ஹ ஸ க்ஷ ம ல வ ரய மந்நம் நவாத்மநே சிவாய ஸ்வாஹா" என்று ஒன்பது ஆகுதிகள் கொடுத்து, வாழைப்பழம், தேன், சர்க்கரை, மதுவர்க்க ஆகுதி நூற்றெட்டு ஸ்வாஹாந்த பாசுபதாஸ்திர மந்திரத்தால் கொடுத்துப் பூரணாகுதி செய்து கலச பூஜை செய்க.

சாந்தி நாள் காலையில் கர்த்தாவுக்குத் திருநீறு, பவித்திரம், பூணூல், தம்பதிகளுக்கு மாலை கொடுத்து ஆசாரியர் முந்தின நாள் மாலையிற் செய்தது போலக் கணபதி குரு வணக்கம் முதலியன செய்து கொண்டு கலச பூஜை, அக்நி காரியம் செய்து, கலச மூர்த்திகளைப் பூசித்துத் தோத்திரம் கர்த்தா புஷ்பாஞ்சலி செய்வித்து அர்க்கியம் சண்டேசுவர பூஜை செய்து கலச தீர்த்த அபிஷேகம் முடித்துப் பிரசாதம் கொடுத்து ஆசாரிய பூஜை செய்வித்துச் சிவாலய தெரிசனம் செய்விக்க.

சகஸ்ர ஜன்ம நக்ஷத்திர பூர்த்தி
சகஸ்ர சந்திர தெரிசன சதாபிஷேகம்

எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவு நக்ஷத்திரத்தில் சகஸ்ர ஜன்ம நக்ஷத்திர பூர்த்தி அபிஷேகமும் எண்பத்

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

தோன்றும் ஆண்டு நிறைவு நக்ஷத்திரத்தில் சகஸ்ர சந்த்ர தெரிசன சதாபிஷேகமும் செய்யத் தக்கன.

முதல் நாள் காலையில் ஷஷ்டியப்த பூர்த்தியில் உள்ளது போல் புண்ணிய தீர்த்த ஸ்நானம், நாந்தி சோபனம் செய்விக்க.

மாலையில் விநாயகராலய வழிபாடு முதல் கலச ஸ்தாபனம் வரை ஷஷ்டியப்த பூர்த்தி விதியில் உள்ளது போல் செய்க. கலசங்களில்,

1	சதாசிவ மூர்த்தி	2	மனோன்மணி சக்தி
3	விநாயகர்	4	சித்த லெட்சுமி
5	வல்லபாம்பா	6	ஸ்கந்தர்
7	ஸ்ரீவல்லி	8	தேவசேனா
9	சிவசூரியன்	10	அஸ்திர தேவர்
11	திருநந்தி தேவர்	12	சமய குரவர்
13	சந்தான குரவர்	14	கங்கை
15	யமுனை	16	சண்டேசுவரர்

ஆகிய மூர்த்திகளை ஆவாகனம் செய்து, முறைப்படி பூசிக்க. சதாசிவ மூர்த்தியைத் தீ நிறம், முக்கண்கள் அமைந்த ஐந்து முகம், சந்திர சேகரம், சர்ப்பப் பூணூல், செந்தாமரை யாசனம், வலக்கரங்களில் அபயம், சத்தி, சூலம், உடுக்கை, கட்வாங்கம், இடக்கரங்களில் வரதம், பாம்பு, மாதுளங்கனி, அட்சமாலை நீலோத்பலம் உடைய வராகவும். (ஓம் ஹாம் சதா³சிவாய நம:) மனோன்மணி சத்தியைச் செந்நிறம், தாமரை, அபயம், நீலோத்பலம், வரதம் கொண்ட கைகள் உடையவராகவும் தியானிக்க. (ஓம் ஹ்ரீம் மநோந்மந்யை நம:)

சாந்தி நாள் காலையில் முதல் நாள் மாலையில் செய்தது போல் கர்த்தாவுக்குத் திருநீறு முதலியன கொடுத்து, அக்நி காரியம் வரை செய்து, அக்நியிலுள்ள மூர்த்தியைக் கலசங்களில் சேர்த்து ரக்ஷை எடுத்துக் கொண்டு பலி சமர்ப்பித்துக் கலசமூர்த்திகளைப் பூசித்துத் தோத்திரம், ஜப சமர்ப்பணம், கர்த்தா புஷ்பாஞ்சலி, அர்க்கியம், சண்டேசுவர பூசை செய்து கலசதீர்த்த அபிஷேகம் முடித்துப் பிரசாதம் கொடுத்து ஆசாரிய பூசை செய்வித்துச் சிவாலய தெரிசனம் செய்விக்க.

நலமே தழைக.

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

உ

சிவமயம்

சைவக் கிரியா விதிகள்

(அபரம்)

வினைப்போக அனுபவத்தின்பொருட்டு வந்த தூல தேகத்திலிருந்து வினை அநுபவம் முற்றுதலுற்றுச் சூக்கும தேகத்துடன் உயிர் பிரியுந் தறுவாயில் மூத்த மகன் அல்லது சிவதீக்ஷை பெற்ற நெருங்கிய உறவினர், தன் வலது துடையில் வாழ்நாள் முற்றியவரது தலையை வைத்து நெற்றியிலும் தேகத்திலும் திருநீறு பூசி வலது காதில் ஸ்ரீ பஞ்சாட்சரத்தை ஓதுக.

உயிர் பிரிந்த பிறகு பிரேதத்தை நீராட்டித் தர்ப்பாசனத்தில் தெற்கே தலையிருக்கும் படி கிடத்தி, விளக்கேற்றி வைத்துக் கற்பூரம் காட்டுக. பிரேதத்தின் கைப் பெருவிரல்களையும், கால் பெருவிரல்களையும் சேர்த்துத் துணிக்கச்சினால் கட்டுக.

சூர்ணோத்ஸவம்

கிரியை செய்யும் கர்த்தாவை வபனம் செய்து கொள்ளச் செய்து, திருநீறு, அபசவ்ய பவித்திரம், அபசவ்யப் பூணூல் கொடுத்து,

......கோ^{3}த்ரோத்^{3}ப^{4}வஸ்ய ... ... தீ^{3}க்ஷாநாம "மம ....ஆத்மந் உத்^{3}தே^{3}ஸ்ய சிவைக^{3}மோக்த ப்ரகாரேண சூ^{1}ர்ணோத்ச^{1}வ க்ரியாயாம் ஆசா^{1}ர்ய முகே^{2}ந க்ரியா கர்த்தும் யோக்^{3}யதா ஸித்^{4}தி^{4}ம் அநுக்^{3}ரஹாணம்" என்று அநுக்ஞையும் சங்கற்பமும் செய்து வைக்க.

நான்கு முழச் சதுரத்தில் மண்டலம் செய்து மெழுகுவித்து, நடுவில் குண்டம் அமைத்து. வடகிழக்கில் யாகவர்த்தனிக்குக் கும்பம் வைத்துத், தென்மேற்கில் பஞ்ச கவ்ய சேகரஸ்தானம் அமைத்து, குண்டத்திற்குக் கிழக்கில் உரல்–உலக்கை, அதற்குக் கிழக்கில் பேரிகை வைத்துக் கொள்க. கீழே நெல்லும் அதன்மேல் அரிசியும் வாழையிலைகளில் பரப்பி, எட்டிதழ்த் தாமரை வரைந்து, வஸ்திரம், தர்ப்பை,

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

புஷ்பம் முதலியவற்றால் அலங்கரிக்கப்பெற்ற உரல்-உலக்கைகளை வைக்க. மண்டலத்தின் கிழக்காதியாக நான்கு திசைகளிலும் நல்லெண்ணெய், அக்ஷதை அறுகு, தாம்பூலம் ஆகியவற்றை ஹ்ருதய மந்திரத்தால் வைக்க.

ஆசாரியர் கணபதி, குரு வணக்கம், பிராணாயாமம், அபசவ்ய சகளீகரணம் செய்து கொள்க. அபசவ்ய சகளீகரணமாவது:– "அஸ்திர மந்திரத்தால் புறங்கை, அகங்கைகளைத் துடைத்து, வௌஷடந்த சக்தி மந்திரத்தால் கைகளைக் கூப்பி, உள்ளங்கைகளில் கட்டை விரல்களால் சிவ ஆசன மூர்த்திகளையும், சுண்டு விரல் முதலான விரல்களில் சத்தியோஜாதம் முதலான ஐந்து பிரம மந்திரங்களையும், உள்ளங்கைகளில் கட்டை விரல்களால் வித்தியா தேக மந்திரத்தையும், நடு மூன்று விரல்களால் நேத்திர மந்திரத்தையும், கட்டை விரல்களால் சிவமூல மந்திரத்தையும், சுண்டு விரல்கள் முதலான விரல்களில் நேத்திரம் ஒழிந்த ஹ்ருதயம் முதலான ஐந்து அங்க மந்திரங்களையும் நியசித்துக் கவசத்தால் அபசவ்ய அவகுண்டனம் செய்யும் கர நியாசமும்; ஹ்ருதயத்தில் வலது கைக் கட்டை விரலால் சிவ ஆசன மூர்த்தி மந்திரங்களையும், பாதம், நாபி, ஹ்ருதயம், புருவநடு, உச்சி ஆகிய இடங்களில் சத்தியோஜாதம் முதலான மந்திரங்களையும், வலது கை மோதிர விரலால் மார்பில் வித்தியாதேக மந்திரத்தையும், நடு மூன்று விரல்களால் முக்கண்களில் நேத்திர மந்திரத்தையும், மோதிர விரலால் மார்பில் சிவமூல மந்திரத்தையும், சுண்டு விரல், மோதிர விரல், நடு விரல், சுட்டு விரல்களால் மார்பு, உச்சி, சிகை, இடவலத் தோள்களில் ஹ்ருதயம், சிரசு, சிகை, கவச மந்திரங்களையும் நியசித்து. அஸ்திர மந்திரத்தால் தாளத்திரயம், திக்பந்தனம் செய்து மூலமந்திரத்தால் கைகளைக் கூப்பும் அங்கநியாசமும் சேர்ந்தது" சகளீகரணத்தின் பின்னர் சாமான்யார்க்கியம், விக்நேசுவர பூசை, புண்ணியாவாசனம், பஞ்சகவ்ய சேகரம் ஆகியவற்றைப் பூர்வ விதியில் உள்ளபடி செய்து கொள்க.

பேரீ தாடனம்

பேரிகையின் நடுவில் ஓம் ஹாம் ருத்^3ராய நம: வலப்பக்கத்தில் ஓம் ஹாம் ப்^3ருஹ்மணே நம: இடப்

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

பக்கத்தில் ஓம் ஹாம் விஷ்ணவே நம : கீல்களில் ஓம் ஹாம் மாத்ருப்[4]யோ நம : தோலில் ஓம் ஹாம் நாகே[3]ப்[4]யோ நம : வலது இடது வட்டங்களில் ஓம் ஹாம் ஸூர்யாய நம : ஓம் ஹாம் ச[1]ந்த்[3]ராய நம : என்று அர்ச்சித்து, "ஸத்[3]யோ ஜாத வாமதே[3]வ அகோ[4]ர தத்புருஷ ஈசாந தே[3]வோ ரக்ஷார்த்த[2]ம் இதி பே[4]ரீம் ஸந்தாட்[3]ய" என்று பேரிகையை மும்முறை தட்டுக.

பொற் சுண்ணம்

உரலில் "ஓம் ஹாம் ப்ருத்வியை நம :" உலக்கையில் "ஓம் ஹாம் மஹாமேரு பர்வதாய நம :" என்று அர்ச்சித்துப் பதமந்திரத்தால் அபிமந்திரித்து, உரலில் மஞ்சட்பொடியை இட்டுக் கர்த்தாவுடன் ஆசாரியர் உலக்கையைப் பிடித்துத் திருவாசகத் திருப்பொற் சுண்ணத் திருப்பதிகம் பாடுவித்து இடிக்க.

வர்த்தனி பூஜை

வடகிழக்கில் தெற்கு முகமாக நெல், அரிசியின் மேல் அலங்கரித்து வைத்த மண்ணாலான யாக வர்த்தனி கும்பத்தில், "ஓம் அஸ்த்ராஸநாய ஹூம்பண்ணம : ஓம் அஸ்த்ர மூர்த்தயே ஹூம்பண்ணம:" என்று அர்ச்சித்து, நேத்திரம் காட்டிப் பேரொளியும், பேரொலியும் மூன்று கண்களும், சர்ப்பப் பூணூலும், நான்கு முகங்களும், கோரைப் பற்களும், முரிந்த புருவமும், சக்தி, இரும்புத் தண்டு, சூலம், கத்தி ஆகிய ஆயுதங்களும் உடையவராய் அஸ்திர மூர்த்தியைத் தியானித்து, "ஓம் ச்லீம் பம் சும் ஹூம்பட் பாசுபதாஸ்த்ராய நம" என்று அர்ச்சித்து, ஆவாகனாதிகள் செய்து, அங்க மந்திரங்களால் நியசித்துத், திக்பந்தனம், அவகுண்டனம் செய்து தேனு முத்திரை காட்டிப், பாத்திய ஆசமன அர்க்கியம் கொடுத்துத் தூப தீபம் காட்டி, நைவேத்தியம் செய்து கற்பூரம் காட்டி அர்க்கியம் கொடுக்க.

தசாயுத பூஜை

வடகிழக்கு முதல் கிழக்கு வரையுள்ள எட்டுத் திசைகளிலும் எட்டுக் கலசங்கள் வைத்து, "ஓம் ஹாம் சூலாய நம : ஓம் ஹாம் க[3]தாயை நம : ஓம் ஹாம் த்[4]வஜாய நம :

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

ஓம் ஹாம் பாசாய நம: ஓம் ஹாம் க[2]ட்கா[3]ய நம: ஓம் ஹாம் த[3]ண்டா[3]ய நம: ஓம் ஹாம் சக்தயே நம: ஓம் ஹாம் வஜ்ராய நம:'' என்றும் தென்மேற்குக்கும் தெற்குக்கும் நடுவில் ஒரு கலசம் வைத்து, "ஓம் ஹாம் ச[1]க்ராய நம" வடகிழக்குக்கும் கிழக்குக்கும் நடுவில் ஒரு கலசம் வைத்து "ஓம் ஹாம் பத்[3]மாய நம: என்றும் பூசிக்க.

சிவகும்ப பூஜை

வடமேற்கில் மண்ணுலான சிவகும்பம் வைத்து, மேற்கில், "ஓம் ஹாம் ஸர்வேப்[4]யோ த்[3]வார பாலேப்[4]யோ நம: ஓம் ஹாம் வாஸ்த்வாதி[4]பதயே ப்[3]ர்ஹ்மணே நம:" என்றும் வடக்கில் 'க[3]ணேச கமலஸதா[3]சிவாதி[3] ஸப்த கு[3]ருப்[4]யோ நம:'' என்றும் அர்ச்சிக்க. கலசத்தில் ஷடுத் தாசனம் அர்ச்சித்து, "ஓம் ஹாம் ஹம் ஹாம் சிவமூர்த்தயே நம:'' என்று பூசித்துப் பாதங்களில் ஸத்யோஜாதம், நாபியில் வாமதேவம், மார்பில் அகோரம், புருவ நடுவில் தத்புருஷம், உச்சியில் ஈசானம் ஆகிய மந்திரங்களை நியசிக்க. வித்தியாதேகம் கற்பித்து, நேத்திரம் காட்டிச் சிவமூல மந்திரத்தால் ஆவாகனாதிகள் செய்து முறைப்படி பூசிக்க.

அக்நி காரியம்

குண்டத்தில் நாற்சுத்தி செய்து, மேற்கில் நிவிர்த்தி, வடக்கில் பிரதிட்டை, தெற்கில் வித்தை, கிழக்கில் சாந்தி, நடுவில் சாந்தியதீத கலைகளை நியசித்து, மூன்று தர்ப்பைகள் கொண்டு அஸ்திரமந்திரத்தால் அப்பிரதக்ஷிணமாகச் சுற்றி, "ஓம் ஹாம் கலாமயாய குண்டா[3]ய நம:'' என்று அர்ச்சிக்க, மூன்று தர்ப்பைகளைத் தெற்கு நுனியாகத் திரிசூலம் போல மூலமந்திரத்தால் குண்டத்தில் வைத்து, நான்கு பக்கங் களிலும் கவச மந்திரத்தால் தர்ப்பைகளைப் போட்டுக், குண்டத்தில் கூர்ச்சம் வைத்து, அதில், "ஓம் ஹாம் வாகீ[3]ச் வரி வாகீ[3]ச்வராப்[4]யாம் நம:'' என்று அர்ச்சித்து, அக்நியைத் தென்கிழக்கில் வைத்துச் சிறிது அக்நியை ராக்ஷஸப்ரீதியாக அஸ்திர மந்திரத்தால் தென்மேற்கில் போட்டு, அக்நியைச் சம்ஹார முத்திரைக்கையில் வந்ததாகப் பாவித்து, "ஓம் ஹாம் ஹம் ஹாம் வந்ஹிமூர்த்தயே நம'' என்று எடுத்து,

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

நாபிகுண்ட அக்நி, புருவநடு அக்நியுடன் கூட்டி, "ஓம் ஹாம் ஹ்ரூம் வந்ஹிசை[1]தந்யாய நம:" என்று பாத்திரத்தில் வைத்து, நாற்சுத்தி செய்து, தேனுமுத்திரை காட்டிக் குண்டத்தின் மேல் மூன்று முறை அப்பிரதக்ஷிணமாகச் சுற்றிக் குண்டத்தில் சேர்க்க. ஹ்ருதய மந்திரத்தால் நீர்த்துளியைக் குண்டத்தில் தெளிக்க. "ஓம் ஹாம் சிவாக்[3]நயே நம:" என்று அர்ச்சித்துக் குண்டத்தின் வடக்கு மேகலையில் "ஓம் ஹாம் அநந்தாய நம:" மேற்கு மேகலையில் "ஓம் ஹாம் விஷ்ணவே நம:" தெற்கு மேகலையில் "ஓம் ஹாம் ருத்[3]ராய நம:" கிழக்கு மேகலையில் "ஓம் ஹாம் ப்[3]ர்ஹ்மணே நம:" என்று அர்ச்சித்து, முப்பத்தாறு தர்ப்பைகள் கொண்ட விஷ்டர கூர்ச்சங்களைக் குண்டத்துக்கு வெளியே நான்கு திசைகளிலும் வைத்து வடகிழக்கு முதல் கிழக்கு வரை ஈசானர் முதல் இந்திரன்வரையும், தென்மேற்குக்கும் தெற்குக்கும் நடுவில் விஷ்ணுவையும், வடகிழக்குக்கும் கிழக்குக்கும் நடுவில் பிரம்மாவையும் பூசிக்க.

சிருக்கு சிருவங்களில் நாற்சுத்தி செய்து அவற்றின் நுனி, நடு, அடிகளில் தர்ப்பையால், "ஓம் ஹாம் சிவ தத்வாதி[4]பதயே ருத்[3]ராய நம: ஓம் ஹாம் வி[3]த்யா தத்வாதி[4]பதயே விஷ்ணவே நம: ஓம் ஹாம் ஆத்மதத்வாதி[4]பதயே ப்[3]ர்ஹ்மணே நம:" என்று நியசித்துச் சிருக்கில் சத்தியையும், சிருவத்தில் சிவத்தையும் அர்ச்சிக்க.

நெய்யில் நாற்சுத்தி செய்து பாத்திரத்தைத் தென்மேற்கில் வைத்து "ஓம் ஹாம் ப்[3]ர்ஹ்மணே ஸ்வாஹா," வடகிழக்கில் வைத்து "ஓம் ஹாம் விஷ்ணவே ஸ்வாஹா." குண்டநாபியில் வைத்து "ஓம் ஹாம் ருத்[3]ராய ஸ்வாஹா" என்று ஹோமம் செய்க. நெய்யைச் சம்ஹிதா மந்திரங்களால் அர்ச்சித்துக் குண்ட அக்நியை, "ஓம் யூம் ஹ்லாம் ஹூம் க்ஷூம் ஷௌம் ஸௌம் ஹௌம் ஹிரண்யா கநகா ரக்தா க்ருஷ்ணா ஸுப்ரப[4]ா அதிரக்தாப[3]ஹுரூபா[4]ப்யாம் நம:" என்று அர்ச்சித்து அக்நியில் ஷடுத்தாசனம் பூசித்துச், சிவத்தை ஆவாகனாதிகள் செய்து, விதிப்படி அர்ச்சித்து மூலமந்திரத்தால் நூற்றெட்டு ஆகுதிகளும் சம்ஹிதா மந்திரங்களால் பப்பத்து ஆகுதிகளும் செய்து பூரணாகுதி கொடுக்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

பிரேத சம்ஸ்காரம் :-

பிரேதத்துக்கு எண்ணெய், அறுகு, அட்சதை, தாம் பூலம், சூர்ணோத்ஸவ மஞ்சட்பொடி ஆகியவற்றை ஹ்ருதய மந்திரத்தால் சாத்துக. பஞ்சகவ்யம், சிவகும்பஜலம் ஆகிய வற்றால் அபிஷேகம் செய்து சத்யோஜாதம் முதலாக முழங்கால் முதலிய அங்கங்களில் திரிபுண்டரதாரணம் செய்து, தர்ப்பாசனத்தில் பிரேதத்தை வைத்துத், தர்ப்பை யால் தலையிலிருந்து பாதம் வரை "ஓம் ஹாம் ஷட்த்ரும்சத் தத்வாப்[4]யாம் நம:" என்றும் பாதத்தில் "ஓம் ஹாம் ப்[3]ருஹ்ம லோக அதி[4]பத்யாதி[3] சிவலோகாதி[4]ப தே[3]வாப்[4]யாம் நம: ஓம் ஹாம் பாதாளாதி[4] காலாக்[3]நிலோகாதி[4]ப தேவாப்[4]யாம் நம:" என்று தொட்டுப் பிரேதத்தின் மார்பில் "ஓம் ஹாம் இடா[3] பிங்க[3]ளா சுஷும்னா நாடி[3]ப்[4]யாம் நம: ஓம் ஹாம் வாமாயை நம: ஓம் ஹாம் ஜேஷ்ட[2]ாயை நம: ஓம் ஹாம் ரௌ[3]த்[3]ரியை நம: ஓம் ஹாம் த[4]ர்[3]மாய நம: ஓம் ஹாம் அத[4]ர்மாய நம: என்று நியசிக்க.

பிரேதத்தைச் சித்திர விமானத்தில் வைத்துச், சங்கு சகண்டி ஒலிக்கக்குண்ட அக்நியைக் கர்த்தா மண்பாண்டத் தில் எடுத்துக் கொண்டு, சிவ, வர்த்தனி கும்பங்களைப் பங் காளிகளில் இருவரை எடுத்துக் கொள்ளச் செய்து, மயா னத்தை அடைக. மயானத்தில் பிரேதத்தைத் தெற்குச் சிரசாக இறக்கிச் சிதையில் இருபத்தைந்து கோஷ்டங்கள் (கட்டங்கள்) தர்ப்பைகளால் அமைத்து, அதன் நடு ஐந்து கோஷ்டங்களில் விரளி மஞ்சள் பொடியிட்டு, "ஓம் ஹாம் ப்ருத்விதத்வாய நம: ப்ருத்வி தத்வாதி[4]பதயே ப்[3]ருஹ்மணே நம:" என்றும், தென்மேற்கு நான்கு கோஷ்டங்களில் அரிசி மாப் பொடியிட்டு "ஓம் ஹாம் அப்பு தத்வாய நம: அப்பு தத்வாதி[4]பதயே விஷ்ணவே நம" என்றும். வடகிழக்கு நான்கு கோஷ்டங்களில் செங்கற் பொடியிட்டு, "ஓம் ஹாம் தேஜஸ் தத்வாய நம: தேஜஸ் தத்வாதி[4]பதயே ருத்[3]ராய நம:" என்றும், வடமேற்கு நான்கு கோஷ்டங்களில் உமிக் கரிப் பொடியிட்டு, "ஓம் ஹாம் வாயு தத்வாய நம: வாயு தத்வாதி[4]பதயே ஈச்வராய நம:" என்றும், வடகிழக்கு நான்கு கோஷ்டங்களில் பச்சை இலைப் பொடியிட்டு, "ஓம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

ஹாம் ஆகாச தத்வாய நம: ஆகாச தத்வாதி[4]பதயே ஸதா[3] சிவாய நம: என்றும் அர்ச்சித்துக் கிழக்கில் ஓம் ஹாம் இந்த்[3]ராய நம:" தெற்கில், "ஓம் ஹாம் யமாய நம:" மேற்கில் "ஓம் ஹாம் வருணாய நம: வடக்கில் "ஓம் ஹாம் குபேராய நம: என்று நெற்பொரியினால் பலியிட்டுப் பிரேதத்தைச் சிதையில் வைத்து வெள்ளை வஸ்திரத்தால் மூடிக் கர்த்தா சிவகும்பத்தைச் சிரசில் வைத்துக் கொண்டு அப்பிரதக்ஷிணமாகச் சிதையை மூன்று முறை சுற்றி வருக. சுற்றும் போது ஒரு சுற்றுக்கு ஒரு துவாரமாகக் கும்பத்தில் அரிவாள் முனையால் மூன்று துவாரங்கள் இடுவித்து அவற்றின் வழியாகப் பூமியில் ஜலம் விழும்படி செய்க. பின்னர் கும்பத்தின் அடிப்பகுதியைத் தலை ஓடு போல் அரிவாளால் கொத்தி எடுத்து, மேற்பகுதியைப் பிரேதத்தின் தலைப்பக்கத்தில் போட்டு உடைத்துக் கீழ்ப்பகுதியில் எஞ்சியுள்ள ஜலத்தில் அரிசி, பால், தங்கம், வெள்ளி முதலியவை சேர்த்து, அவற்றை "ஓம் ஹேம் தத்புருஷாய ஸ்வாஹா" என்று பிரேதத்தின் வாயில் போடுக. பிரேதத்தை நல்ல விறகுகளால் மூடிக் குண்ட அக்நியை ஜ்வலிக்கச் செய்து பிரேதத்தின் தலைப்புறத்தில் கர்த்தா தெற்கு முகமாக நின்று கொண்டு அக்நி தேவனைப் பிரார்த்தித்துத் தகனம் செய்க. வர்த்தனி கும்பத்தைக் கர்த்தா இடது தோளில் வைத்து ஜலத்தைத் தாரையாக விட்டுக் கொண்டு அப்பிரதக்ஷிணமாகச் சிதையை மூன்று முறை சுற்றி வந்து, வடகிழக்கில் கவிழ்த்து விட்டுத் திரும்பிப் பார்க்காமல் ஜலக்கரைக்குச் சென்று பூணூல், பவித்திரங்களைக் களைந்து ஸ்நானம் செய்து, "ஓம் ஹாம் ஸுத்தா[4] த்[3]மந் ஸ்கந்த ச[1]ண்ட க[3]ணாதீசோப[4]வ ஸ்வதா[4]" என்று தர்ப்பணம் செய்து, அஸ்திர மந்திரத்தை நூற்றெட்டு உரு ஜெபித்து வீடு திரும்புக. வீட்டுத் தெரு வாசலில் நின்று வேப்பிலை தின்று. ஆசமனம் செய்து நெருப்பு, மண், கோமயம், வெண்கடுகு ஆகியவைகளைத் தொட்டுக் கல்லில் பாதத்தை வைத்து உட்புகுந்து உப்பில்லா அன்னம் உண்க.

சமய அந்தியேஷ்டி

இறந்தவரது தேகம் அல்லது அவருக்குக் கற்பித்த தர்ப்பை தேகத்தில் அந்தியேஷ்டி செய்க. இறந்தவர்களது

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

தேகத்தை வைத்து அந்தியேஷ்டி செய்ய இயலாத போது, ஒன்பதாம் நாளிலோ, அல்லது பத்தாம் நாள் பாஷாண ஸ்தாபனக் கிரியை செய்வதற்கு முன்னதாகவோ, தர்ப்பை தேகத்தை வைத்து அந்தியேஷ்டி செய்க.

கர்த்தாவுக்குத் திருநீறு, பூணூல், பவித்திரம் கொடுத்து, "......... கோ^{3}த்ரோத்^{3}ப^{4}வஸ்ய ....தீ^{3}க்ஷா நாம மம.........ஆத்மந் உத்^{3}தே^{3}ஸ்ய சிவாக^{3}மோக்த ப்ரகாரேண ஸமய அந்த்யேஷ்டி க்ரியாயாம் ஆசா^{1}ர்ய முகே^{2}ந க்ரியா கர்த்தும் யோக்^{3}யதா ஸித்^{4}தி^{4}ம் அநுக்^{3}ரஹாணும்" என்று அநுக்ஞையும் சங்கற்பமும் செய்விக்க. ஆசாரியர் கணபதி, குரு வணக்கம், பிராணாயாமம், அபசவ்யசகளீகரணம், விக்நேசுவர பூஜை, புண்ணியாவாசனம், பஞ்சகவ்ய சேகரம், சூர்ணோத்ஸவ விதியில் உள்ளபடி வர்த்தனி பூஜை, தசாயுதபூஜை, சிவகும்ப பூஜை, அக்நி காரியம் ஆகியவற்றைச் செய்க. பிரேதத்திற்கு நாற் சுத்தி செய்து, திருநீறு தரித்து, அதன் மார்பில், "ஓம் ஹாம் அமுகாத்மநே நம:" என்று அர்ச்சித்து அந்த ஆன்மா தன் சம்ஹாரமுத்திரைக் கையில் வந்ததாகப் பாவித்து, "ஓம் ஹௌம் ஹாம் ஹம் ஹாம் ஹௌம் ஆத்மநே நம:" என்று அதைத் தன் மார்பு துவாதசாந்தத்துக்குக் கொண்டு போய்ப் பிரேத இருதயத்தில், "ஓம் ஹாம் ஆத்மநே நம: என்று வைத்து அர்ச்சிக்க. குண்டத்தில், "ஓம் ஹாம் மல பாசாய நம: ஓம் ஹாம் கர்மபாசாய நம: ஓம் ஹாம் மாயா பாசாய நம: என்று மூன்று ஆகுதிகள் கொடுக்க. பிரேதத்தின் முழங்கால்கள், நாபி, மார்பு, புருவ நடு, உச்சி ஆகிய இடங்களில் சத்தியோஜாதம் முதலாகப் பஞ்சப்பிரம மந்திரங்களாலும், மார்பில் வித்தியாதேக மந்திரத்தாலும் நியசிக்க. பிரேத இருதயத்தில் சிவத்தை ஆவாகனம் செய்து அஸ்திரம் முதலாக அங்க மந்திரங்களால் நியசித்துச் சிவமூலமந்திரத்தால் நூற்றெட்டு ஆகுதிகள் கொடுக்க. தர்ப்பை அடியைப் பிரேதத்தின் வலக்கையில் வைத்து, நுனியைத் தன் முழங்காலில் வைத்துக் கொண்டு, இறந்தவரது நாடி, கும்பத்துக்கும், அக்நிக்கும் வந்ததாகப் பாவித்து, "ஓம் ஹாம் இடா^{3} பிங்க^{3}ளா சுஷும்நா நாடிப்^{4}யாம் நம:" என்று நாடி சந்தானம் செய்து, மூல

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

மந்திரத்தால் மூன்று ஆகுதிகள் கொடுக்க. பிரேதத்தைப் புரோக்ஷித்து, அதன் இருதயத்திலிருந்து சம்ஹார முத்திரையால் ஆத்மாவை, "ஓம் ஹாம் ஹம் ஹாம் ஹ: ஹூம் பட்" என்று பிரித்தெடுத்து, "ஓம் ஹாம் ஹம் ஹாம் ஸ்வாஹா" என்று பிரேதத்தின் துவாத சாந்தம் வரை கொண்டு போய் வித்யா தத்துவத்தில் இருப்பவராய் நீல கண்டம், முக்கண்கள், சர்ப்பப்பூணூல் உடையவராய்ச் சின்முத்திரை, ஓடு, அக்நி, சூலம் கொண்ட கைகள் உடையவராய் ருத்ர மூர்த்தியைத் தியானித்து. மூல மந்திரத்தை உச்சரித்து, அவரிடம் கூட்டுக. குண்டத்தில் வாகீசுவரி, வாகீசுவரர்களுக்கு அர்க்கியம் கொடுத்து ஒடுக்குக. ஸ்வாஹாந்த அஸ்திர மந்திரத்தால் பிராயச்சித்த ஆகுதிகள் பத்துக் கொடுக்க. சிவகும்பத்திலும், குண்டத்திலும் அஷ்ட புஷ்பம் சாத்தி அர்க்கியம் கொடுத்து ஒடுக்குக. "ஓம் பூ³ஸ்வாஹா, ஓம் பு³வஸ்வாஹா" ஓம் ஸ்வஸ்வாஹா. ஓம் பூ³ர் பு³வஸ்வஸ்வாஹா" என்று நான்கு ஆகுதிகள் கொடுத்துக் குண்டத்தின் கிழக்குப் பக்கத்தில், "ஓம் ஹாம் ப்³ர்ஹ்மாதிப்⁴ய ஸ்வாஹா, ஓம் ஹாம் இந்த்³ராதிப்⁴ய ஸ்வாஹா, ஓம் ஹாம் ருத்³ராதிப்⁴ய ஸ்வாஹா. ஓம் ஹாம் க்ஷேத்ரபாலாய ஸ்வாஹா" என்று நெற்பொரியால் பலியிடுக.

தசாயுதங்களை அர்ச்சித்து, அர்க்கியம் கொடுத்து. யாக வர்த்தனி கலசத்தில் சேர்த்து, வர்த்தனிக்கும் அர்க்கியம் கொடுத்து ஒடுக்குக.

விசேஷ அந்தியேஷ்டி

சமய அந்தியேஷ்டியில் உள்ளபடி கர்த்தாவுக்குத் திருநீறு கொடுத்தல் முதல் நாடி சந்தானம் வரை செய்து, பிரேத சரீதத்தில் ஆன்மாவைப் பாவித்து. 'ஓம் ஹாம் ஹம் ஹாம் ஆத்மநே நம: என்று அதை எடுத்துத் தன் இருதயத்துக்குத் கொண்டு வந்து சிவமூலமந்திரத்தைச் சிந்தித்துத் தன் துவாதசாந்தத்துக்குக் கொண்டு போய். வாகீசுவரி வாகீசுவரர்களது கூட்டுறவைப் பாவித்து. அவ்வான்மா வாகீசுவரரால் வாகீசுவரியின் கர்ப்பநாடியில் விடப்பட்டதாகச் சிந்தித்துச் சிவமூல மந்திரத்தால் நூற்றெட்டு ஆகுதிகள் செய்து ஆன்மாவைக் குண்டத்திலிருந்து எடுத்து சக்தி

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

மண்டலத்தில் இருப்பவராய்ப் படிகநிறம், சந்திர சேகரம், முக்கண்கள், சர்ப்பப் பூணூல் உடையவராய்த் தோலாடை, வாள், சூலம், பாணம், ஜபமாலை, அபயம், கமண்டலம், பத்மம், வரதம் கொண்ட கைகள் உடையவராய் மகேச்வரரைத் தியானித்து, மூலமந்திரத்தால் அவரிடம் கூட்டுக. சமய அந்தியேஷ்டியில் உள்ளபடி குண்டத்தில் வாகீசுவரி வாகீசுவரர்களை ஒடுக்குவது முதல் வர்த்தனிக்கு அர்க்கியம் கொடுத்து ஒடுக்குவது வரை செய்க.

நிருவாண அந்தியேஷ்டி

சமய அந்தியேஷ்டியில் உள்ளபடி கர்த்தாவுக்குத் திருநீறு கொடுத்தல் முதல் நாடி சந்தானம் வரை செய்து ஒன்பது இழை கொண்ட பாசசூத்திரம் கத்தரிக்கோலுக்கு நாற்சுத்தி செய்து கொள்க.

பாச சூத்திரம்

பிரேதத்தின் காற்பெருவிரல் முதலாகச் சிரசு வரை பாச சூத்திரத்தை நிறுத்தி அதில், "ஓம் லம் சுஷும்நாய நம: என்றும் இடப்பக்கத்தில் ஓம் ஹாம் இடா[3]யை நம: வலப்பக்கத்தில் ஓம் ஹாம் பிங்க[3]ளாய நம: நடுவில் ஓம் ஹாம் சுஷும்நாய நம:" என்றும் அர்ச்சித்துத் திக்பந்தனம், அவகுண்டனம் செய்து, "ஓம் ஹாம் சக்தயே ஸ்வாஹா" என்று மூன்று ஆகுதிகள் கொடுக்க பிரேதத்தின் இருதயத்தில் புரோக்ஷித்துப் பாச சூத்திரத்தைப் பிரேத சரீரமாகப் பாவித்துப் பிரேத சிரசில், "ஓம் ஹாம் சக்தயே நம:" என்று அர்ச்சித்து, எடுத்துப் பாச சூத்திரத்தில் நியசித்துத் திக்பந்தனம், அவகுண்டனம் செய்து, "ஓம் ஹாம் சக்தயே ஸ்வாஹா" என்று மூன்று ஆகுதிகள் கொடுக்க. பிரேத சரீர இருதயத்தில் புரோக்ஷித்து, "ஓம் ஹ: ஹூம் பட்" என்று தாடனம் செய்து ஹுங்காரத்தை உச்சரித்துச் சிஷ்யனது இருதயத்தில் புகுந்து அவன் சிரசில் ஆன்மாவை ஒளியுள்ள நட்சத்திரம் போல் "ஹம்ஸ" என்னும் பீஜத்தில் இருப்பதாகப் பாவித்து. "ஓம் ஹாம் ஹம் ஹாம் ஸ்வாஹா" என்று பிரேத துவாத சாந்தத்துக்குக் கொண்டு போய் "ஓம் ஹாம் ஹம் ஹாம் ஆத்மநே நம: என்று தன் இருதயத்துக்குக் கொண்டு வந்து, மூல மந்திரத்தை உச்ச

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

ரித்துத்தன் துவாத சாந்தத்துக்குக் கொண்டு போய் "ஓம் ஹாம் ஆத்மநே நம." என்று பாச சூத்திரத்தில் கூட்டித் திக்பந்தனம், அவ குண்டனம் செய்து, "ஓம் ஹாம் ஹம் ஹாம் ஆத்மநே ஸ்வாஹா" என்று மூன்று ஆகுதிகளும், மூலமந்திரத்தால் மூன்று ஆகுதிகளும் கொடுக்க. "ஓம் ஹாம் பே[4]ாக்த்ருத்வ காரணாய மல பாசாய நம: ஓம் ஹாம் லௌகிகாதி[3] கர்ம பாசேப்[4]ய ஸுக[2]து[3]க்க[2] மோஹ பே[4]ாக[3] காரணாய கர்ம பாசாய நம: ஓம் ஹாம் சரீர இந்த்[3]ரிய விஷய காரணாய மாயா பாசாய நம: ஓம் ஹாம் பாசாதி[4]ஷ்டா[2] த்ரியை சிவசக்தயேநம: என்று பாசங்களைச் சிஷ்ய தேகத்திலிருந்து எடுத்துப் பாச சூத்திரத்தில் கூட்டி, "ஓம் ஹாம் பாசாதி[4]ஷ்ட[2]ாத்ரியை சிவசக்தயே ஸ்வாஹா" என்று மூன்று ஆகுதிகள் கொடுக்க.

ஓம் ஹாம் தத்வ பு[3]வந வர்ண பத மந்த்ர கர்ப்பிதாயை ஓம் ஹ்லாம் நிவிர்த்தி கலாயை ஹூம்பட்" என்று முழங்காலுக்குக் கீழே புஷ்பத்தால் தாடனம் செய்து, நிவிர்த்தி கலையைச் சூத்திரத்தில் கூட்டி, "ஓம் ஹ்லாம் நிவிர்த்தி கலாயை ஸ்வாஹா' என்று மூன்று ஆகுதிகள் கொடுக்க. இவ்வாறே, "ஓம் ஹ்வீம் ப்ரதிஷ்டா கலாயை ஹூம்பட்" என்று நாபிக்குக் கீழும், "ஓம் ஹ்ரூம் வித்யா கலாயை ஹூம்பட்" என்று மார்புக்குக் கீழும், "ஓம் ஹைம் சாந்தி கலாயை ஹூம்பட்" என்று புருவ நடுவுக்குக் கீழும், 'ஓம் ஹௌம் சாந்த்யதீத கலாயை ஹூம்பட்" என்று சிரசுக்குக் கீழும் புஷ்பதாடனம் செய்து, அக்கலைகளைச் சூத்திரத்தில் கூட்டி, அக்கலாமந்திரங்களால் மும்மூன்று ஆகுதிகள் கொடுக்க. சூத்திரத்தில் முழங்கால், நாபி, இருதயம், புருவ நடு, சிரசு ஆகிய இடங்களில் மஞ்சட் குறியிட்டுச் சிவாசன மூர்த்தி மூலத்தால் அர்ச்சிக்க. ஓம் ஹ: ஹூம்பட் என்று சூத்திரத்தில் அர்ச்சித்துச் சிவமூலமந்திரத்தால் பத்து ஆகுதிகள் கொடுத்து அக்நியில் ஆதார சக்தியை அர்ச்சித்து, 'ஓம் ஹாம் ஆத[4]ார சக்தயே ஸ்வாஹா" என்று மூன்று ஆகுதிகள் கொடுக்க.

நிவிர்த்திகலா சுத்தி:-

பாசசூத்திர முழங்காலில் 'ஓம் ஹ்லாம் தத்வ பு[3]வந வர்ண பத மந்த்ர கர்ப்பிதாயை நிவிர்த்தி கலாயை நம:

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

என்று அர்ச்சித்து, "ஓம் ஹாம் ஹ்லாம் ஹாம் நிவிர்த்தி கலாயை நம: என்று குண்டத்தில் ஆதார சக்தியிடம் அக்கலையைச் சேர்த்து, அர்ச்சித்து, "ஓம் ஹாம் ஹ்லாம் ஹாம் நிவிர்த்தி கலாயை ஸ்வாஹா" என்று மூன்று ஆகுதிகள் கொடுக்க. பாச சூத்திரத்தில் மல கர்ம மாயா ரூப போக்த்ருத்வ போக சரீராதி ஜனனத்தைச் சிந்தித்து, "ஓம் ஹாம் ப்³ர்ஹ்மணே நம:" என்று அர்ச்சித்து, "ஓம் ஹாம் ப்ர்ஹ்மணே ஸ்வாஹா" என்று மூன்று ஆகுதிகள் கொடுத்து. "ஓம் ஹ்லாம் நிவிர்த்தி கலா வியாபக சமஸ்த யோநிப்⁴யாம் நம: என்று குண்டத்தில் அர்ச்சித்து, வாகீசுவரி வாகீசுவரர்களைப் பூசித்து. "ஓம் ஹாம் வாகீ³ச்வரி வாகீ³ச் வராப்⁴யாம் நம:" என்று மூன்று ஆகுதிகள் கொடுக்க பிரேத சிஷ்யனின் மார்பில் "ஓம் ஹ: ஹூம்பட்" என்று புஷ்ப தாடனம் செய்து ஆத்ம மந்திரத்தால் ஆன்மாவைப் பிரித்துப் பிரேதத்தின் துவாத சாந்தத்துக்குக் கொண்டுபோய் வாகீசுவரரால் வாகீசுவரியின் கர்ப்பநாடியில் விடப்பட்டதாகச் சிந்தித்து, "ஓம் ஹாம் ஹம் ஹாம் ஆத்மநே நம:" என்று நிவிர்த்திகலா வியாபக சமஸ்த யோனிகளிலும் ஏககாலத்தில் சம்யோகம் பாவித்து மூலமந்திரத்தால் அர்ச்சித்து ஆத்ம மந்திரத்தால் மூன்று ஆகுதிகள் கொடுத்து, "இந்த ஆன்மாவை எல்லா யோனிகளிலும் ஏககாலத்தில் சம்யோகம் செய்தருளுவீராக என்று பிரம்மா விடம் பிரார்த்தித்து மூலமந்திரத்தால் மூன்று ஆகுதிகள் கொடுக்க. சம்யோகமான ஆன்மா ஜனனமாதற் பொருட்டு மூன்றும், ஜனனம் பெற்ற சமஸ்த சரீரங்களிலும் கர்மாநுபவம் வரும் பொருட்டு மூன்றும், அநுபவத்துக்குரிய சுக துக்க மோகமயமான போகத்தைப் பாவித்து மூன்றும், ஆக ஒன்பது ஆகுதிகள் மூலமந்திரத்தால் கொடுத்து, நிவிர்த்தி கலா தத்துவ சுத்தியாக மூலமந்திரத்தால் மூன்று ஆகுதிகள் கொடுக்க ஆன்மா மாயா பாசத்தினின்று நீங்கியதாகப் பாவித்து மூலமந்திரத்தாலும், ஓம் ச்லீம் பம் சும் ஹூம்பட் என்ற மந்திரத்தாலும் பப்பத்து ஆகுதிகள் கொடுக்க. கத்தரிக்கு நாற்சுத்தி செய்து எடுத்து, "ஓம் ஹௌம் ஹ்லாம் ஹௌம் நிவிர்த்தி கலா பாசாயை ஹ: ஹூம் பட் என்று பாச சூத்திரத்தில் நிவிர்த்தி கலா பாசம் வரை கத்தரித்துச் சுருட்டிச் சிருக்கில் நெய்யுடன் வைத்து, ஓம் ஹ்லாம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

நிவிர்த்தி கலாயை ஸ்வாஹா'' என்று ஹோமம் செய்து, ஹூம்படந்த அஸ்திர மந்திரத்தால் மூன்று ஆகுதிகளும், ''ஓம் ஹாம் ப்[3]ர்ஹ்மணே ஸ்வாஹா'' என்ற மந்திரத்தால் மூன்று ஆகுதிகளும் கொடுத்து, ''ஓம் ஹாம் ப்[3]ர்ஹ்மந் சப்[3]த ஸ்பரிசௌ சுல்கம் க்[3]ரஹாண ஸ்வாஹா'' என்று மூன்று ஆகுதிகள் கொடுத்து, ''பிரம்மனே! இந்த ஆன்மா அழிவில்லாத பதவியை அடைய வேண்டும். அதற்கு நீர் உதவி செய்வீராக. இது பரமேசுவரரது ஆணை'' என்று பிரம்மாவிடம் விண்ணப்பித்துப் பிரம்மாவை ஒடுக்கிக் கொள்க. அக்நியிலிருந்து ஆன்மாவை ஆத்ம மந்திரத்தால் எடுத்துச் சூத்திர தேகத்தில் சேர்த்து, வௌஷடந்த மூலமந்திரத்தால் சிஷ்ய சிரசில் அர்க்கிய ஜலம் புரோக்ஷித்து, வாகீசுவரி வாகீசுவ்ரர்களை ஒடுக்கி வௌஷடந்த மூலமந்திரத்தால் பூரணாகுதி கொடுக்க.

பிரதிஷ்டா கலா சுத்தி:-

''ஓம் ஹ்லாம் ஹ்வீம் நிவிர்த்திப்ரதிஷ்டா கலாப்[4]யாம் நம:'' என்று பாச சூத்திரத்தில் அர்ச்சித்து, ''ஓம் ஹ்லாம் ஹ்வீம் ப்ரதிஷ்டா கலாப்[4]யாம் ஸ்வாஹா'' என்று மூன்று ஆகுதிகள் கொடுத்துப் பிரதிஷ்டா கலையில் நிவிர்த்தி கலை ஒடுங்கியதாகப் பாவிக்க. பாசசூத்திர நாபியில், ''ஓம் ஹ்வீம் தத்வ புவந வர்ண பதமந்த்ர கர்ப்பிதாயை ப்ரதிஷ்டா கலாயை நம.'' என்று அர்ச்சித்து, ''ஓம் ஹாம் ஹ்வீம் ஹாம் ப்ரதிஷ்டா கலாயை நம: என்று குண்டத்தில் ஆதார சக்தியிடம் அக்கலையைச் சேர்த்து, அர்ச்சித்து. ''ஓம் ஹாம் ஹ்வீம் ஹார் ப்ரதிஷ்டா கலாயை ஸ்வாஹா'' என்று மூன்று ஆகுதிகள் கொடுக்க. பாச சூத்திரத்தில் மல கர்ம மாயா ரூப போக்த்ருத்வ போக சரீராதி ஜனனத்தைச் சிந்தித்து. ''ஓம் ஹாம் விஷ்ணவே நம: என்று அர்ச்சித்து. ''ஓம் ஹாம் விஷ்ணவே ஸ்வாஹா: என்று மூன்று ஆகுதிகள் கொடுக்க. ''ஓம் ஹ்வீம் ப்ரதிஷ்டா கலா வியாபக சமஸ்த யோநிப்[4]யாம் நம: என்று குண்டத்தில் அர்ச்சித்து, வாகீசுவரி வாகீசுவரர்களைப் பூசித்து, மூன்று ஆகுதிகள் கொடுக்க. பிரேத சிஷ்யனின் மார்பில், ''ஓம் ஹ: ஹூம்பட்'' என்று புஷ்பதாடனம் செய்து. ஆத்ம மந்திரத்தால் ஆன்மாவைப் பிரித்துப் பிரேதத்தின் துவாதசாந்தத்துக்குக் கொண்டுபோய்த் தன் இருதயத்துக்குக் கொண்டு வந்து, மூலமந்திரத்தால் தன் துவாத சாந்தத்

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

துக்குக் கொண்டு சென்று வாகீசுவரரால் வாகீசுவரியின் கர்ப்ப நாடியில் விடப்பட்டதாகச் சிந்தித்து, "ஓம் ஹாம் ஹம் ஹாம் ஆத்மநே நம: என்று பிரதிஷ்டா கலா வியாபக சமஸ்த யோனிகளிலும் ஏககாலத்தில் சம்யோகம் பாவித்து, மூலமந்திரத்தால் அர்ச்சித்து, ஆத்ம மந்திரத்தால் மூன்று ஆகுதிகள் கொடுத்து, இந்த ஆன்மாவை எல்லா யோனிகளிலும் ஏக காலத்தில் சம்யோகம் செய்தருளுவீராக" என்று விஷ்ணுவிடம் பிரார்த்தித்து மூலமந்திரத்தால் மூன்று ஆகுதிகள் கொடுக்க. சம்யோகமான ஆன்மா ஜனனமாதற்பொருட்டு மூன்றும் ஜனனம் பெற்ற சமஸ்த சரீரங்களிலும் கர்மாநுபவம் வரும் பொருட்டு மூன்றும், அநுபவத்துக்குரிய சுகதுக்கமோக மயமான போகத்தைப் பாவித்து மூன்றும், ஆக ஒன்பது ஆகுதிகள் மூல மந்திரத்தால் கொடுத்துப் பிரதிஷ்டா கலா தத்துவ சுத்தியாக மூலமந்திரத்தால் மூன்று ஆகுதிகள் கொடுத்து ஜாதி ஆயுர் போக சமஸ்கார சுத்தியின் பொருட்டு, "ஓம் ஹூம் சிரஸே ஸ்வாஹா" என்றும், மூலமந்திரத்தாலும் மும்மூன்று ஆகுதிகள் கொடுக்க. ஆன்மா போகங்களில் நீங்கி மாயாபாசத்திலிருந்து வெளிப்பட்டதாகப் பாவித்து. "ஓம் ச்லீம் பம் சும் ஹூம்பட் பாசுபதாஸ்த்ராய நம என்றும், சிவ மூலமந்திரத்தாலும் பப்பத்து ஆகுதிகள் கொடுக்க. கத்தரிக்கு நாற்சுத்தி செய்து எடுத்து, "ஓம் ஹௌம் ஹ்வீம் ஹௌம் ப்ரதிஷ்டா கலா பாசாயை ஹ: ஹூம்பட்" என்று பாச சூத்திரத்தில் பிரதிஷ்டா கலா பாசம் வரை கத்தரித்துச் சுருட்டிச் சிருக்கில் நெய்யுடன் வைத்து, "ஓம் ஹ்வீம் ப்ரதிஷ்டா கலாயை ஸ்வாஹா" என்று ஹோமம் செய்து, "ஓம் ஹ: அஸ்த்ராய ஹூம்பட்" என்று மூன்று ஆகுதிகளும், "ஓம் ஹாம் விஷ்ணவே ஸ்வாஹா" என்று மூன்று ஆகுதிகளும், "ஓம் ஹாம் விஷ்ணோரஸ சுல்கம் க்[3]ரஹாண ஸ்வாஹா" என்று மூன்று ஆகுதிகளும் கொடுத்து, விஷ்ணுவே! இந்த ஆன்மா அழிவில்லாத பதவியை அடைய வேண்டும். அதற்கு நீர் உதவி செய்வீராக. இது பரமேசுவரரது ஆணை" என்று விண்ணப்பித்து விஷ்ணுவை ஒடுக்குக. "ஓம் ஹாம் ஹம் ஹாம் ஆத்மநே நம:" என்று ஆத்மாவை அக்நியிலிருந்து எடுத்துச் தன் இருதயத்துக்குக் கொண்டு வந்து சிஷ்யனது சூத்திர தேகத்தில் வைத்து, "ஓம் ஹாம் ஹௌம் சிவாய வௌஷட்"

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

என்று அர்க்கிய ஜலத்தைச் சிஷ்ய சிரசில் புரோக்ஷித்து வாகீசுவரி வாகீசுவரர்களை ஒடுக்கிப் பூரணாகுதி கொடுக்க.

வித்யா கலா சுத்தி:-

"ஓம் ஹ்வீம் ஹ்ரூம் ப்ரதிஷ்டா வித்³யா கலாப்⁴யாம் நம" என்று பாச சூத்திரத்தில் அர்ச்சித்து, "ஓம் ஹ்வீம் ஹ்ரூம்வித்³யாகலாப்⁴யாம்ஸ்வாஹா"என்றுமூன்று ஆகுதிகள் கொடுத்து, வித்யாகலையில் பிரதிஷ்டா கலை ஒடுங்கியதாகப் பாவிக்க. பாசசூத்திர இருதயத்தில் "ஓம் ஹ்ரூம் தத்வ பு³வந வர்ண பத மந்த்ர கர்ப்பிதாயை வித்³யா கலாயை நம:" என்று அர்ச்சித்து, "ஓம் ஹாம் ஹ்ரூம் ஹாம் வித்³யா கலாயை நம:" என்று குண்டத்தில் ஆதார சக்தியிடம் அக்கலையைச் சேர்த்து அர்ச்சித்து, "ஓம் ஹாம் ஹ்ரூம் ஹாம் வித்³யா கலாயை ஸ்வாஹா' என்று மூன்று ஆகுதிகள் கொடுக்க. பாச சூத்திரத்தில் மல கர்ம மாயா ரூப போக்த்ருத்வ போக சரீராதி ஜனனத்தைச் சிந்தித்து. "ஓம் ஹாம் ருத்³ராய நம:" என்று அர்ச்சித்து, 'ஓம்ஹாம்ருத்³ராயஸ்வாஹா"என்றுமூன்று ஆகுதிகள் கொடுக்க. 'ஓம் ஹாம் வித்³யா கலா வியாபக சமஸ்த யோநிப்⁴யாம் நம:" என்று குண்டத்தில் அர்ச்சித்து, வாகீசுவரி வாகீசுவரர்களைப் பூசித்து, மூன்று ஆகுதிகள் கொடுக்க. பிரேத சிஷ்யனின் மார்பில் "ஓம் ஹ: ஹூம்பட்" என்று புஷ்பதாடனம் செய்து, ஆத்ம மந்திரத்தால் ஆன்மாவைப் பிரித்துப் பிரேதத்தின் துவாத சாந்தத்துக்குக் கொண்டுபோய்த் தன் இருதயத்துக்குக் கொண்டுவந்து, மூல மந்திரத்தால் தன் துவாத சாந்தத்துக்குக் கொண்டு சென்று, வாகீசுவரரால் வாகீசுவரியின் கர்ப்ப நாடியில் விடப்பட்டதாகச் சிந்தித்து, "ஓம் ஹாம் ஹம் ஹாம் ஆத்மநே நம." என்று வித்யா கலா வியாபக சமஸ்த யோநிகளிலும் ஏக காலத்தில் சம்யோகம் பாவித்து, மூலமந்திரத்தால் அர்ச்சித்து ஆத்ம மந்திரத்தால் மூன்று ஆகுதிகள் கொடுத்து, "இந்த ஆன்மாவை எல்லா யோநிகளிலும் ஏககாலத்தில் சம்யோகம் செய்தருளுவீராக" என்று ருத்ரரிடம் பிரார்த்தித்து. மூல மந்திரத்தால் மூன்று ஆகுதிகள் கொடுக்க. சம்யோகமான ஆன்மா ஜனனமாதற்பொருட்டு மூன்றும், ஜனனமான எல்லாச் சரீரங்களிலும் கர்மாநுபவம் உண்டாதற்பொருட்டு

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

மூன்றும், சுக துக்க மோகமயமான போகத்தைப் பாவித்து மூன்றும், ஆக ஒன்பது ஆகுதிகள் மூலமந்திரத்தால் கொடுக்க. வித்யா கலா தத்துவ சுத்தியாக ஹிருதய மந்திரத்தால் மூன்று ஆகுதிகளும், ஜாதி ஆயுர் போக சமஸ்கார சுத்தியின் பொருட்டு, "ஓம் ஹூம் சிக²ாயை ஸ்வாஹா" என்றும் மூலமந்திரத்தாலும் மும்மூன்று ஆகுதிகள் கொடுக்க. ஆன்மா போகங்களில் நீங்கி மாயாபாசத்திலிருந்து வெளிப்பட்டதாகப் பாவித்து, "ஓம் ச்லீம் பம் சும் ஹூம்பட் பாசுபதாஸ்த்ராய நம:" என்றும் மூலமந்திரத்தாலும் பப்பத்து ஆகுதிகள் கொடுத்துக் கத்தரிக்கு நாற்சுத்தி செய்து எடுத்து: "ஓம் ஹௌம் ஹ்ரூம் ஹௌம் வித்³யா கலா பாசாயை ஹ: ஹூம்பட்" என்று வித்யா கலா பாசம் வரை கத்தரித்துச் சுருட்டிச் சிருக்கில் நெய்யுடன் வைத்து, "ஓம் ஹ்ரூம் வித்³யா கலாயை ஸ்வாஹா" என்று ஹோமம் செய்து, "ஓம் ஹ: அஸ்த்ராய ஹூம்பட்" என்றும், "ஓம் ஹாம் ருத்³ராயஸ்வாஹா:" என்றும் மும்மூன்று ஆகுதிகள் கொடுக்க "ஓம் ஹாம் ருத்³ரோ ரூப க³ந்த சுல்கம் க்³ரஹாண ஸ்வாஹா" என்று மூன்று ஆகுதிகள் கொடுத்து, "ருத்ரரே! இந்த ஆன்மா அழிவில்லாத பதவியை அடையவேண்டும். அதற்கு நீர் உதவி செய்வீராக. இது பரமேசுவரரது ஆணை" என்று விண்ணப்பித்து, ருத்ரனை ஒடுக்குக. "ஓம் ஹாம் ஹம் ஹாம் ஆத்மநே நம" என்று ஆத்மாவை அக்நியிலிருந்து எடுத்துத் தன் இருதயத்துக்குக் கொண்டு வந்து சிஷ்யனது சூத்திர தேகத்தில் வைத்து, "ஓம் ஹாம் ஹௌம் சிவாய வௌஷட்" என்று அர்க்கிய ஜலத்தைச் சிஷ்ய சிரசில் புரோக்ஷித்து வாகீசுவரி வாகீசுவரர்களை ஒடுக்கிப் பூரணுகுதி கொடுக்க.

சாந்திகலா சுத்தி:-

சூக்கும தேக சுத்தியின் பொருட்டும், மல கர்ம நிவிர்த்தியின் பொருட்டும் மூலமந்திரத்தால் முப்பது ஆகுதிகள் கொடுக்க. 'ஓம் ஹ்ரூம் ஹைம் வித்³யா சாந்தி கலாப்⁴யாம் நம:" என்று பாச சூத்திரத்தில் அர்ச்சித்து, "ஓம் ஹ்ரூம் ஹைம் வித்³யா சாந்தி கலாப்⁴யாம் ஸ்வாஹா" என்று மூன்று ஆகுதிகள் கொடுத்துச் சாந்தி கலையில் வித்யாகலை அடங்கியதாகப் பாவிக்க

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

பாச சூத்திரப் புகுவ நடுவில் "ஓம் ஹைம் தத்வ பு³வந வர்ண பத மந்த்ர கர்ப்பிதாயைசாந்தி கலாயை நம:" என்று அர்ச்சித்து, "ஓம் ஹாம் ஹைம் ஹாம் சாந்தி கலாயை நம" என்று குண்டத்தில் ஆதாரசக்தியிடம் அக்கலையைச் சேர்த்து அர்ச்சித்து, "ஓம் ஹாம் ஹைம் ஹாம் சாந்தி கலாயை ஸ்வாஹா" என்று மூன்று ஆகுதிகள் கொடுக்க. பாச சூத்திரத்தில் அதிகார மல சுத்த கர்ம மஹா மாயா ரூப போகத்ருத்வ போக சரீராதி ஜனனத்தைச் சிந்தித்து, "ஓம் ஹாம் மஹேச்வராய காரணேச்வராய நம:" என்று பூசித்து, "ஓம் ஹாம் மஹேச்வராய காரணேச்வராய ஸ்வாஹா" என்று மூன்று ஆகுதிகள் கொடுக்க. "ஓம் ஹாம் சாந்தி கலா வியாபக சமஸ்த யோநிப்⁴யாம் நம:" என்று குண்டத்தில் அர்ச்சித்து. வாகீசுவரி வாகீசுவரர்களைப் பூசித்து, மூன்று ஆகுதிகள் கொடுக்க. பிரேத சிஷ்யனின் மார்பில் "ஓம் ஹ: ஹூம் பட்" என்று புஷ்பதாடனம் செய்து ஆத்ம மந்திரத்தால் ஆன்மாவைப் பிரித்துப் பிரேதத்தின் துவாதசாந்தத்துக்குக் கொண்டு போய்க் தன் இருதயத்துக்குக் கொண்டு வந்து, மூல மந்திரத்தால் தன் துவாதசாந்தத்துக்கு கொண்டு சென்று, வாகீசுவரரால் வாகீசுவரியின் கர்ப்ப நாடியில் விடப்பட்டதாகச் சிந்தித்து, "ஓம் ஹாம் ஹம் ஹாம் ஆத்மநே நம:" என்று சாந்தி கலா வியாபக சமஸ்த யோநிகளிலும் ஏக காலத்தில் சம்யோகம் பாவித்து, மூலமந்திரத்தால் அர்ச்சித்து, ஆத்ம மந்திரத்தால் மூன்று ஆகுதிகள் கொடுத்து, "இந்த ஆன்மாவை எல்லா யோநிகளிலும் ஏக காலத்தில் சம்யோகம் செய்தருளுவீராக" என்று மகேசுவரரைப் பிரார்த்தித்து, மூலமந்திரத்தால் மூன்று ஆகுதிகள் கொடுக்க சம்யோகமான ஆன்மா ஜனனமாதற் பொருட்டுமூன்றும், ஜனனமான எல்லாச் சரீரங்களிலும் கர்மாநுபவம் உண்டாதற் பொருட்டு மூன்றும், சுக துக்க மோக மயமான போகத்தைப் பாவித்து மூன்றும் ஆக ஒன்பது ஆகுதிகள் மூலமந்திரத்தால் கொடுக்க. திரும்பவும் பிறவாமல் இருப்பதன் பொருட்டுச் சாந்தி தத்துவ சுத்தியாக இருதய மந்திரத்தால் மூன்று ஆகுதிகளும், ஜாதி ஆயுர்போக சமஸ்கார சுத்தியின் பொருட்டுக் கவச மந்திரத்தாலும் மூலமந்திரத்தாலும் மும்மூன்று ஆகுதிகளும் கொடுக்க. ஆன்மா போகங்களிலிருந்து நீங்கி மாயாபா

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

சத்திலிருந்து வெளிப்பட்டதாகப் பாவித்து மூலமந்திரத்தால் பத்து ஆகுதிகளும், மலகர்மங்களிலிருந்து பிரிவதன் பொருட்டு மூன்று ஆகுதிகளும் கொடுக்க. கத்தரிக்கு நாற் சுத்தி செய்து எடுத்து "ஓம் ஹௌம் ஹைம் ஹௌம் சாந்தி கலா பாசாயை ஹ: ஹூம்பட்" என்று பாச சூத்திரத்தில் சாந்திகலா பாசம் வரை கத்தரித்துச் சுருட்டிச் சிருக்கில் நெய்யுடன் வைத்து "ஓம் ஹைம் சாந்திகலாயை ஸ்வாஹா" என்று ஹோமம் செய்து, "ஓம் ஹ: அஸ்த்ராய ஹூம்பட்" என்று மூன்று ஆகுதிகளும், "ஓம் ஹாம் மஹேச்வராய காரணேச்வராய ஸ்வாஹா" என்று மூன்று ஆகுதிகளும் 'ஓம் ஹாம் மஹேச்வர பு[3]த்தி[4] அஹங்கார சுல்கம் க்[3]ரஹாண ஸ்வாஹா" என்று மூன்று ஆகுதிகளும் கொடுத்து, "மஹேச்வரரே! இந்த ஆன்மா அழிவில்லாத பதவியை அடைய நீர் உதவி செய்வீராக. இது பரமேசுவரரது ஆணை" என்று விண்ணப்பித்து மஹேச்வரரை ஒடுக்குக. "ஓம் ஹாம் ஹம் ஹாம் ஆத்மநே நம" என்று ஆத்மாவை அக்நியிலிருந்து எடுத்துத் தன் இருதயத்துக்குக் கொண்டுபோய்ச் சிஷ்யனது சூத்திர தேகத்தில் வைத்து, வௌஷடந்த சிவமூல மந்திரத்தால் அர்க்கிய ஜலத்தைச் சிஷ்ய சிரசில் புரோக்ஷித்து, வாகீசுவரி வாகீசுவரர்களை ஒடுக்கிப் பூரணாகுதி கொடுக்க.

சாந்த்யதீத கலா சுத்தி:-

"ஓம் ஹைம் ஹௌம் சாந்தி சாந்த்யதீத கலாப்[4]யாம் நம" என்று பாச சூத்திரத்தில் அர்ச்சித்து. "ஓம் ஹைம் ஹௌம் சாந்தி சாந்த்யதீத கலாப்[4]யாம் ஸ்வாஹா" என்று மூன்று ஆகுதிகள் கொடுத்துச் சாந்த்யதீத கலையில் சாந்திகலை அடங்கியதாகப் பாவிக்க. பாச சூத்திரச் சிரசில், 'ஓம் ஹௌம் தத்வ பு[3]வந வர்ண பத மந்த்ர கர்ப்பிதாயை சாந்த்யதீத கலாயை நம:" என்று அர்ச்சித்து, "ஓம் ஹாம் ஹௌம் ஹாம் சாந்த்யதீத கலாயை நம:" என்று குண்டத்தில் ஆதார சக்தியிடம் அக்கலையைச் சேர்த்து, அர்ச்சித்து, "ஓம் ஹாம் ஹௌம் ஹாம் சாந்த்யதீத கலாயை ஸ்வாஹா" என்று மூன்று ஆகுதிகள் கொடுக்க பாசசூத்திரத்தில் அதிகார மல விசுத்த கர்ம மஹா மாயா ரூப போக்த்ருத்வ போக சரீராதி ஜனனத்தைச் சிந்தித்து, 'ஓம் ஹாம் ஸத[3]ாசிவாய காரணேச்வ

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

ராய நம'' என்று பூசித்து, ''ஓம் ஹாம் ஸத³ாசிவாய காரணேச்வராய ஸ்வாஹா'' என்று மூன்று ஆகுதிகள் கொடுக்க. ''ஓம் ஹாம் சாந்த்யதீத கலா வியாபக சமஸ்த யோநிப்⁴யாம் நம:'' என்று குண்டத்தில் அர்ச்சித்து வாகீசுவரி வாகீசுவரர்களைப் பூசித்து மும்மூன்று ஆகுதிகள் கொடுக்க. பிரேத சிஷ்யனின் மார்பில், ''ஓம் ஹ: ஹூம்பட்'' என்று புஷ்பதாடனம் செய்து ஆத்ம மந்திரத்தால் ஆன்மாவைப் பிரித்துப் பிரேதத்தின் துவாதசாந்தத்துக்குக் கொண்டு போய்த் தன் இருதயத்துக்குக் கொண்டு வந்து மூலமந்திரத்தால் தன் துவாத சாந்தத்துக்குக் கொண்டு சென்று வாகீசுவரரால் வாகீசுவரியின் கர்ப்ப நாடியில் விடப்பட்டதாகச் சிந்தித்து, ஆத்ம மந்திரத்தால் எல்லா யோநிகளிலும் ஏக காலத்தில் சம்யோகம் பாவித்து மூலமந்திரத்தால் அர்ச்சித்து ஆத்ம மந்திரத்தால் மூன்று ஆகுதிகள் கொடுத்து, ''இந்த ஆன்மாவை எல்லா யோநிகளிலும் ஏக காலத்தில் சம்யோகம் செய்தருளுவீராக'' என்று சதாசிவரிடம் பிரார்த்தித்து மூல மந்திரத்தால் மூன்று ஆகுதிகள் கொடுக்க. சம்யோகமான ஆன்மா ஜனனமாகிச் சுகதுக்க வேதனாத்மகமான போகங்களில் லயமாவதைப் பாவித்து, மூலமந்திரத்தால் மூன்று ஆகுதிகளும், போகத்துக்குக் காரணமான கர்மங்களைப் புசித்திருந்தாலும் மீளவும் பிறவாமலிருப்பதற்காகச் சாந்தியதீத கலா சுத்தியாக ஹ்ருதயத்தால் மூன்று ஆகுதிகளும், ஜாதி ஆயுர் போக சம்ஸ்காராதி சுத்தியாக மூலமந்திரத்தால் மூன்று ஆகுதிகளும், போகங்களில்லாமல் மகா மாயா பாசத்தினின்றும் பிரிவதற்காக மூலமந்திரத்தால் மூன்று ஆகுதிகளும் கொடுத்து, அதிகார மலம் திரோதானமாவதற்குப் பத்தும், மாயாபாசம் பிரிவதற்கு மூன்றும், கர்ம பாசம் பிரிவதற்கு மூன்றும் ஆகப் பதினாறு ஆகுதிகள் மூலமந்திரத்தால் கொடுக்க. கத்தரிக்கு நாற்சுத்தி செய்து எடுத்து, ''ஓம் ஹாம் ஹெளம் ஹாம் சாந்த்யதீத கலா பாசாயை ஹ: ஹூம்பட்'' என்று பாசசூத்திரத்தில் சாந்த்யதீத கலா பாசம் வரை கத்தரித்துச் சுருட்டிச் சிருக்கில் நெய்யுடன் வைத்து, ''ஓம் ஹெளம் சாந்த்யதீத கலாயை ஸ்வாஹா'' என்று ஹோமம் செய்து பாசாங்குர நிவர்த்தியாக ஹூம்படந்த அஸ்த்ர மந்திரத்தால் மூன்று ஆகுதிகளும், பிராயச்சித்த

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

மாக ஸ்வாஹாந்த அஸ்த்ர மந்திரத்தால் மூன்று ஆகுதிகளும் கொடுத்து, ஆன்மாவுக்குச் சர்வ சரீரங்களுமில்லாமல் நீங்கியதாகப் பாவித்து, "ஓம் ஹாம் காரணேச்வராய ஸத³ாசிவாய ஸ்வாஹா" என்று மூன்று ஆகுதிகளும், புரியட்டக தேக சுத்தியாக, "ஓம் ஹாம் ஸத³ாசிவாய மநோ பி³ந்து³ சுல்கம் க்³ரஹாண ஸ்வாஹா" என்று மூன்று ஆகுதிகளும் கொடுத்து, "சதாசிவரே! இந்த ஆன்மாவுக்குச் சாந்தியதீத கலா பாசத்தினின்றும் விடுதலை கொடுத்து அழிவில்லாத பதவியை அடைய உதவி செய்வீராக. இது பரமேசுவரரது ஆணை." என்று சதாசிவரிடம் பிரார்த்தித்து, மூலமந்திரத்தால் மூன்று ஆகுதிகள் கொடுத்துச் சதாசிவரை ஒடுக்குக. ஆத்ம மந்திரத்தால் ஆன்மாவை அக்நியிலிருந்து எடுத்துத் தன் இருதயத்துக்குக் கொண்டு வந்து சிஷ்யனது சூத்திர தேகத்தில் சேர்த்து வௌஷடந்த சிவமூல மந்திரத்தால் அர்க்கிய ஜலத்தைச் சிஷ்ய சிரசில் புரோக்ஷித்து வாகீசுவரி வாகீசுவரர்களை ஒடுக்கிப் பூரணகுதி கொடுக்க.

சிகாச் சேதம்:-

"ஓம் ஹாம் ஹௌம் ஹௌம் ஹாம் சாந்த்யதீதா சாந்திப்⁴யாம் நம:" என்று சாந்தி சாந்தியதீத கலைகளைச் சிகா ரூபமான திரோதான சக்தியுடன் கூட்டி, ஆத்மவித்யா சிவதத்துவங்களைப் பாச சூத்திரத்தில் ஸ்தாபித்து, மூலமந்திரத்தால் பத்து ஆகுதிகள் கொடுத்து, "ஓம் ஹாம் திரோதான சக்தயே ஸ்வாஹா" என்று பத்து ஆகுதிகள் கொடுக்க. கத்தரிக்கு நாற்சுத்தி செய்து, எடுத்து, "ஓம் ஹூம் சிகாயை ஹ: ஹூம்பட்" என்று பாசசூத்திரத்தைச் சிகையுடன் கத்தரித்துச் சாணத்தில் வைத்து மூடி, உருட்டி. "ஓம் ஹூம் சிக²ாயை ஸ்வாஹா" என்று ஹோமம் செய்து சிஷ்யனுக்குச் சிவசொரூபம் உண்டாகப் பிரார்த்தித்து மூலமந்திரத்தால் பத்து ஆகுதிகள் கொடுக்க. சிஷ்யனை அஸ்திர மந்திரத்தால் புரோக்ஷித்துப், புஷ்பதாடனம் செய்து. பூரணகுதி கொடுக்க.

"ஓம் ஹாம் ஆத்மந் ஸர்வஜ்³ஞோப⁴ வஸ்வாஹா
ஓம் ஹீம் ஆத்மந் பரித்ருப் தோப⁴வ ஸ்வாஹா
ஓம் ஹூம் ஆத்மந் அநாதி³ போ³தே⁴ாப⁴வ ஸ்வாஹா
ஓம் ஹைம் ஆத்மந் ஸ்வதந்த்ரோப⁴வ ஸ்வாஹா

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

ஓம் ஹௌம் ஆத்மந் அலுப்தசக்திர்ப⁴வ ஸ்வாஹா
ஓம் ஹ: ஆத்மந் அநந்தசக்திர்ப⁴வ ஸ்வாஹா''

என்று சிவபெருமானது ஷட் குணங்கள் சிஷ்ய ஆன்மாவுக்குச் சித்திக்கும் பொருட்டுப் பிரார்த்தித்துப் பிராயச் சித்தமாக அஸ்திர மந்திரத்தால் பத்து ஆகுதிகள் கொடுத்துக் கும்பசிவத்தைக் குண்ட சிவத்துடன் கூட்டி ஒடுக்கித், திக்குப் பாலகர்கள், யாகவர்த்தனி, தசாயுதங் களையும் அர்ச்சித்து ஒடுக்குக.

அஸ்தி சஞ்சயனம்

தகனம் செய்த மறுநாள் காலை மயானத்துச்குச் சென்று கர்த்தாவுக்குத் திருநீறு, பூணூல், பவித்திரம் கொடுத்து, ''மம ..... கோ³த்ரோத்³ப⁴வஸ்ய....... தீ³க்ஷா நாம .. ஆத்மந உத்³தே³ஸ்ய சிவாக³மோக்த ப்ரகாரேண அஸ்தி சஞ்ஜயந க்ரியாயாம் ஆசா¹ர்ய முகே²ந க்ரியா கர்த் தும் யோக்³யதா ஸித்⁴தி⁴ம் அநுக்³ர ஹாணும்'' என்று அநுக்ஞையும் சங்கற்பமும் செய்வித்து, ஆசாரியர் கணபதி, குரு வணக்கம், பிராணயாமம், அபசவ்ய சகளீகரணம் செய்து கொண்டு, விக்நேசுவர பூஜை, புண்ணியாவாசனம், அக்நி காரியம் செய்து, பிராயச்சித்தத்தின் பொருட்டு அஸ்திர மந்திரத்தால் பத்து ஆகுதிகள் கொடுத்து, ''ஓம் ஹாம் ப்ருதிவி தத்வாதி³ சிவதத்வாந்த ஷட்த்ரிம்சத் தத் வேப்⁴யோம் நம:'' என்று குண்டத்தில் அர்ச்சித்து, ''ஓம் ஹாம் ப்ருதிவி தத்வாதி³ சிவதத்வாந்த ஷட்த்ரிம்சத் தத்வேப்⁴ய ஸ்வாஹா'' என்று மூன்று ஆகுதிகள் கொடுத் துப், பூரணாகுதி செய்து, அக்நியை ஒடுக்கிச், சிதையில் பஸ்மமாகி இருக்கும் சரீரப் பாதம், நாபி, இருதயம், முகம், சிரசுகளிலிருந்து அஸ்திகளைச் சத்யோஜாதம் முதலிய மந்திரங்களால் எடுத்துப் பால் அல்லது தண்ணீர் உள்ள பாத்திரத்தில் வைத்துச் சமுத்திரம் அல்லது புண்ணிய நதி களில் வடக்கு நோக்கி நின்று தலைக்கு மேலே தூக்கிப் பின் புறமாக விழும்படி சேர்க்க.

பாஷாண ஸ்தாபனம்

இறந்த நாளிலிருந்து பத்தாவது நாளில் கர்த்தாவுக்கு வபனம் செய்வித்துத் திருநீறு கொடுத்தல் முதல் ஆசாரியர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

அக்நி காரியம் வரை செய்து கொள்க. ஒரு மேடையில் செங்கல் ஒன்று வைத்து, அதில் ஒரு சாண் நீளத்தில் ஏழு தர்ப்பைக் கூர்ச்சம் சாத்தி, அதன் முன்பு ஒரு கலசம் வைத்து, அவற்றில் இறந்தவரது தீட்சா நாமத்தால் அவரை ஆவாகனம் செய்து, கோத்திர நாமங்களுடன் "ஓம் ஹாம் ஹூம் ஹ்ராம் ஆத்மநே நம:" என்று அர்ச்சித்து வஸ்திரம், திருநீறு, சந்தனம், புஷ்பம் சாத்தித் தூபதீபம் கொடுக்க. இறந்த நாள் தொடங்கிப் பத்தாம் நாள் வரை காலை, மாலை இரண்டு வேளைகளிலும் வெல்லம், எள், நெய் சேர்ந்த அன்னத்தைக் காய்கறியுடன், "ப்ரதம தி^{3}ந ப்ராதக்கால பிண்டம் ஸ்வதா^{4}, ஸாயங்கால ப^{3}லிம் ஸ்வதா^{4}, என்பது முதலாக "த^{3}சம தி^{3}ந ஸாயங்கால ப^{3}லிம் ஸ்வதா^{4}" என்பது வரையுள்ள மந்திரங்களால் நிவேதித்துத் தாம்பூலம் கொடுக்க.

பாஷாண உத்தாபனம்

பத்தாம் நாள் நீர்த்துறையில் கர்த்தாவுக்குத் திருநீறு, பவித்திரம், பூணூல் கொடுத்து, ஆசாரியர் கணபதி, குரு வணக்கம், பிராணாயாமம், அபசவ்ய சகளீகரணம், விக்நேசுவர பூஜை, புண்ணியா வாசனம் செய்து, தர்ப்பையைப் பரப்பி, இறந்தவர் சமயம் அல்லது விசேட தீக்ஷிதரானால், "ஓம் ஹாம் சுத்தா^{4}த்மந் ஸ்கந்தோப^{4}வ திலோத^{3}கம் ஸ்வதா^{4}, ஓம் ஹாம் சுத்தா^{4}த்மந் ச^{1}ண்டோ^{3}ப^{4}வ திலோத^{3}கம் ஸ்வதா^{4}, ஓம் ஹாம் சுத்தா^{4}த்மந் க^{3}ணதீ^{3}சோப^{4}வ திலோத^{3}கம் ஸ்வதா^{4}" என்றும், நிருவாண தீக்ஷிதரானால், "ஓம் ஹாம் சுத்தா^{4}த்மந் ஈசோப^{4}வ திலோத^{3}கம் ஸ்வதா^{4}, ஓம் ஹாம் சுத்தா^{4}த்மந் ஸதா^{3}சிவோப^{4}வ திலோத^{3}கம் ஸ்வதா^{4}, ஓம் ஹாம் சுத்தா^{4}த்மந் சாந்தோப^{4}வ திலோத^{3}கம் ஸ்வதா^{4}" என்றும் தர்ப்பணம் செய்து, தண்ணீரில் முழங்கால் அளவில் வடக்கு முகமாக நின்று கும்பத்தை முன்னும் பாஷாணத்தைப் பின்னுமாகத் தலைக்கு மேல் தூக்கித் தெற்கில் விழும்படி சேர்த்து ஸ்நானம் செய்விக்க.

ருத்ர பலி

ஒரு கும்பம் வைத்து, அதில் ருத்திரமூர்த்தியை ஆவாகனாதிகள் செய்து முறைப்படி பூசித்துச் சுற்றிலும் பதினொரு

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

கும்பங்கள் வைத்து, (நடுவில் ஒன்று. வடகிழக்கு முதல் கிழக்கு வரை எட்டு. வடகிழக்குக்கும், கிழக்குக்கும் நடுவில் ஒன்று தென்மேற்குக்கும், மேற்குக்கும் நடுவில் ஒன்று) நடுக்கும்பத்தில் மகாதேவர், வடகிழக்குக் கும்பத்தில் ஹரர். வடக்குக் கும்பத்தில் ருத்ரர், வடமேற்குக் கும்பத்தில் சங்கரர், மேற்குக் கும்பத்தில் நீலலோஹிதர், தென்மேற்குக் கும்பத்தில் ஈசானர். தெற்குக் கும்பத்தில் விஜயர், தென்கிழக்குக் கும்பத்தில் பீமர், கிழக்குக் கும்பத்தில் தேவதேவர், தெற்கு - தென்மேற்குக் கும்பத்தில் பவோத்பவர், வடக்கு - வடகிழக்குக் கும்பத்தில் கபாலீசர் ஆகிய பதினொரு ருத்திரர்களையும் ஆசன மூர்த்தி மூலத்தால் அர்ச்சித்துத் தூப, தீப, நைவேத்தியம், கற்பூரம் செய்து தெற்கு நுனியாக ஒரு வாழை இலையில் இரண்டு தர்ப்பைகள் வைத்து, எள்ளைச் சிதறி, அரிசியில் வெல்லம், பழம், தேங்காய்த்துருவல் கலந்து, "ஓம் ஹாம் ஏகாத^{3}ச ருத்^{3}ரேப்^{4}யோ ஸ்வாஹா" என்று பலியிட்டு ஒரு பாத்திரத்தில், "ஓம் ஹாம் பித்ருப்^{4}ய ஸ்வதா^{4} ஓம் ஹாம் பிதாமஹேப்^{4}ய ஸ்வதா^{4} ஓம் ஹாம் ப்ரபிதாமஹேப்^{4}ய ஸ்வதா^{4}, ஓம் ஹாம் வ்ருத்த^{4} ப்ரபிதா மஹேப்ய ஸ்வதா^{4} ஓம் ஹாம் மாத்ருப்^{4}ய ஸ்வதா^{4} ஓம் ஹாம் பிதாமஹிப்^{4}ய ஸ்வதா^{4} ஓம் ஹாம் ப்ரபிதா மஹிப்^{4}ய ஸ்வதா^{4} ஓம் ஹாம் வ்ருத்த^{4} ப்ரபிதா மஹிப்^{4}ய ஸ்வதா, ஓம் ஹாம் ஸர்வேப்^{4}யோ பித்ருப்^{4}ய ஸ்வதா^{4}" என்று பலியிட்டு, பலிப்பொருள் இருந்த பாத்திரத்தைக் கவிழ்த்துப் பலியை அப்பிரதக்ஷிணமாக மூன்று முறை சுற்றித் தன் வலப்புறத்தில் தர்ப்பாசனத்தில் கவிழ்த்து நிமிர்த்தெடுத்து அதில் ஒரு அரிசியை முகர்ந்து கையலம்புவிக்க. ருத்திரர்களை அர்ச்சித்து ஒடுக்குக. ஒரு இலையில் இரண்டு தர்ப்பைகளை வைத்துத் தெற்கு நுனியாகக் கூர்ச்சம் போட்டு மேற்கண்ட "ஓம் ஹாம் பித்ருப்^{4}ய ஸ்வதா^{4}" முதலிய ஒன்பது மந்திரங்களாலும் எள்ளும் தண்ணீரும் கூட்டித் தர்ப்பணம் செய்வித்து ஸ்நானம் செய்விக்க.

ஏகோதிஷ்ட விதி

பதினொராம் நாள் கர்த்தாவுக்குத் திருநீறு கொடுத்தல் முதல் ஆசாரியர் கணபதி குரு வணக்கமாதி பஞ்சகவ்ய சேகரம் வரை செய்து கொள்க. ஆசனத்தில் மேற்கு

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

